Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 420 பிலவ வருடம், மார்கழி மாதம் 21ஆம் திகதி புதன்கிழமை (05.01.2022) ஹிஜ்ரி - 1443, ஜமா அத்துல் ஆகீர் - 01, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30

# அமைச்சரவைத் தீர்மானங்கள்

**03.01.2022ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள் பின்வருமாறு**




**01. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்துக்கும் சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவனத்துக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்ளல்**

அரிசி தொடர்பான அறிவியல் மற்றும் அதுசார்ந்த கற்கைத் துறைகளுக்கு ஏற்புடைய திறந்த மற்றும் தொலைதூரக் கற்றல் முறைக்குப் பொருத்தமான வகையிலான பாடநெறிகளை விருத்தி செய்தல், நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்தல், ஒன்றிணைந்த ஆய்வுக் கருத்திட்டங்களை நடத்துதல் மற்றும் கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்துதல், ஆராய்ச்சிகள், வெளியீடுகள் மற்றும் ஏனைய தகவல்களைப் பரிமாற்றிக் கொள்ளல் போன்ற செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு 2017 ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி இலங்கை திறந்த பல்கலைக் கழகத்துக்கும் சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவனத்துக்கும் இடையில் பரஸ்பர ஒத்துழைப்புகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த புரிந்துணர்வு ஒப்பந்த காலத்தை மேலும் 03 வருடங்களுக்கு நீடித்து புதிய புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடுவதற்காக இருதரப்பினர்களுக்கும் இடையில் உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. அதற்கமைய, குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. இந்தியாவின் கடனுதவித் திட்டத்தின் கீழ் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 32 ஆசனங்கள் கொண்ட 500 பஸ்களைக் கொள்வனவு செய்தல்**

இந்தியாவின் கடனுதவித் திட்டத்தின் கீழ் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 32 – 35 ஆசனங்கள் கொண்ட 500 பஸ்களைக் கொள்வனவு செய்வதற்காக 2020 ஜனவரி மாதம் 08 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதற்கமைய, பஸ்களைக் கொள்வனவு செய்வதற்காக முற்கூட்டிய தகைமைகளைக் கொண்ட 03 நிறுவனங்களிடமிருந்து போட்டி விலைமுறிகள் கோரப்பட்டுள்ளன. குறித்த விலைமுறிகளின் மதிப்பாய்வின் பின்னர், அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கமைய 32 ஆசனங்களைக் கொண்ட 500 பஸ்களைக் கொள்வனவு செய்வதற்காக இந்தியாவின் அசோக் லேலண்ட் கம்பனிக்கு வழங்குவதற்கு போக்குவரத்து அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. கூட்டுறவு சதுக்க கட்டுமானக் கருத்திட்டத்தின் ஆலோசனை சேவைகள் ஒப்பந்தம் வழங்கல்**

கூட்டுறவுச் சதுக்கம் எனும் பெயரிலான கூட்டுறவு வர்த்தக நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக 2021 ஆகஸ்ட் மாதம் 02ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தின் கீழ் அனைத்துத் துறைகளுக்குமான ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஆலோசனைச் சேவை நிறுவனமொன்றைத் தெரிவு செய்வதற்காக தேசிய போட்டி விலைமுறிக் கோரலின் கீழ் விருப்பம் தெரிவித்த 07 நிறுவனங்கள் பட்டியல்படுத் தப்பட்டுள்ளது. அவற்றில் 06 நிறுவனங்கள் குறித்த விலைமுறிக்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளன. அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள ஆலோசனைப் பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய குறித்த ஆலோசனைச் சேவைகளுக்கான ஒப்பந்தத்தை மிஹிந்து கீர்த்திரத்ன அசோசியேட்ஸ் கம்பனிக்கு வழங்குவதற்காக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. உட்சுற்றுப் பாவனைக்காக ஹியூமன் இம்மியூனோக்குளோபின் 75,000 பிபீ 5-6 கிராம் கொண்ட மருந்து விநியோகத்துக்கான பெறுகை**

உயிராபத்து நோய்நிலைமைகளின்போது நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் ஹியூமன் இம்மியூனோக்குளோபின் 75,000 பிபீ 5-6 கிராம் மருந்துக் குப்பிகளைக் கொள்வனவு செய்வதற்காக சர்வதேச போட்டி விலைமுறிகள் கோரப்பட்டுள்ளன. அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய குறித்த விலைமனுக்கோரல் இந்தியாவின் ரிலயன்ஸ் லயிஃப் சயன்ஸ் தனியார் கம்பனிக்கு வழங்குவதற்கு சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. மெரோபனம் (Meropenem) ஊசிமருந்து 1 கிராம் கொண்ட 1,800,000 மருந்துக் குப்பிகள் விநியோகத்துக்கான பெறுகை**

பக்றீறியாக்கள் மூலம் ஏற்படும் சுவாச நோய்த்தொற்றுக்கள் உள்ளிட்ட பல்வேறு தொற்றுக்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக மெரோபனம் (Meropenem) ஊசிமருந்துகள் 1 கிராம் கொண்ட 1,800,000 மருந்துக் குப்பிகளை கொள்வனவு செய்வதற்காக சர்வதேச போட்டி விலைமுறிகள் கோரப்பட்டுள்ளன. அதற்கமைய, 03 விலைமுறிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய மொத்த ஊசிமருந்துத் தேவைகளின் 25 வீதத்தை விநியோகிப்பதற்காக விபரமாகப் பதிலளித்துள்ள குறைந்த விலைமுறியான இந்தியாவின் வீனஸ் ரெமடீஸ் கம்பனிக்கு வழங்குவதற்கும் ஊசிமருந்தின் செயற்றிறன் தொடர்பான இறுதிப் பரிசோதனையின் பரிந்துரைகளின் அடிப்படையில் எஞ்சிய 75 வீதமான கொள்வனவை வழங்குவது தொடர்பாக தீர்மானிப்பதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. இலங்கைப் பொலிஸ் திணைக்களத்துக்கு 750 ஜீப் வண்டிகளைக் கொள்வனவு செய்தல்**

பொலிஸ் விசேட அதிரடிப்படைக்கு 150 ஜீப் வண்டிகள் உள்ளடங்கலாக இலங்கை பொலிஸ் திணைக்களத்துக்கு 750 ஜீப் வண்டிகளை இந்தியாவின் கடனுதவித் திட்டத்தின் (Indian Line of Credit ) கீழ் கொள்வனவு... 02 பக்கம்

# தனியார்துறையில் சம்பள அதிகரிப்புக்கு கோரிக்கை

அரசதுறையைப் போன்று தனியார்துறையினருக்கும் சட்டத்தின் ஊடாக சம்பளத்தை அதிகரிக்குமாறு தொழிற்சங்கங்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன.

சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொதுச் சேவைகள் ஊழியர் சங்கத்தின் இணைச் செயலாளர் அன்டன் மார்க்கஸ், அரச ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்துவதற்கான உத்தரவுகளை மட்டும் பிறப்பிப்பதன் மூலம் எதிர்பார்த்த முடிவுகளைப் பெற முடியாது என்றார். 02 பக்கம்

**கமெண்ட் கந்தர்..**




# விமர்சிப்போர் வெளியேறலாம்!

**கெபினெட் கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டா பகிரங்க அறிவிப்பு**



அரசாங்கத்தை விமர்சிக்கும் ஆளுங்கட்சி அரசியல்வாதிகள் தமது பதவிகளை துறந்துவிட்டு அதனை செய்யலாம். ஆனால், அரசுக்குள் இருந்துகொண்டே அரசை விமர்சிப்பதில் நியாயமில்லை. அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. அரசாங்கத்தின் செயற்பாடுகளை உள்ளிருந்துகொண்டே விமர்சிப்போரை பதவிகளில் இருந்து நீக்க முழு அதிகாரமும் எனக்கு உண்டு.

இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஆவேசமாக தெரிவித்துள்ளார். 2022ஆம் ஆண்டின்... 02 பக்கம்



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்றுக் காலை திருகோணமலை வரலாற்றுச் சிறப்புமிக்க கோணேஸ்வரம் ஆலயத்துக்கு சென்று சமய நிகழ்வுகளில் கலந்து கொண்டார்.

# உளவுத் தகவல்கள் பரிமாற்றத்துக்காக கொழும்பில் அமைந்த தாமரைக்கோபுரம்

**இலங்கையில் சீனாவின் செயற்பாடுகளை விமர்சித்து அந்நாட்டு ஜனாதிபதிக்கு விஜயதாச ராஜபக்ஷ எம்.பி. காரசார கடிதம்**



இலங்கைக்கான சீனத் தூதுவர் ஊடாக சீன ஜனாதிபதி ஷீ ஷின்பின்னுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ள ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ஷ எம்.பி., 26 பில்லியன் ரூபா செலவழித்து நிர்மாணிக்கப்பட்ட கொழும்பு தாமரைக் கோபுரம், உலகத்தை கைப்பற்றும் சீனாவின் முயற்சியின்போது உளவுத் தகவல்களை அனுப்ப பயன்படுத்தும்நோக்கு கொண்டதென கடுமையாக சாடியுள்ளார். 02 பக்கம்

# சுசிலை பதவியிலிருந்து நீக்குவது நாட்டின் பிரச்சினைக்கு தீர்வாகாது

**சுதந்திரக் கட்சியின் தலைமையில் விரைவில் ஆட்சியென்கிறார் மைத்ரி**

*•மஸாஹிம் - மாத்தளை நிருபர்*



அரசில் இடம்பெறும் தவறுகளை சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவை பதவியிலிருந்து நீக்கிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இதைவிட மோசமான நிலையில், அரசாங்கத்தையும் அதன் தற்போதைய நிலைமையையும் விமர்சனம் செய்த பிரதியமைச்சர் நிமல் லன்சாவை, பதவி நீக்கம் செய்யாதது ஏன் என்றும் அவ்வாறு அவரை பதவி நீக்கம் செய்தால் அரசுக்குள் இருக்கும் அத்தனை இரகசியங்களும் வெளிவரும் என்ற அச்சமாவெனவும் முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார். 02 பக்கம்

# அரசை கடுமையாக விமர்சித்த சுசில் அதிரடியாக பதவிநீக்கம்



**கோட்டா நேற்றுக் காலை தடாலடி முடிவு**

02 பக்கம்



# சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல நிபந்தனைகள் என்ன?

**அமைச்சரவையில் யோசனைகளை முன்வைத்தார் பெசில்**

02 பக்கம்

# எனக்கு பதவி, பட்டங்கள் முக்கியமல்ல: வழமைபோல் நீதிமன்றுக்கு செல்வேன்



**அமைச்சிலிருந்து வெளியேறிய சுசில் கருத்து** 02 பக்கம்

**உஷ்**



இராஜாங்க அமைச்சர் சுசிலின் வெற்றிடத்துக்கு, எஸ்.பி.திசாநாயக்க எம்.பியை நியமிக்க அரச மேலிடம் ஆலோசித்து வருகிறதாம். அதேபோல, அரசை விமர்சித்து கருத்துகளை வெளியிட்டுவரும் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவையும் பதவியிலிருந்து தூக்குவதற்கு ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை, அடுத்த அமைச்சரவை மாற்றத்தில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு அமைச்சுப்பதவி வழங்கலாமென விடுக்கப்பட்ட கோரிக்கையை அரச மேலிடம் நிராகரித்திருக்கிறது. அண்மையில் புதுடில்லி சென்ற சமயம் இலங்கை அரசியல் தலைவர்கள் குறித்து இந்திய தலைவர்களிடம் அவர் முன்வைத்த விமர்சனங்கள் ராஜபக்ஷ சகோதரர்களின் காதுகளுக்கு வந்துள்ளதாக தகவல்.

# கல்முனை கடற்கரை பள்ளிவாசலின் 200ஆவது கொடியேற்ற விழா ஆரம்பம்



*•நூருல் ஹுதா உமர், எம்.என்.எம். அப்ராஸ்*

நானிலம் போற்றும் நாகூர் நாயகம், கருணைக் கடல், குத்புல் மஜீத் ஹழ்றத் செய்யிதுனா மஹான் சாஹுல் ஹமீது வலியுல்லாஹ் நாயகம் அன்னவர்களின் நினைவாக, அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர மக்களால் நடத்திவரும் கல்முனை கடற்கரை பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்ஹாவில் 200 ஆவது கொடியேற்ற விழா, நேற்று ஆரம்பமானது.

கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் மற்றும் கடற்கரை பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்ஹா ஷரீபின் தலைவர் டாக்டர் அல்ஹாஜ்...

» 02 பக்கம்

பதவியிலிருந்து நீக்கப்பட்ட இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, அமைச்சின் காரியாலயத்திலிருந்து முச்சக்கரவண்டியில் வீட்டுக்கு புறப்பட்டுச் சென்றார்.



14 பக்கம்

# ஆபிரிக்காவினூடாக ஐரோப்பா செல்ல முயன்ற யாழ்.வாசிக்கு மலேரியா

## கல்முனை கடற்கரை...

எஸ்.எம்.ஏ. அஸீஸ் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாயலில் இருந்து புனித கொடியானது உலமாக்கள், பக்கீர் ஜமாஅத்தினர், நிர்வாகிகள், ஊர்மக்கள் புடைசூழ தீன் கலிமா முழக்கத்துடன் ஊர்வலமாகச் சென்று கடற்கரை பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்ஹா மினாராக்களில் ஏற்றி வைக்கப்பட்டது .

கொடியேற்ற தினத்தில் இருந்துதொடர்ந்து 12 நாட்களுக்கும் பாதுஷா சாஹுல் ஹமீது வலியுல்லாஹ் நாயகம் (கத்தஸல்லாஹு சிர்ரஹுல் அஸீஸ்) அன்னவர்களின் மீதான புனித மௌலித் ஷரீப் பாராயணம், பக்கீர் ஜமாஅத்தினரின் புனித றிபாஈ றாதிப், உலமாப் பெருமக்களின் சன்மார்க்கச் சொற்பொழிவு என்பன இடம்பெறவுள்ளதோடு கொடியிறக்கும் தினமான எதிர்வரும் 16ஆம் திகதி நிறைவடையவுள்ளதுடன், அன்றைய தினம் மாபெரும் கந்தூரி அன்னதானம் வழங்கிவைக்கப்படவுள்ளது. இதேவேளை, 200ஆவது கொடியேற்று விழாவையொட்டி முத்திரை ஒன்றும் வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பொது மக்கள் இவ் கொடியேற்ற விழாவை பார்வையிட வருகை தந்ததை காணமுடிந்தது. இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாஉல்லா, சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், பதில் அரசாங்க அதிபர் வி. ஜெகதீசன், கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலி, கல்முனை மாநகர சபை பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், கல்முனை மாநகர சபை உறுப்பினர் எம். எஸ்.எம். நிசார், வக்பு சபை உறுப்பினர் டாக்டர் ஏ. உதுமாலெப்பை, அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எஸ்.எம்.வை. செனவிரத்ன, அம்பாறை மாவட்ட இராணுவ கட்டளைத்தளபதி ஏ.சி. சமிந்த லமாகோவா, அடங்களாக பொலிஸ் உயரதிகாரிகள், நாகூர் ஆண்டகை தர்ஹா சரிப் நிர்வாகிகள், முக்கிய பிரமுகர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## சுசிலை பதவியிலிருந்து...

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாத்தளை மாவட்ட மாநாடு, மாத்தளை மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர், சட்டத்தரணி லக்ஷ்மன் வசந்த பெரேரா தலைமையில் நேற்று மாத்தளை கிரேன்ட் மௌன்ட்டன் ஹோட்டல் மண்டபத்தில் இடம்பெற்றபோது அதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் கூறியதாவது,

அரசாங்கத்திலுள்ள தவறுகளை சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவை பதவியிலிருந்து நீக்கியது பிரச்சினைகளுக்கு தீர்வைத் தராது. இன்று நாட்டு பொருளாதாரம் அதல பாதாளத்தை நோக்கிச் செல்லும் போது அன்றாட உணவுப் பொருட்களின் விலை அசுர வேகத்தில் ஆகாயத்தை நோக்கி செல்கின்றது. நாட்டு மக்களுக்கு அன்றாடம் தேவையான சமையல் எரிவாயு மற்றும் பால்மா, மண்ணெண்ணெய் உட்பட அன்றாட அத்தியாவசிய தேவைகளுக்காக பொதுமக்கள் இன்று கால் கடுக்க வரிசையாக நிற்பதை அவதானிக்க முடிகின்றது. இதை சிலர் விமர்சிக்கும்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஆட்சிகளோ அன்றி இடதுசாரி கட்சிகளோ ஆட்சிக்கு வந்தால் பொதுமக்கள் குடிக்கும் நீருக்கும் உண்ணும் உணவுக்கும் வரிசைகளில் நிற்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கின்றனர். இவை அரசியலில் நல்லது கெட்டவைகளை பிரித்து அறிந்து செயல்பட முடியாத தாங்கள் புத்திஜீவிகள் என்று சொல்லக் கூடிய சில மடையர்கள் சொல்லும் கருத்தாகும்.

நாடு இந்த நிலைமைக்கு ஆவதற்கு ஆட்சி முகாமைத்துவம் இல்லாமையும் அமைச்சர்கள் மத்தியில் கட்டுப்பாடுகள் இல்லாமையும் அரசியல்வாதிகளின் கூற்றுக்களுக்கு மேலாக அரச அதிகாரிகளின் மாபியாக்கள் கையோங்கி நிற்பதும் அதை கட்டுப்படுத்திட, ஜனாதிபதியோ, பிரதமரோ நடவடிக்கைகள் எடுக்காமல் இருப்பதும் ஒரு முக்கியமான காரணம். இதற்குள் இருக்கும் உள்வீட்டு பிரச்சினைகளை நான் தெரிவிக்க விரும்பவில்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தங்கள் மொட்டுக் கட்சிக்கு மாத்திரமே 69 இலட்சம் வாக்குகள் கிடைத்ததாக ஜனாதிபதி உட்பட இன்றைய ஆட்சியாளர்கள் மார்தட்டி பேசிக்கொள்கிறார்கள். கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட பல கட்சிகள் ஒன்று சேர்ந்து கூட்டாக பெற்ற வாக்குகளே 69 இலட்சம். இதில் 15 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குரியது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வாக்குகள் இல்லாவிட்டால் இன்று ஆட்சியில் இருப்பது யார் என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இன்று ஆட்சியை அமைக்க ஒத்துழைப்பு வழங்கிய எம்மை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் கவனிக்கின்றார்கள். எதிர்காலத்தில் இந்த அரசோடு இருப்பதா? அல்லது ஓரமாகி செல்வதா? என்பதை பற்றி கூடிய விரைவில் தீர்க்கமான முடிவை எமது கட்சி எடுக்கும்.

இந்நாட்டில் எதிர்வரும் காலங்களில் எந்தவொரு கட்சியினருக்கும் தனியாக ஆட்சி நடத்தவோ அல்லது ஒரு அரசாங்கத்தை ஏற்படுத்தவோ முடியாது. பல கட்சிகள் ஒன்று சேர்ந்த ஒரு கூட்டாட்சியே இந்த நாட்டுக்கு தேவைப்படுகிறது. ஆகவே பொய், களவு, சூறையாடல் இல்லாத நாட்டுப்பற்றுள்ள நல்ல அரசியல் ஒன்று சேர்ந்து ஒரு நிரந்தர ஆட்சியை அமைக்கவேண்டும் என்பதே எனது அவா. இதன் முன்னோடியாக நாட்டில் நாலா திசைகளிலும் மாவட்ட ரீதியாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை புனரமைத்து பலப்படுத்தி வருகிறோம். அதன் ஒரு கட்டமாக இன்று(04) மாத்தளையில் இந்த மாநாட்டை நடத்தி வருகின்றோம்.

1970ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ அம்மையாரின் காலத்தில் தேர்தலில் 8 உறுப்பினர்களை மட்டும் நாடாளுமன்றத்துக்கு உள்வாங்கிய நாம், 1994ஆம் ஆண்டு சந்திரிகா அம்மையாரின் தலைமையில் அரசாங்கத்தை ஏற்படுத்தினோம். இன்று நாடாளுமன்றத்தில் 14 உறுப்பினர்களை கொண்ட நாம் எதிர்காலத்தில் நிச்சயமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஒரு நிரந்தர ஆட்சியை உருவாக்குவோம். அந்த ஆட்சியில் எந்தவொரு உணவுப் பொருளுக்கும் தட்டுப்பாடு இல்லாத, சமையல் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு இல்லாத, எரிவாயு சிலிண்டர் வெடிக்காத, விவசாயிகளின் பசளைகளுக்கு தட்டுப்பாடு இல்லாத ஆட்சியை உருவாக்குவோம். அந்த காலம் வெகுதூரத்தில் இல்லை என்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

## தனியார்துறையில்...

அரசதுறை ஊழியர்களுக்கு மாதாந்தம் 5ஆயிரம் ரூபா கொடுப்பனவை நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளார்.

தனியார்துறையினருக்கான சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடுமாறு தொழில் அமைச்சருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக ஊடகவியலாளர் சந்திப்பின்போது நிதியமைச்சர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அன்டன் மார்க்கஸ் கருத்து வெளியிட்டபோது, தேசியத் தொழிலாளர் ஆலோசனைக் குழுவைக் கூட்டி, சட்டக் கட்டமைப்பின் மூலம் தனியார்துறையினரின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான பொறிமுறையை உருவாக்கும் பொறுப்பு தொழில் அமைச்சருக்கு உள்ளது என்றார்.

டிசம்பரில் கவுன்சில் கூடியபோது, தனியார் துறை ஊழியர்களின் நாளாந்த ஊதியத்தை ஆயிரம் ரூபாவாகவும் குறைந்தபட்ச மாத ஊதியத்தை 26ஆயிரமாகவும் உயர்த்துவதற்கான முன்மொழிவுகள் விவாதிக்கப்பட்டு, முத்தரப்பு உபக்குழுவை நியமிப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டது.

தனியார்துறை ஊழியர்களுக்கு சட்டபூர்வ வழிகளில் மட்டுமே சம்பள உயர்வு வழங்க முடியும் என்று குறிப்பிட்ட அன்டன் மார்க்கஸ், தொழில் அமைச்சர் மற்றும் தேசியத் தொழிலாளர் ஆலோசனைக் குழுவை சந்தித்து இது தொடர்பாக பேசி நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.

## விமர்சிப்போர்...

முதல் அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி செயலகத்தில் நடந்தபோது ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்ததாக அறியமுடிந்தது.

அமைச்சரவைக் கூட்டத்தின் இடையில் 49 ஆம் இலக்கம் அமைச்சரவைப் பத்திரத்தை வாசித்த ஜனாதிபதி, அரசாங்கத்தினால் வழங்கப்படவுள்ள விசேட நிவாரணப் பொதி அடங்கிய நிதி அமைச்சின் அமைச்சரவைப் பத்திரம் தொடர்பிலும் குறிப்பிட்டார்.

மிகவும் இக்கட்டான சூழ்நிலையிலும் இவ்வாறான நிவாரணப் பொதியை மக்களுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்தபோது, அரசாங்கத்தை பாராட்டுவதை விடுத்து அரச பிரமுகர்கள் அரசாங்கத்துக்குள் இருந்து கொண்டு அரசாங்கத்தை விமர்சிப்பது எதிர்க்கட்சிகளுக்கு சாதக நிலையை ஏற்படுத்தியுள்ளதாக ஜனாதிபதி இங்கு குறிப்பிட்டுள்ளார்.

இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அண்மையில் அரசாங்கத்துக்கு எதிரான விமர்சனங்களை முன்வைத்தமை தொடர்பில் ஜனாதிபதி இந்த அமைச்சரவை கூட்டத்தில் கடும் அதிருப்தியை வெளியிட்டதாக அறியமுடிந்தது.

உணவு நெருக்கடிக்கு காரணமான அமைச்சர்களும் கொள்கை வகுப்பாளர்களுமே பொறுப்பு என்றும், நாடு எதிர்நோக்கும் பாரிய நெருக்கடிகளுக்கு தீர்வுகாண வேண்டிய தருணம் வந்துவிட்டதாகவும் அவற்றைத் தீர்ப்பது வேறு குழுவின் கையில் இருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அண்மையில் தெரிவித்திருந்தார்.

பொருட்களின் விலை உயர்வுக்கு வர்த்தக அமைச்சர், விவசாய அமைச்சர் மற்றும் உணவு அமைச்சர் ஆகியோரே காரணம் என தெரிவித்திருந்த பிரேமஜயந்த, விவசாய அமைச்சர் முழு தோல்வியடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் கருத்துக்கள் தொடர்பில் அமைச்சர்களான பந்துல குணவர்தன மற்றும் மஹிந்தானந்த அளுத்கமகே ஆகியோர் இதுதொடர்பில் ஏற்கனவே ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

நேற்றுமுன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவை இலக்கு வைத்து மிகவும் பொறுமையிழந்து பேசிய ஜனாதிபதி, அப்படியானவர்களை பதவி நீக்கும் அதிகாரம் தமக்கு இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## எனக்கு பதவி, பட்டங்கள்...

தம்மை இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து நீக்கியமை பெரிய விடயமல்ல எனவும், சட்டத்தரணி என்றவகையில் நீதிமன்றத்துக்குச் செல்லவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைதூரக் கல்வி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு பதவியிலிருந்து ஜனாதிபதி நீக்கியுள்ளமை குறித்து கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியதாவது,

கடந்தவாரம் சந்தைக்குச் சென்றபோது பொதுமக்கள் பொருட்களின் விலை குறித்து ஊடகங்கள் கேட்டபோது முற்று முழுதாக விவசாய அமைச்சு பிழையானது எனத் தெரிவித்தேன். அந்த அமைச்சர் பெயிலாகிவிட்டார் என்றும் குறிப்பிட்டேன்.

இப்போது இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதாகக் கேள்விப்பட்டேன். எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. இவை அவ்வளவு பெரிய விடயங்கள் இல்லை. என்னைப் பதவியிலிருந்து நீக்க ஜனாதிபதிக்கு உரிமை உள்ளது. 2000ஆம் ஆண்டு நான் அமைச்சரானேன். மூன்று ஜனாதிபதிகளின் கீழ் பணியாற்றியுள்ளேன். எனக்கு தொழில் இருக்கிறது. அதுதான் சட்டத்தரணி தொழில். அந்தத் தொழிலில் ஈடுபடப் போகிறேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## உளவுத் தகவல்கள்...

இலங்கை அரசாங்க பிரமுகர்களை ஏமாற்றி இது செய்யப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அந்தக் கடிதத்தில் அவர் மேலும் கூறியிருப்பதாவது, தற்போதைய அரசாங்கம் ஜனநாயக முறைமையின்கீழ் கிடைக்கும் முதலாவது சந்தர்ப்பத்திலேயே நீக்கப்படும் என்பதை கூறிக்கொள்கிறேன். அதன்படி கடந்த 15 வருட காலத்தில் வெளிநாடுகள் மற்றும் நிறுவனங்களுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைகளை மீண்டும் ஆராய்ந்து, ஊழல் மோசடிகள் காணப்படும் அனைத்து உடன்படிக்கைகளும் இரத்துச் செய்யப்படும்.

அடுத்ததாக, இலங்கையில் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தல் அல்லது பொதுத் தேர்தல் மக்களின் கருத்துக்கணிப்பாகவே நடக்கும். இலங்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் அல்லது அனுகூலமற்ற அனைத்து உடன்படிக்கைகளையும் மறுசீரமைக்க அல்லது இரத்துச் செய்வதற்கு இதன்போது மக்களின் அதிகாரம் கோரப்படும்.

சீனாவின் செலன்திவா நிறுவனம் ஊடாக ஏதேனுமொரு சொத்தை கையகப்படுத்தினாலும் அது ஆரம்பத்திலிருந்தே இரத்தாகும் என்பதனை நினைவிற்கொள்ளுமாறு சீன ஜனாதிபதிக்கான குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசை கடுமையாக...

இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த உடனடியாக அமுலுக்குவரும் வகையில் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், இவர் இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

சுசில் பிரேமஜயந்த, கல்விச் சீர்திருத்தங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சராக பதவி வகித்து வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த சில வாரங்களாக அவர் அரசை கடுமையாக விமர்சித்து வந்தநிலையில் அவரின் பதவி பறிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச நாணய நிதியத்திடம்...

**யோ.தர்மராஜ்**

வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல வேண்டும் என எதிர்க்கட்சி மற்றும் அரசின் அமைச்சர்கள் சிலரும் சுட்டிக்காட்டுகின்றனர். ஆனால், நாங்கள் சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றால், நாட்டின் சமூக நலன்புரி செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படுவதோடு, நாட்டின் அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்கு பெரும் தடையாக இருக்கும் என நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ அமைச்சரவையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வது குறித்து நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவையில் முன்வைத்த அமைச்சரவை பத்திரத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த அமைச்சரவைப் பத்திரத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல வேண்டும் என எதிர்க்கட்சி மற்றும் அரசின் அமைச்சர்கள் சிலரும் சுட்டிக்காட்டுகின்றனர். குறிப்பாக, நாங்கள் சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றால் அன்றாட வாழ்க்கையை நடத்துவோருக்கு எவ்வித பாதிப்பும் இல்லாது பொருளாதாரத்தை சாதாரண நிலைமைக்கு கொண்டுவர முடியும் என நம்பிக்கைக் கொண்டுள்ளனர்.

ஆனால், சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய சர்வதேச நிறுவனங்களுடன் நாங்கள் நடத்தும் பேச்சுவார்த்தைகளிலிருந்து சில முக்கிய நிபந்தனைகள் தெளிவாகின்றன.

அதன்படி, ரூபாவின் பெறுமதியை தளம்பல் நிலையில் வைத்தல், வரிஅதிகரிப்பதுடன், பெறுமதி சேர் வரி 8வீதத்துக்கும் அதிகமாக அதிகரித்தல் மற்றும் மின்சாரம், எரிபொருள் மற்றும் நீர் போன்றவற்றின் விற்பனை விலை குறைநிறைப்புக்கு அமைய இருத்தல் வேண்டும்.

ஆனால், வரி அதிகரிப்பது குறிப்பாக, வெற் வரியை அதிகரிப்பதால் நுகர்வோர் நேரடியாக பாதிக்கப்படுவார்கள். இதனால், 10வீத விலை அதிகரிப்புகளும் முன்னெடுக்கப்படும். எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதுடன், மின்சார கட்டணத்தையும் மறுசீரமைப்புக்கு உட்படுத்த வேண்டிவரும். இதனால், ஆரம்ப கட்டணமாகவுள்ள 16 ரூபாவை குறைந்தது 25ரூபாவாக அதிகரிக்க வேண்டிவரும். மேலும், நீர் கட்டணத்திலும் குறைந்தபட்சம் 10 ரூபா அதிகரிக்க வேண்டிவரும்.

சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றால் அவர்களின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், நாட்டின் சமூக நலன்புரி செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படும் எனக் கூறுவது தவறல்ல. சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றால் பொருளாதாரம் வளர்ச்சியடைய முடியும் என்றாலும் நாட்டின் அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்கு பெரும் தடையாக இருக்கும். மேலும், நல்லாட்சி அரசாங்கத்தின் தவறான முடிவுகளினாலேயே தற்போது இவ்வாறான பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, அரசாங்க ஊழியர்களுக்கு நேற்றுமுன்தினம் முதல் ஒவ்வொரு மாதமும் ரூபா 5ஆயிரம் கொடுப்பனவை வழங்குவதற்கு நேற்று முன்தினம் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இதற்கமைவாக சமுர்த்தி பயனாளிகளுக்கு வழங்கப்படும் ரூபா 3 ஆயிரத்து 500க்கு மேலதிகமாக ஆயிரம் ரூபா மேலதிக கொடுப்பனவாக வழங்கப் பட்டுள்ளது. ஊனமுற்ற படைவீரர்களுக்காகவும் இந்த ரூபா 5ஆயிரம் வழங்குவதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக அத்தியாவசிய பொருட்கள் மீது விதிக்கப்பட்ட மேலதிக வரிகளையும் நீக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, அனைத்து அரசாங்க ஊழியர்களுக்கும் இம்மாதம் முதல், ஒரு வருடத்துக்கு மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா விசேட கொடுப்பனவு ( 87 பில்லியன் ரூபா மேலதிக ஒதுக்கீடு) ஓய்வூதியதாரர்களுக்கு இம்மாதம் முதல், ஒரு வருடத்துக்கு மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா விசேட கொடுப்பனவு (40 பில்லியன் ரூபா மேலதிக ஒதுக்கீடு) தனியார் நிறுவன ஊழியர்களுக்கும் இதே மட்டத்திலான சம்பள அதிகரிப்பை மேற்கொள்வது தொடர்பில் உரிய தரப்பினரிடம் பேச தொழில் அமைச்சுக்கு ஆலோசனை, சமுர்த்தி பயனாளிகளுக்கு வழங்கப்படும் 3 ஆயிரத்து 500 ரூபாவுக்கு மேலதிகமாக ஆயிரம் ரூபா மேலதிக கொடுப்பனவு அனைத்து அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்களும் அனைத்து வரிகளிலிருந்தும் நீக்கம், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா ஒரு கிலோ 80 ரூபா வீதம், மாதாந்தம் 15 கிலோகிராம் கோதுமை மா வழங்கல், ஊனமுற்ற இராணுவ வீரர்களுக்கு இம்மாதம் முதல் 5 ஆயிரம் கொடுப்பனவு, விவசாயத்துறையை மேம்படுத்த, 20 பேர்ச் நிலத்துக்கு குறைவான வீட்டுத் தோட்டத்துக்கு 5 ஆயிரம் கொடுப்பனவு, 20 - 01 ஏக்கர் நிலத்துக்கு 10 ஆயிரம் கொடுப்பனவு, நெல்லின் கொள்வனவு உத்தரவாத விலை 50 ரூபாவிலிருந்து 75 ரூபாவாக அதிகரிப்பு, அதிபர்கள், ஆசிரியர்களுக்கான அதிகரித்த சம்பளத்தையும் இம்மாதம் வழங்க அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## அமைச்சரவைத் தீர்மானங்கள்...

செய்வதற்காக 2020 நவம்பர் 16ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியால் பரிந்துரைக்கப்பட்டுள்ள கம்பனிகளிடம் போட்டி விலைமுறி கோரப்பட்டுள்ளதுடன், அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய, குறித்த விலைமனுக்கோரல் இந்தியாவின் மஹேந்திரா மற்றும் மஹேந்திரா கம்பனிக்கு வழங்குவதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 07. விசேட பண்டங்கள் மற்றும் சேவைகளுக்கான வரிச் சட்டமூலம் மற்றும் 2002 ஆம் ஆண்டு 14ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச்சட்ட திருத்தத்துக்கான சட்டமூலம்

2021 மற்றும் 2022ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் மதுசாரம், சிகரட், தொலைத்தொடர்புகள், பந்தயம் மற்றும் சூதாட்டம் மற்றும் வாகனங்கள் மீதான வரி அறவீட்டு செயற்திறனை விருத்தி செய்வதற்கு இயலுமான வகையில் பலதரப்பட்ட நியதிச்சட்டங்களின் கீழ் விதிக்கப்பட்டுள்ள வரிகள் மற்றும் அறவீடு செய்யும் ஒரு சில வரிகளுக்கு பதிலாக இணையவழியூடாக முகாமைத்துவப்படுத்தும் தனியானதொரு விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியை விதிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அவ்வாறே, 2022 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் நிதிச் சேவைகளின் அடிப்படையில் பெறுமதிசேர் வரியை அதிகரிப்பதற்கும் மற்றும் பெருந்தொற்று அல்லது பொதுச்சுகாதார நிலைமையின் கீழ் அரச மருத்துவமனைகளுக்கு பரிசளிக்கப்படும் மருத்துவ உபகரணங்கள், கருவிகள் மற்றும் இரசாயனத் திரவியங்கள் போன்றவற்றுக்கான பெறுமதிசேர் வரியை நீக்குவதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது.

சட்டவரைஞரால் குறித்த பணிகளுக்காக தயாரிக்கப்பட்டுள்ள விசேட பண்டங்கள் மற்றும் சேவைகளுக்கான வரிச் சட்ட மூலத்துக்கும், பெறுமதிசேர் வரி (திருத்தப்பட்ட) சட்டமூலத்துக்கும் சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. அதற்கமைய, குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்துக்காக நிதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 08. அதிபர் - ஆசிரியர் சேவைகளின் சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கான 03/2016 பொது நிர்வாக சுற்றறிக்கையை திருத்தம் செய்தல்

அதிபர் - ஆசிரியர் சேவைகளின் சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்காக 2018ஆம் ஆண்டு கல்வி அமைச்சால் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடி அப்போதிருந்த சம்பள நிர்ணய சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், குறித்த யோசனையை நடைமுறைப்படுத்துவதற்காக 2022 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின்மூலம் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டில் குறித்த சம்பள முன்மொழிவுகளைத் தயாரிக்கும்போது ஆசிரிய ஆலோசகர் சேவை நிறுவப்படாமையால், குறித்த சேவைக்கான சம்பளத்திட்டத்தை உள்ளடக்கி அதிபர் - ஆசிரியர் சேவைகளின் சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கு இயலுமான 03/2016 வகையில் பொது நிர்வாக சுற்றறிக்கை திருத்தம் செய்வதற்கு கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 09. கூரையில் பொருத்தப்படும் சூரியமின் தொகுதிக்கான மின்கல மின்சக்தியை களஞ்சியப்படுத்தும் மின்கலத்தொகுதியை நிறுவுவதற்கு ஊக்குவிக்கும் வேலைத்திட்டம்

2030ஆம் ஆண்டளவில் மின்சக்தித் தேவையின் 70வீதத்தை மீள்பிறப்பாக்க எரிசக்தி மூலங்களிலிருந்து உற்பத்தி செய்வதற்காகவும் 2050ஆம் ஆண்டளவில் எரிசக்தி உற்பத்திகளிலிருந்து வெளியேறும் கரியமில காபன் வெளியீடுகளை இல்லாது செய்வதற்கும், தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானங்களை மேற்கொண்டுள்ளது. தற்போது நாட்டின் மின்சாரக் கட்டமைப்புக்கு கூரையில் பொருத்தப்பட்ட சூரியமின் தொகுதிகள் மூலம் 400 மெகாவோட் இயலளவு கொண்ட மின் விநியோகிக்கப்படுகின்றது.

இத்தொகுதிக்காக புதிய கட்டண முறை மூலம் தன்னார்வ நிதி முதலீடுகளின் பிரகாரம் மின்கலத்தொகுதியைப் பொருத்துவதற்கு ஊக்கமளிப்பதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு மிகவும் நம்பகரமான மின்சார விநியோகத்தை உருவாக்குவதற்கு இயலுமை கிட்டும். இந்நிலைமையின்கீழ் மீள்பிறப்பாக்க எரிசக்தி மூலங்களிலிருந்து கிடைக்கும் மின்சாரத்தை அதிகளவில் தேசிய மின்கட்டமைப்புக்கு இணைக்கும்போது மேலெழக்கூடிய தொழில்நுட்ப ரீதியான சவால்களை அடையாளங்கண்டு, பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக அதிகாரிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த அதிகாரிகள் குழு அறிக்கையின் பரிந்துரைகள் தொடர்பாக தொடர்ந்தும் விடயங்களை ஆராய்வதற்காக அமைச்சரவை உபகுழுவொன்றை நியமிப்பதற்கு 2021 நவம்பர் மாதம் 23ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த அமைச்சரவை உபகுழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கமைய முன்மொழியப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மின்சக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 10. திருகோணமலை எண்ணெய்த் தாங்கி தொகுதியின் அபிவிருத்திக் கருத்திட்டம்

திருகோணமலை எண்ணெய்த்தாங்கி தொகுதிக்குரிய தற்போது இந்திய அரசாங்கத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ள முத்தரப்பு ஒப்பந்தம் இராஜதந்திர ரீதியான கலந்துரையாடல் மூலம் மீளாய்வு செய்து கூட்டிணைந்த அபிவிருத்திக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இருநாடுகளுக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. அதற்கமைய, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக நடவடிக்கைகளுக்காக 24 எண்ணெய்த் தாங்கிகளை ஒதுக்குவதற்கும், லங்கா ஐ.ஓ.சி கம்பனியால் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் கீழ் எண்ணெய்த் தாங்கித் தொகுதியில் 14 தாங்கிகளை குறித்த கம்பனியின் வர்த்தக நடவடிக்கைகளுக்காக ஒதுக்குவதற்கும், எஞ்சிய 61 எண்ணெய்த் தாங்கிகளில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு 51 வீதமும், லங்கா ஐ.ஓ.சி கம்பனிக்கு 49வீதமான பங்குரிமை கிடைக்கும் வகையில் ட்ரிங்கோ பெற்றோலியம் டேர்மினல் (பிரைவெட்) லிமிட்டட் எனும் பெயரில் நிறுவப்பட்டுள்ள கம்பனியால் அபிவிருத்திக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் எரிசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 11. 2022ஆம் ஆண்டு பொருளாதாரம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டங்கள்

2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு 2022 ஜனவரி மாதம் 01ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்கு ஆரம்பிக்கப் பட்டுள்ளதுடன், அதன்மூலம் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகளை அடைவதற்காக இலங்கைப் பொருளாதார எதிர்காலக் கண்ணோட்டங்கள் (External Outlook ) தொடர்பாக கீழ்வரும் தகவல்கள் விபரமாக நிதி அமைச்சரால் அமைச்சரவையின் கவனத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டுக் கடன் செலுத்தல் மற்றும் எதிர்பார்க்கப்படும் பண்டங்கள் மற்றும் சேவைகள் இறக்குமதிக்கான செலவு உள்ளிட்ட 2022 ஆம் ஆண்டில் நாட்டிலிருந்து வெளிச்செல்லும் என மதிப்பிடப்பட்டுள்ள அந்நிய செலாவணி தொடர்பான தகவல்கள்.

ஏற்றுமதி வருமானம், சுற்றுலாத்துறை மூலமான வருமானம், புலம்பெயர் தொழிலாளர்கள் நாட்டுக்கு அனுப்பும் பணம், நேரடியான வெளிநாட்டு முதலீடுகள் உள்ளிட்ட 2022ஆம் ஆண்டில் அந்நிய செலாவணி விபரம்.

எதிர்பார்க்கப்படும் அந்நிய செலாவணிப் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான குறுகிய மற்றும் நீண்டகால படிமுறை முன்மொழிவுகள்.

நிலவுகின்ற பொருளாதார நிலைமையின் கீழ் பண்டங்கள் மற்றும் சேவைகளின் விலை அதிகரிப்புக் காரணமாக பொதுமக்கள் முகங்கொடுக்க நேரிட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளைக் குறைப்பதற்காக முன்மொழியப்பட்டுள்ள சலுகைகள் கீழ்வருமாறு:

(i) அரச ஊழியர்களுக்கும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் 5ஆயிரம் ரூபா வீதம் மாதாந்தக் கொடுப்பனவை ஜனவரி மாதம் தொடக்கம் வழங்கல்.

(ii) தனியார்துறையின் தொழில் வழங்குநர்களுடன் கலந்துரையாடி குறித்த சலுகையை தனியார்துறை ஊழியர்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்

(iii) 3ஆயிரத்து 500 ரூபா மாதாந்தக் கொடுப்பனவாகப் பெறும் சமுர்த்திப் பயனாளிகளுக்கு மேலதிகமாக ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்கல், குறித்த கொடுப்பனவை ஏனைய சமுர்த்திப் பயனாளிகளுக்கும் வழங்கல்

(iv) எதிர்வரும் போகத்தில் நெல் அறுவடையில் ஏதேனும் விளைச்சல் குறையுமாயின், தற்போது ஒரு கிலோ நெல்லுக்கு செலுத்தப்படும் 50 ரூபா உத்தரவாத விலையை ஒரு கிலோவுக்கு 25 ரூபாவால் அதிகரித்து வழங்கல்.

(v) சந்தையில் அரிசி விலையில் பாதிப்பு ஏற்படாத வகையில் அவ்வாறு செலுத்தப்படும் மேலதிக தொகை அரசாங்கத்தால் பொறுப்பேற்றல்.

(vi) தமது நுகர்வுக்குத் தேவையான மரக்கறிகள் மற்றும் பழவகைச் செய்கையை ஊக்குவிப்பதற்காக வீட்டுத்தோட்ட வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காகவும் அதற்குத் தேவையான நிலத்தைப் பண்படுத்துதல், விதைகளை கொள்வனவு செய்தல் போன்ற இடுபொருட்களுக்காக காணியின் அளவுக்கு ஏற்ப ஒரு ஏக்கர் வரைக்கும் உயர்ந்தபட்சம் 10ஆயிரம் ஊக்குவிப்புத் தொகையை வழங்கல்.

(vii) தோட்டத்தொழிலாளர் குடும்பமொன்றுக்கு ஒரு கிலோகிராம் கோதுமை மா 80 ரூபாவுக்கு 15 கிலோ கிராம் கோதுமை மாவு வழங்கல்.

(viii) தேவையான சந்தர்ப்பங்களில் உள்ளூர் விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அனைத்து அத்தியாவசிய உணவு மற்றும் மருந்துப் பொருட்களுக்காக முழுமையான வரிவிலக்கு செய்தல்.

நிதி அமைச்சர் சமர்ப்பித்த மேற்படி யோசனைகள் அடங்கிய வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சரவை உடன்பாடு தெரிவிக்க தீர்மானித்துள்ளது.

**(அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசார பிரிவினால் சிங்கள மொழியிலான அமைச்சரவை தீர்மான ஆவணம், தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.)**

# இன்றைய ராசி பலன்

05.01.2022 புதன்கிழமை மார்கழி 21

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

| | | |
|---|---|---|
| **நட்சத்திரம்:திருவோணம்** காலை 8.46 வரை | **சித்தி** மாலை 6.15 - 06.01.2022 மாலை 3.25 வரை | 06.01.2022 பிற்பகல் 12.29 வரை |
| **அவிட்டம்** காலை 8.46 - 06.01.2022 காலை 7.11 வரை | **திதி:பூர்வ பட்ச திரிதியை** பிற்பகல் 2.34 வரை | **முற்கரணம்: கரஜம்** அ.கா 3.52 - பி.ப 2.34 |
| **யோகம்: வஜ்ரம்** மாலை 6.15 வரை | **பூர்வ பட்ச சதுர்த்தி** பி.ப 2.34 - | **பிற்கரணம்: வணிஜம்** பி.ப 2.34 - 06.01.2022 அதிகாலை 1.26 வரை |

**சுப நேரங்கள்**
காலை 6.24 - 7.41
மாலை 3.12 - 4.40
**அசுப நேரங்கள்**
**ராகு காலம்**
பிற்பகல் 12.16 - 1.44
**குளிகை காலம்**
காலை10.48 - பி.ப 12.16
**எமகண்ட காலம்**
காலை 7.52 - 9.20
**துர் முகூர்த்தம்**
காலை 11.53 -பி.ப 12.39

**லோகநாயகி ஸஹஷ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி**

**மேஷம்:** வேலைத்தளத்தில் உற்சாகமாக பணியாற்றினாலும் வேலைகள் முழுமையாக நிறைவேறாது. ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட வேலைகளில் ஆர்வம் உண்டாகலாம். கௌரவ இழப்பு ஏற்படலாம். தேவையற்றவர்களின் எதிர்ப்பு உருவாகலாம். இறைதியானம் தேவை.

**ரிஷபம்:** பணியிட மாறுதல் விருப்பத்திற்கேற்ப கிடைக்கலாம். திருமணத்திற்கு காத்திருப்போருக்கு சுப செய்திகள் கிடைக்கக்கூடும். ஆன்மீக செயல்பாடு அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் அன்பு உற்சாகம் தரும்.

**மிதுனம்:** புதிய தொழில் துவங்குவதில் சிரமங்கள் ஏற்படலாம். வணிகத்தில் புதிய விடயங்களை இன்று தவிர்ப்பது நல்லது. வீட்டில் இருப்பவர்களின் உடல்நலத்தில் அக்கறை ஏற்படலாம். சிலரின் எதிர்ப்பு விடயங்களில் கவனம் தேவைப்படலாம்.
சந்திராஷ்டமம்: புனர்பூசம் நட்சத்திரம் பாதம் 1/2/3க்கு அ.கா. 3.16 - இரவு 7.54

**கடகம்:** செல்வாக்கு மிக்கவர்களிடம் பிரபலம் ஏற்படலாம். பல்கலைக்கழக கல்வி மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கலாம். வணிக முன்னேற்றம் உண்டாகலாம். காதலில் திருமண முன்மொழிதல் ஏற்படலாம்.
சந்திராஷ்டமம்: புனர்பூசம் நட்சத்திரம் பாதம் 4க்கு இரவு 7.54 - 06.01.2022 அதிகாலை 1.31 வரை

**சிம்மம்:** அலுவலகத்தில் புதிய பொறுப்பான பதவி கிடைக்கலாம். உணர்வுபூர்வ பலவீனம் உண்டாகலாம். வீட்டை அழகுபடுத்தும் வேலைகள் செய்யப்படலாம். புதிய கற்கைகளும் ஏற்படலாம்.

**கன்னி:** வணிக பயணங்களில் நன்மை கிடைக்கலாம். வாழ்க்கைத்துணையின் உணர்வுகளில் அக்கறையுடன் இருப்பது நல்லது. வேலைத்தளங்களில் முதலாளி உங்களுடன் மகிழ்ச்சியாக இருக்கும் நிலை உருவாகலாம். சில சுப செய்திகள் கிடைக்கக்கூடும்.

**துலாம்:** இல்லத்தில் சிறிய பிரச்சினை தோன்றலாம். பணிகளிலும் கவனம் தேவைப்படலாம். வீட்டில் சுப மங்கள நிகழ்வுகள் உண்டாகலாம். புதிய வேலைகளின் திட்டங்கள் உருவாகலாம்.

**விருச்சிகம்:** பணிகளில் பதவி உயர்வு கிடைக்கலாம். இல்லத்தில் அமைதியான மகிழ்ச்சி நிலவும். உயர் பதவியில் இருப்பவர்களுக்கு நல்ல நிலை உருவாகலாம். மாணவர்களுக்கு கல்வியில் நல்ல நிலை தோன்றலாம்.

**தனுசு:** பிள்ளைகளின் தொழில் அல்லது எதிர்காலம் குறித்த கவலை தோன்றலாம். காதலில் பிரச்சினைகள் ஏற்படாமல் கவனமாக இருப்பது நன்மை. கோபத்தை பணிகளில் தவிர்ப்பது நல்லது. உடல்நலத்திலும் கவனம் தேவைப்படலாம். இறைவணக்கம் தேவை.

**மகரம்:** மாணவர்களுக்கு தங்கள் எதிர்கால வேலைவாய்ப்பு பலன் கிடைக்கலாம். இழந்த பொருள் கிடைக்கப் பெறலாம். மக்கள் தொடர்பு மேம்படும். வாழ்க்கைத்துணையுடன் எண்ண பகிர்தல் ஏற்படலாம். வீட்டின் சூழல் நல்ல நிலை பெறும்.

**கும்பம்:** வீண் சிந்தனைகளை தவிர்ப்பது நல்லது. நிதானமாக இருப்பது நன்மை தரும். பணிகளிலும் சிறிய பிரச்சினைகள் உண்டாகலாம். வாழ்க்கைத்துணையுடன் மென்மையாக இருப்பது நல்லது. இறைவணக்கம் நன்மை தரும்.

**மீனம்:** அன்றாட வழக்கங்கள் ஒழுங்கு பெறும். வணிகத்தில் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கலாம். நண்பர்களின் உதவியும் கிடைக்கலாம். சமூக தொண்டு ஆர்வம் அதிகரிக்கலாம். இன்று இறையருளால் அமைதியான நாளாக அமையலாம்.

# 2021இல் 2,21,000 இலங்கையர்கள் வெளியேற்றம்; கல்வி வழங்கமுடியாதளவுக்கு பொருளாதார சீர்கேடு

## ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த குற்றச்சாட்டு

அரசாங்கம் நாட்டை எந்தளவுக்கு நடத்துகிறது என்பதில் நியாயமான சந்தேகம் உள்ளது. 2021ஆம் வருடத்தில் மாத்திரம் கிட்டத்தட்ட 2 இலட்சத்து 20 ஆயிரம் இலங்கையர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். அரசாங்கம் தெரிவுசெய்யப்பட்ட நாளிலிருந்து ஒவ்வொரு வருடமும் ஒரு இலட்சம் மக்கள் இந்த நாட்டிலிருந்து துரத்தப்படுகின்றனர் - என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

மக்கள் நாட்டில் பல பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டு பிள்ளைகளுக்கு கல்வி வழங்க முடியாமல் பொருளாதார, சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (04) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில்,

போக்குவரத்துத்துறை வீழ்ச்சியடைந்துள்ளது. அரச இயந்திரம் சீர்குலைந்துள்ளது. சட்டம், ஒழுங்கு நிலை குறித்து மக்களுக்கு சந்தேகம். நாட்டுமக்களுக்கு நாட்டை விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை.

அதேபோன்று 2022ஆம் ஆண்டுக்குள் நாட்டில் எஞ்சியிருப்பவர்கள் யார் என்பதில் நியாயமான சந்தேகம் எழுந்துள்ளது.

தற்போது இந்த நாடு பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது, பணவீக்கத்தால் அனைத்து பொருட்களின் விலையும் மும்மடங்கு உயர்ந்துள்ளது. நித்திரையிலிருந்து எழுந்தவர்போன்று நிதி அமைச்சர் அமெரிக்காவிலிருந்து வந்து 5000 ரூபா வழங்குவதாக கூறினார். இது மகிழ்ச்சியான செய்திதான். ஆனால், ஐநூறு போதுமா என்பதுதான் கேள்வி. பொருளாதார பிரச்சினையை வெறும் 5000 ரூபாவால் அணைக்க முயன்றால் அப்பாவி மக்களுக்கு நீதி கிடைக்காது..

இந்நாட்டில் 1.5 மில்லியன் அரச ஊழியர்கள் உள்ளனர். இந்நாட்டில் 6,50,000 ஓய்வு பெற்றவர்கள் உள்ளனர். 2.2 மில்லியன் சமூர்த்தி பெற்றவர்கள் உள்ளனர். சகலரையும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

இவர்கள் பியகம பணம் அச்சிடும் இயந்திரத்தில்



பணம் அச்சிடுகின்றனர். தேயிலைக் கொழுந்து பறிக்கும் பெண் மற்றும் சுற்றுலாத்துறையில் ஈடுபடும் அப்பாவி மக்களுக்கு என்ன நடந்துள்ளது? நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் கதி என்ன? இந்த நாட்டிலுள்ள அப்பாவி மக்களின் பசியும், ஊடகவியலாளர்களின் பசியும் இந்த அரசாங்கத்துக்குப் புரியவில்லையா? எனவே, இந்த மாயாஜாலத்தை செய்யாதீர்கள் என்கிறோம். இந்த நாட்டில் பண இயந்திரம் இருக்கும்வரை அச்சுப் பணம் விநியோகிக்கப்படும். ஆனால், அது ஒரு பகுதிக்கு மட்டுமே விநியோகிக்கப்படும்.

இன்று காசு, பால்மா, எரிவாயு, சிமென்ட் இருந்தாலும், இல்லாவிட்டாலும் பொருட்களை வாங்க வழியில்லை.

தற்போதைய எரிவாயு விவகாரம் தொடர்பில் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஊடகங்களுக்கு முன்பாக வந்து லிட்ரோவுக்கு எதிராக ஆணவமாகப் பேசி வருகின்றனர். ஆனால், சட்டம் அமுல்படுத்தப்படாதுள்ளது. அதன் தலைவர் யார்? யாரின் கீழ் பெசில் ராஜபக்ஷ முடிவெடுத்தார்? எத்தனை பெண்கள் முடங்கி அல்லது உயிரிழக்கிறார்கள்? அரசாங்கத்தின் வலி புரியவில்லை. எரியும் வீடுகளுக்கு அரசாங்கம் ஏன் இழப்பீடு வழங்கவில்லை? அமைப்பு மாற்றப்பட்டுள்ளதாக ஒருபுறம் கூறப்பட்டாலும், நுகர்வோருக்கு தெரியப்படுத்தாமல் எப்படி மாற்றுவது? இவ்வளவு காலம் நுகர்வோர் அதிகாரசபை என்ன செய்தது? அமைச்சர்கள், தலைவர்கள், செயலாளர்கள் உள்ள அமைச்சுதான் இன்று இந்த முறையில் செயல்படுகிறது. இந்நாட்டு மக்களின் வலி புரியவில்லை. எரியும் சமையலறையில் கதறி அழும் பெண்களின் வலி புரியவில்லை. இன்று இந்த நாட்டிலுள்ள அப்பாவித் தாய்மார்கள் தங்கள் உயிரை பணயம் வைத்து குழந்தைகளுக்கு உணவு தயார்செய்ய வேண்டியுள்ளது.

இதேவேளை, அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வழங்கப்பட்டு, இரட்டைக் குடியுரிமை பெற்ற ஒருவரை 20ஆவது திருத்தத்திற்காக கையை உயர்த்தி, இரட்டைக் குடியுரிமை பெற்ற ஒருவரை நாடாளுமன்றத்திற்குக் கொண்டுவந்து, அவருக்கு நிதியமைச்சையும் வழங்கியுள்ளனர். துறைமுக நகர சட்டமூலத்திற்கும் ஆதரவு வழங்கியவர்கள் உல்லாசமாக இருக்க, இந்த அழிவுக்கு பொறுப்பேற்கவேண்டிய நிலை இந்நாட்டுக்கு நேர்ந்துள்ளது.

நாட்டுக்கு சோறு வழங்கிய விவசாயிகள் இன்று பட்டினியால் வாடுகின்றனர். அச்சம் வேண்டாம், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை இழந்தால் அவர்களுக்கு இழப்பீடு வழங்குவோம் என அமைச்சர் மகிந்தானந்த தெரிவித்துள்ளார்.

விவசாயிகளுக்கு நட்டஈடாக வழங்கப்படும் இயற்கை உரத்தை எவ்வாறு மதிப்பிடுவது? இந்த இயற்கை உரத்தை கொடுக்காதவர்களுடன் இந்த நாட்டிலுள்ள அப்பாவி விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாது என்று விவசாய அமைச்சர் கூறினார். இந்த நாட்டிற்கு ஏற்பட்ட மிகப் பெரிய கேடு என்னவெனில், நாட்டில் சில பயிர்கள் மற்றும் மரக்கறிகள் இயற்கை உரங்களால் உற்பத்தி செய்யப்பட்டன. இந்த அரசாங்கத்தின் முட்டாள்தனமான முடிவுகளால், அப்போதிருந்த இயற்கை விவசாயம் முற்றாக அழிந்தது விட்டது.

மக்கள் விளைவித்த இயற்கைப் பயிர்களை அழித்து விட்டனர், இந்நாட்டில் மரக்கறி பயிர்களுக்கு பெரும் கிராக்கி இருந்தது. இன்றைய உணவுப் பற்றாக்குறைக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும். அரசாங்கம் இப்போது சகலதையும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது. இந்த விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க முடியாது என்று கூறும் அரசாங்கம் 6.7 மில்லியன் டொலர்களை வழங்க ஒப்புக்கொண்டதை நினைவிற்கொள்ளுங்கள் - என்றார்.

# அரசாங்கத்தின் நெருக்கடி நிலைமைக்கு அதிகாரிகளின் செயற்பாடுகளே காரணம்

## அமைச்சர் சரத் வீரசேகர தெரிவிப்பு



அதிகாரிகளின் செயற்பாடுகளின் காரணமாகவே அரசாங்கம் தொடர்ச்சியான நெருக்கடியை சந்தித்து வருவதாகவும் சகல இடங்களுக்கும் அரசாங்கத்தை விமர்ச்சிக்க முடியாது என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் எட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நிகழ்வொன்றில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரண்டு முறைகளில் அரசாங்கத்தை விமர்சிக்க முடியும். ஒன்று முறையாக விமர்ச்சிக்க முடியும். அவ்வாறு இல்லாவிட்டால் இழிவுபடுத்தும் வகையில் விமர்சிக்கலாம்.

அனைத்து விடங்களையும் அரசாங்கத்தை விமர்சிப்பது சாதாரண விடயமல்ல. உதாரணமாக, சீமெந்து விலை அதிகரித்ததற்காக அரசாங்கத்தை திட்டமுடியாது. கடந்த காலங்களில் சீமெந்து இறக்குமதிசெய்யும்போது கப்பலுக்கான கட்டணமாக 1500 டொலர் செலுத்தப்பட்டது.

ஆனால், தற்போது கப்பலுக்கான கட்டணம் 15 ஆயிரம் டொலராக அதிகரித்துள்ளது. சமையல் எரிவாயு இறக்குமதியும் அவ்வாறானதொரு நிலைமையையே சந்தித்துள்ளது.

உர இறக்குமதிக்கு தடை விதிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தபோது, ஒன்றரை வருடத்துக்கு தேவையான இரசாயன உரம் நாட்டில் இருந்தது. அதனை முறையாக மக்களுக்கு பகிர்ந்தளித்தால் இந்த நிலைமை ஏற்படுவதற்கான வாய்ப்பு இல்லை. அதனால், சகல விடயங்களுக்கும் அரசாங்கத்தை விமர்சிக்க முடியாது.

உர விநியோகம் முறையாக கிடைக்காமைக்கு ஜனாதிபதிக்கு எந்தத் தொடர்பும் இல்லை. அதற்காக ஜனாதிபதியை குற்றஞ்சொல்லவும் முடியாது. அதிகாரிகளின் செயற்பாடுகளின் காரணமாகவே அரசாங்கம் நெருக்கடியை சந்தித்துள்ளது. ஆகவே, அரசாங்கம் மீதான விமர்சனங்கள் முறையாக அமையவேண்டும்.

கட்சிக்குள்ளும் அரசாங்கத்துக்குள்ளும் கூட்டணிக்குள் ஒழுக்கமான செயற்பாடுகள் இருக்கவேண்டும். அதனால் இந்த வருடத்தில் ஜனாதிபதி நேரடியான தீர்மானங்களை எடுப்பார். இல்லாவிட்டால் இந்த பயணத்தை செல்லமுடியாது. இது தொடர்பில் அமைச்சரவையிலேயே தீர்மானங்கள் எடுக்கப்படும் - என்றார்.

# ரிக்ரொக் ஆல் சர்ச்சை: இளைஞன் படுகொலை

கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில், வெல்லம்பிட்டியைச் சேர்ந்த 17 வயதான அப்துல் லத்தீப், ரிக்ரொக் சமூக ஊடக வலையமைப்பினால் ஏற்பட்ட மோதலால், படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

ரந்திய உயன தொடர்மாடி குடியிருப்புக்கு தனது நண்பர்களுடன் குறித்த இளைஞன், மோட்டார் சைக்கிளில் நேற்றுமுன்தினம் ( 03 ) சென்றுள்ளார்.

அவர்களை பின்தொடர்ந்து வந்த மற்றுமொரு தரப்பினர், ரிக்ரொக் வீடியோ தொடர்பில் வாக்குவாத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால், மறைத்து வைத்திருந்த கத்தியால் அவ்விளைஞனின் அடிவயிற்றில் குத்தியுள்ளனர்.

அதன்பின்னர், அங்கிருந்து அவர்கள் தலைமறைவாகிவிட்டதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது எனத் தெரிவித்த கிராண்ட்பாஸ் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புத்தளத்தில் டெங்கு ஒழிப்பு விசேட வேலைத்திட்டம்

(ரஸீன் ரஸ்மின்)

டெங்கு அபாயம் நிலவும் மாவட்டங்களில் நேற்றுமுதல் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில், புத்தளம் மாவட்டத்திலும் நேற்றுக் காலை இந்த விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப் பட்டுள்ளது.

கற்பிட்டி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட நுரைச்சோலை மற்றும் பூலாச்சேனை உள்ளிட்ட பல பிரதேசங்களில் நேற்றுக் காலை 9.00 மணிமுதல் இந்த விசேட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கற்பிட்டி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தைச் சேர்ந்த பொது சுகாதாரப் பரிசோதகர்கள், அதிகாரிகள் தலைமையில் முப்படையினரும் ஒத்துழைப்புடன் வீடு வீடாகச் சென்று பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.இதன்போது, 455 வீடுகள் பரிசோதிக்கப்பட்டு டெங்கு பரவும் இடங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன், அதனை அழிக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஜனநாயகம் இல்லாத அணி வேண்டாம்; ஐக்கிய மக்கள் சக்தியில் இணையுங்கள்

## சுசில் பிரேமஜயந்தவுக்கு மரிக்கார் எம்.பி. அழைப்பு

"ஜனநாயகம் இல்லாத அணியில் இருக்க வேண்டாம். எங்கள் பக்கம் வாருங்கள். இணைந்து பணியாற்றுவோம்."

- இவ்வாறு பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களிடம் நேற்று கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளர் எஸ்.எம்.மரிக்கார் எம்.பி. கூறியவை வருமாறு:-

"இது ஜனநாயக நாடு. கருத்துச் சுதந்திரம் இருக்கின்றது. குறிப்பாக, மக்கள் பிரதிநிதிக்கு மக்களின் மனநிலையைப் பிரதிபலிக்கும் உரிமை இருக்கவேண்டும். அந்தவகையில் மக்களின் குரலாகவே சுசில் பிரேமஜயந்த ஒலித்தார். அதற்காக அவர் பதவி நீக்கப்பட்டுள்ளதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.



ஜனநாயகம் இல்லாத, அடக்குமுறை தலைவிரித்தாடும், மக்களின் மனநிலையைப் புரிந்துகொள்ளாத கட்சியில் இனியும் இருக்கவேண்டாம். ஜனநாயகத்தை மற்றும் மக்களை நேசிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியில் இணையுமாறு அழைப்பு விடுக்கின்றோம்" – என்றார்.

# குருநாகல் வைத்தியசாலை வளாகத்தில் மருத்துவக் கழிவுகள்

குருநாகல் போதனா வைத்தியசாலை வளாகத்தில் மருத்துவக் கழிவுகள் குவிந்து கிடப்பதால், சுகாதாரப் பராமரிப்பில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் குப்பைகளை எரிக்கும் இயந்திரம் செயலிழந்துள்ளமையினால் வைத்தியசாலையில் பெருமளவிலான மருத்துவக் கழிவுகள் குவிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வைத்தியசாலைக்கு தினமும் அதிகளவான நோயாளிகள் வந்துசெல்கின்றனர்.

நோயாளிகள் சிகிச்சைபெறும் வார்டுகளுக்கு அருகில் மருத்துவக் கழிவுகள் குவிந்து கிடப்பதால், மருத்துவ ஊழியர்கள், மருத்துவமனை ஊழியர்கள், நோயாளிகள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகின்றனர்.




நியாயத்துக்காக குரல்கொடுக்கும் மாணவர் தலைவர்களின் புலமைப்பரிசிலை இல்லாதொழித்தமைக்கு எதிராகவும் மேலும் பல கோரிக்கைகளை முன்வைத்தும் களனி பல்கலைக்கழக மாணவர்கள், கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் நேற்று (04) பொதுமக்களின் கையெழுத்து பெறும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.
(படப்பிடிப்பு: ஏஷான் தசநாயக்க)

இனப்படுகொலை அரசாங்கத்தின் பிரதிநிதிகளை வல்வெட்டித்துறை பட்டத்திருவிழாவுக்கு விருந்தினர்களாக அழைக்கும் முயற்சிக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கண்டனம் வெளியிட்டிருக்கிறது.

வல்வெட்டித்துறை மண்ணில் இதுவரை காலமும் தமிழர் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில், பட்டத்திருவிழா மிகச் சிறப்பாக நடத்தப்பட்டு வந்திருந்தது. ஆனால், வழமைக்கு மாறாக, இவ்வாண்டு தமிழின விரோத சக்திகளின் வழிநடத்தலில், தமிழினத்தின் வாழ்வுரிமையைச் சிதைத்த, இனவழிப்பு அரசின் பிரதிநிதிகளை விருந்தினர்களாக்கி, அவர்களின் பங்குபற்றலுடன் இவ்விழாவை நடத்த முற்பட்டுள்ள அரச முகவர்களின் சதிமுயற்சிக்குள், ஏற்பாட்டுக் குழுவினரை சிக்கவைத்துள்ள இந்த செயற்பாடானது, தமிழின பண்பாட்டு அழிப்பின் தொடர்முயற்சியென மேற்படி முன்னணி சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறு தமிழின பண்பாட்டு அழிப்பின் தொடர்முயற்சியின் அங்கமாக, இப் பட்டத்திருவிழா நிகழ்வு நடைபெறுமாயின், தமிழின வரலாற்றின் கறைபடிந்த நிகழ்வாகவே, எதிர்வரும் காலங்களில் இந்நிகழ்வு வரலாற்றில் பதியப்படும். தமிழர் வரலாற்றில் பின்னிப்பிணைந்த பாரம்பரிய நிகழ்வான பட்டத்திருவிழாவில், இவ்வாறான கறைபடிந்த வரலாற்றுத் தவறை மேற்கொள்ளத் துணைபோக வேண்டாம் என விழாவின் ஏற்பாட்டாளர்களை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வேண்டி நிற்கின்றது.

தமிழ் மக்களுக்கு எதிரான பேரினவாத ஒடுக்குமுறை, இனப்படுகொலையாக விஸ்வரூபம் எடுத்தபோது, சிங்கள, தமிழ்த் தேசிய இனங்கள் மத்தியில் முரண்பாடுகள் முற்றின. ஒற்றையாட்சியின் கீழ் ஐக்கியமாக வாழமுடியாத நெருக்கடி நிலை தோன்றியபோது, சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அரசியல் சுதந்திரப்போராட்டம் உதித்த மண்ணில் நடக்கக் கூடிய ஒரு நிகழ்வுக்கு, தமிழினவழிப்பு அரசின் பிரதிநிதிகளை விருந்தினர்களாக்க முற்படும் பேரினவாத முகவர்களின் திட்டமிட்ட சதிவலைக்குள் சிக்காது, ஏற்பாட்டாளர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டும்.

சர்வதேச அரங்கிலுள்ள, தமிழ் மக்களுக்கான பொறுப்புக்கூறல் விடயங்களை, ஸ்ரீலங்கா அரசு முற்றுமுழுதாகப் புறக்கணித்தே வருகின்றது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் இன்றும் வீதிகளில் நின்று, நீதிவேண்டிப் போராடி வருகிறார்கள். தமிழர் தாயகம் மீது, திட்டமிட்டு சிங்கள மயமாக்கல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு, தமிழர்களின் பூர்வீக

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஜனவரி 05ஆம் திகதி, புதன்கிழமை

# பட்டம் விடும் விழாவிலும் அரசியலா?

நிலங்கள் அபகரிக்கப்பட்டு, கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு தொடரும் சூழ்நிலையில், தமிழினவழிப்பு அரசின் பிரதிநிதிகளை விருந்தினர்களாக அழைப்பதென்பதும், அதற்கு ஏற்பாட்டாளர்கள் தன்னிலை விளக்கம் கொடுப்பதென்பதும் ஒருபோதும் நியாயப்படுத்த முடியாத மிக மோசமான செயற்பாடாகவே அமையும்.

வீரமும், தியாகமும், அளப்பரிய அர்ப்பணிப்புகளும் நிறைந்த தமிழ் மண்ணில், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக, ஒரு உன்னதமான தேசிய விடுதலைப் போராட்டம் உதித்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மண்ணில், அற்ப நலன்களை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படும் தீர்மானங்கள் வரலாற்றில் என்றுமே மன்னிக்கப்பட முடியாதவையாகவே இருக்கும் என்பதைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்த விரும்புகின்றது.

எனவே, குறித்த பட்டத்திருவிழாவுக்கு இலங்கை இனப்படுகொலை அரசின் பங்காளிகளையும் அவர்களுக்குத் துணைநின்றவர்களையும் விருந்தினர்களாக அழைக்கும் முடிவை ஏற்பாட்டாளர்கள் உடன் நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் என்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சுட்டிக்காட்டியிருக்கிறது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் எழுத்துமூல அறிக்கையை இலங்கை அரசாங்கம் சமர்ப்பிக்க வேண்டிய நிலையில், அரசாங்கத்தின் பிரமுகர்களை அழைத்து இந்த பட்டத் திருவிழா நடத்துவது 2009ஆம் ஆண்டு நடைபெற்ற இனப்படுகொலையை சர்வதேச அரங்கிலிருந்து இல்லாது செய்வதற்குரிய அரசாங்கத்தின் இராஜதந்திர நடவடிக்கையே இதுவென மற்றுமொரு தரப்பில் சொல்லப்படுகிறது.

தமிழர் திருநாளான தைப்பொங்கலை முன்னிட்டு அதனை சிறப்பிக்கும் முகமாக வல்வை வாழ்மக்களால் வல்வெட்டித்துறை உதயசூரியன் உல்லாசக் கடற்கரையில் மாபெரும் பட்டப்போட்டியானது, ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றது. இப்பட்டப் போட்டியானது, 1994ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் வல்வெட்டித்துறை சனசமூக நிலையத்தால் நடத்தப்பட்டு வந்தது. பின், நாட்டில் நிலவிய யுத்த நிலைமை காரணமாக இந் நிகழ்வு கைவிடப்பட்டது. தொடர்ந்து 2010ஆம் ஆண்டிலிருந்து வல்வை விக்னேஸ்வரா சனசமூக சேவா நிலையத்தால் மிகவும் பிரமாண்டமாக இப் போட்டியானது நடத்தப்பட்டு வருகின்றது. வெறுமனே இதுவொரு பட்டம் விடுதலாக அல்லாமல் தமிழர் வாழ்வியலையும் மக்களிடையே ஒளிந்திருக்கும் கலையம்சங்களை வெளிக்கொணரும் ஒரு நிகழ்வாகவும் கருதப்படுகிறது.

இவ்வளவு காலம் எந்தப் பின்னணிகளையும் கொண்டிராத இந்த பட்டம் விடும் நிகழ்வு, இப்போது அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளது ஏன் என்ற சந்தேகங்கள் எழுகின்றன. வெறுமனே ஊர்மக்கள், மாவட்ட மக்கள் ஒன்றுசேர்ந்து கொண்டாடக்கூடிய இந்த திருவிழாவை பெரிய எடுப்பில் செய்ய நினைப்பதன் பின்னணி என்ன என்பதே சற்று உறுத்தலாக இருக்கிறது. விழா அமைப்பாளர்கள், நலன் விரும்பிகள் இதனை நன்கு ஆராய்ந்து நல்லபடி நடத்த முனைய வேண்டும்.

# வடக்கு - கிழக்கு இணைப்பை ஏற்கவே மாட்டோம்!

## - ஹரீஸ் எம்.பி. திட்டவட்டம்



**சமகால அரசியல் விடயங்கள் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸுடனான செவ்வி**

**கே: கூட்டணி அமைத்து நீங்கள் அரசாங்கத்துடன் இணையப்போவதாக வரும் செய்திகள் தொடர்பில் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து தனியான முஸ்லிம் கூட்டணியை உருவாக்கத் தீர்மானித்துள்ளனர் என்று சில ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தி உண்மைக்கு புறம்பான கற்பனையான செய்தியாகும். இந்த இட்டுக்கட்டப்பட்ட பொய்யான செய்தியை முதலில் முன்னணி இணைய ஊடகம் ஒன்றே வெளியிட்டிருந்தது. அதில் எவ்வித உண்மைகளுமில்லை என்பதை ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பில் இறைவன் மீது ஆணையிட்டு கூறிக்கொள்கிறேன். நாடுகடந்த புலி ஆதரவாளர்களின் அனுசரணையுடன் நடத்தப்படும் ஊடகமொன்று தமிழ்க் கட்சிகள் வடகிழக்கு இணைப்பை உறுதிப்படுத்தும் 13ஆம் திருத்தம் தொடர்பில் பேச்சுவார்த்தைகளை செய்துவரும் நிலையில், அதற்கு எதிராக வடக்கு, கிழக்கை சேர்ந்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்கள். எனவே, இந்த ஒப்பந்தத்தை செய்யவிடாமல் தடுத்துவிடுவார்கள் என்ற அச்சத்தின் காரணமாக முஸ்லிம் மக்களை திசைதிருப்பும் நோக்கிலும், இந்த முஸ்லிம் எம்.பிக்களின் நம்பகத்தன்மையை கேள்விக்குட்படுத்துவதற்காகவும் இவ்வாறான செய்தியை வெளியிட்டு மக்களை குழப்புகின்றனர். அவர்களின் தந்திரோபாய அரசியல் முன்னெடுப்பாக எங்களின் மீது சந்தேகங்கொள்ள செய்யும் வகையில் கற்பனையில் புனையப்பட்ட கதையை வெளியிட்டுள்ளனர் அதில் உண்மையில்லை.

**கே : எதிர்காலத்தில் புதிய கூட்டணி அமைப்பது தொடர்பில் ஏதாவது எண்ணம் இருக்கிறதா?**

புதிய கூட்டணி அமைப்பது பற்றியோ அல்லது மொட்டுடன் கூட்டணியை அமைத்து இணைவது தொடர்பிலோ, அரசாங்கத்தில் நேரடியாக இணைந்து அமைச்சர் பதவிகள் பெறுவது பற்றியோ கற்பனையில் கூட நாங்கள் நினைக்கவில்லை. இது தொடர்பில் நாங்கள் எவ்வித பேச்சுவார்த்தைகளையோ, ஆலோசனைகளையோ, நடவடிக்கை களையோ எடுக்கவில்லை என்பதை பொறுப்புடன் கூறிவைக்க விரும்புகிறேன். மக்களின் நலனுக்காக ஒன்றிணைந்து செயற்பட்டு வரும் நாங்கள் உரிமைசார்ந்த விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்திலும் நாடாளுமன்றத்துக்கு வெளியே ஊடகங்களிலும், பொதுநிகழ்வுகளிலும் குரல்கொடுத்து எங்களின் சமூக உணர்வை நிரூபித்து வருகிறோம்.

நான் தொடர்ந்தும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலேயே பயணிப்பதில் உறுதியாக இருக்கிறேன். ஏனைய சக நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவர்களுடைய கட்சிகளில் பயணிப்பதில் உறுதியாக இருக்கிறார்கள் என்று நம்புகிறேன். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை பலப்படுத்தி சமூக விடயங்களில் தொடர்ந்தும் கரிசனையுடன் செயற்படுவதில் உறுதியாக இருக்கிறேன்.

**கே : அரசாங்கத்துக்கு நீங்கள் வழங்கிய ஆதரவின் மூலம் அண்மைய நாட்களில் சமூகம் அடைந்த நன்மை என்ன?**

எமது நாட்டின் அரசாங்கம் பொருளாதார நெருக்கடியில் சிக்கிக்கொண்டிருக்கும் தருவாயில், நாங்கள் எங்கள் முஸ்லிம் சமூகம் சார்ந்த விடயங்களை அரசிலுள்ள சில இனவாத சக்திகள் குறிப்பாக, ஒரே நாடு ஒரே சட்டம் போன்றவர்கள் பல பாதிப்பான திட்டங்களை கொண்டுவர முனைந்தபோது அரசாங்கத்தின் தலைவர்களுடன் சமூகத்தின் சார்பில் பேசி சமூகத்துக்கு எதிரான விடயங்களை தடுத்து நிறுத்தி வருகிறோம். அந்த அடிப்படையில், முஸ்லிம் சமூகம் சார்ந்த பிரச்சினைகளை அரசாங்கம் எடுத்த எடுப்பில் தீர்மானிக்காத அளவுக்கு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த சுமுக நிலையை சீர்குலைக்க பல்வேறு சக்திகளும் பல திட்டங்களை தீட்டி முயற்சிகளை செய்துகொண்டிருக்கிறார்கள். மிக கவனமாக இந்த சமூகத்தை வழிநடத்தவேண்டும் என்பதனால் அநீதியை சந்தித்த முஸ்லிம்களின் சார்பில் நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணைகள், நாடாளுமன்ற விவாதங்கள், அமைச்சர்களின் சந்திப்புகள், பொதுவெளியிலான குரல் கொடுப்புகள் என நாங்கள் தீவிரமாக முஸ்லிம்களின் உரிமை விடயத்தில் கூட்டுப்பொறுப்புடன் செயலாற்றி வருகிறோம்.

முஸ்லிம்களின் வாழ்விடங்கள், வரலாற்று நகரங்கள், காணிப்பிரச்சினைகள், மத, கலாசார விடயங்கள் சம்பந்தமான பிரச்சினை களைப் பேசி அதற்கான தீர்வுகளை பெறக்கூடியளவுக்கு எங்களின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. இவ்வாறான நடவடிக்கைகளில் இருந்து எங்களை ஒதுங்கச்செய்ய வேண்டும் என்பதற்காக பலரும் மறைமுகமாக வேலைசெய்து கொண்டிருக்கிறார்கள். இவர்களின் சதிகளை முறியடித்து மக்கள் பணியை தூய்மையாக செய்ய நாங்கள் எப்போதும் தயாராகவே இருக்கிறோம்.

**கே: "13" தொடர்பிலான பேச்சுவார்த்தை கிழக்கில் சலசலப்பை உண்டாக்கியுள்ளது. அதை எப்படி பார்க்கிறீர்கள்?**

கிழக்கு மாகாணத்தை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் பல முஸ்லிம் சகோதரர்கள், பள்ளிவாசல் தலைமைகள், தேசிய பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் எனப்பலரும் என்னை நேரில் சந்தித்து தமிழ்க் கட்சிகளின் பேச்சுவார்த்தைகள் தொடர்பிலும், இந்திய பிரதமருக்கு அனுப்பவுள்ள ஆவணங்கள் தொடர்பிலும் கேள்வி கேட்கிறார்கள். இந்த பேச்சுவார்த்தைகளுக்கு கிழக்கில் உள்ள எந்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினருக்கும் அழைப்பு விடுக்கப்படாத சூழ்நிலையில், அந்த பேச்சுவார்த்தையின் கருப்பொருளை நாங்கள் உத்தியோகபூர்வமாக அறிந்துகொள்ள முடியாதுள்ளது. இருந்தாலும் தமிழ்க் கட்சிகளின் பேச்சுவார்த்தையில் எங்களின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கலந்து கொண்டிருப்பதனால் அது தொடர்பிலான தெளிவுகளை எங்களினால் பெறவேண்டியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கிழக்கு மாகாண மக்கள் மத்தியில் உள்ள பதற்றத்தையும் சந்தேகத்தையும் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டுள்ள தமிழ்க் கட்சிகளுக்கு உணர்த்தவேண்டிய பொறுப்பு கிழக்கு மக்களின் பிரதிநிதி என்ற அடிப்படையில் எனக்கிருக்கிறது. அவர்கள் இந்தியப் பிரதமருக்கு அனுப்பவுள்ள ஆவணத்தில் கையெழுத்திடும் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளதாக அறிகிறேன். இந்த விடயம் சம்பந்தமாக பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டுள்ள தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஐயாவிடமும் செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ. சுமந்திரன் போன்றோர்களிடம் நாங்கள் கூறிவைக்க விரும்புவது, கிழக்கு மக்களுக்கு அந்த ஆவணத்தில் உள்ள விடயங்களை தெளிவுபடுத்தியிருக்க வேண்டும் என்பதையும் 1987இலும் முஸ்லிம்களுக்கு இதே நிலைதான் இருந்தது என்பதையும் வடக்கு, கிழக்கில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்த ஆவணத்தின் நகல் பார்வைக்காக கூட வழங்கப்படவில்லை என்பதையே.

**கே : அந்த ஆவணத்தில் என்னென்ன விடயங்கள் அடங்கியுள்ளன என்பது பற்றி உங்களுக்கு தெரியுமா?**

எங்களுக்கு கிடைத்த நம்பத்தகுந்த தகவலின்படி, அந்த ஆவணத்தில் மிகப்பிரதானமாக சுயநிர்ணய உரிமை சம்பந்தமாகவும் சமஷ்டி சம்பந்தமாகவும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்தான 13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தவேண்டும் என்பது தொடர்பிலும் நிறைய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அறிகிறோம். எங்களை பொறுத்தமட்டில், தலைவர் அஷ்ரப் மிகத்தெளிவாக இருந்து 13ஆம் திருத்தச்சட்டம் வடக்கு, கிழக்கில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையாது என்று கூறியதுடன் 13ஆம் திருத்தச்சட்டம் என்பது மறைந்த பெருந்தலைவர் சட்ட முதுமாணி எம்.எச்.எம்.அஷ்ரப் முற்றாக நிராகரித்த ஒருவிடயம். 35 வருடங்களுக்கு பின்னர் அந்த சட்டமூலத்தை பார்க்கின்றபோது அது தமிழ் மக்களையும் திருப்திப்படுத்தவில்லை. தமிழ்த் தலைவர்களில் ஒருவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்கள் பகிரங்கமாகவே தமிழர்களுக்கு அதில் தீர்வில்லை என்று அறிவித்துள்ளனர். அதேபோன்றுதான் நாங்களும் கூறுகிறோம். இதை முஸ்லிம்களுக்கான தீர்வாக எடுத்துக்கொள்ள முடியாது.

முஸ்லிம் மக்கள் பற்றி அந்த ஒப்பந்தத்தில் ஒரு வார்த்தையேனும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. பாரத பிரதமருக்கு தமிழ்ப் பேசும் மக்களின் பிரச்சினைகளை எடுத்துக்கூறுவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண 13 அல்ல அதற்கும் மேல் பல சட்டங்கள் வரையப்பட்டு தீர்வு வழங்கப்பட வேண்டும். அதே நேரத்தில் வடக்கு, கிழக்கில் உள்ள முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கும் ஒரு தீர்வை எட்டவேண்டும். இதை ஒரு நியாயமான கோரிக்கையாக முன்வைக்கிறோம். அந்த ஆவணத்தில் முஸ்லிம் சமூகத்துக்கு சாதகமான விடயங்கள் என்னென்ன உள்ளன என்பது தொடர்பில் வெளிப்படையாக அறிவிக்கவேண்டும். குறைந்தபட்சம் வடக்கு, கிழக்கில் உள்ள எம்.பிக்களை அழைத்தாவது பேசவேண்டும்.

14ஆம் பக்கம் பார்க்க...

# இன்றைய நாளில்...

- 1492 – கிறிஸ்தோபர் கொலம்பஸ் லா எஸ்ப்பானியோலா தீவில் (இன்றைய எயிட்டி, டொமினிக்கன் குடியரசு) கால் வைத்தார். இத்தீவை அடைந்த முதலாவது ஐரோப்பியர் இவரே.
- 1837 – இலங்கையில் முதலாவது சீனித் தொழிற்சாலை தும்பரை என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1936 – சோவியத் ஒன்றியம் தனது புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தியது. கிர்கிஸ்தான் சோவியத் ஒன்றியத்துக்குள் முழுமையான குடியரசாக அறிவிக்கப்பட்டது.
- 1952 – லண்டனில் ஏற்பட்ட பெரும் புகைமாசுப் பேரிடர் காரணமாக அடுத்தடுத்த மாதங்களில் 12,000 பேர் வரை உயிரிழந்தனர், 200,000 பேர் வரை பாதிக்கப்பட்டனர்.
- 1958 - எஸ்.ரி.டி. தொலைபேசி இணைப்பு சேவை ஐக்கிய இராச்சியத்தில் இரண்டாம் எலிசபெத் மகாராணியால் ஆரம்பிக்கப்பட்டது.
- 1995 – இலங்கை அரசு யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகளிடம் இருந்து தாம் முழுமையாகக் கைப்பற்றியதாக அறிவித்தது.
- 2003 – இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் குளிர்திரவ ஏவுகணையை வெற்றிகரமாக சோதித்திருப்பதாக அறிவித்தது.
- 2017 – 2014 குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் தடை செய்யப்பட்ட போதைப் பொருள் பயன்படுத்திய குற்றத்துக்காக 2018 குளிர்கால ஒலிம்பிக்கில் போட்டியிட ரஷ்யாவுக்கு சர்வதேச ஒலிம்பிக் குழு தடை விதித்தது.

## நக்கல் நமசிவாயம்

**அரசாங்க ஊழியர்கள் நாட்டுக்கு சுமை என்று சொன்ன ஆக்களே அரச ஊழியர்களுக்கு விசேட கொடுப்பனவை வழங்குறாங்கள் எண்டால் எலெக்சன் ஏதும் வரப்போகுதோ...**



# வைத்திய நிபுணர்களின் இடமாற்ற சபையை மாற்றமின்றி முன்னெடுக்க பிரதமர் ஆலோசனை

வைத்திய நிபுணர்களின் இடமாற்ற சபையை இதுவரை செயற்பட்ட விதத்திலேயே எதிர்காலத்திலும் செயற்படுத்துமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினருடன் அலரி மாளிகையில் நேற்று (04) நடைபெற்ற கலந்துரையாடலின்போது முன்வைக்கப்பட்ட கருத்துகளை கருத்திற்கொண்டு பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுவரை காணப்பட்ட செயல்முறையை சில அதிகாரிகளின் விருப்பத்திற்கேற்ப மாற்ற முயற்சிப்பதனூடாக நெருக்கடிகள் ஏற்படும் என சுட்டிக்காட்டிய பிரதமர், அரசியல் நோக்கில் சென்று அரசாங்கத்தை அசௌகரியத்திற்கு உட்படுத்தாது தொழிற் சங்கங்களுடன் நிறுவன சட்டவிதிகளுக்கு அமைவாக செயற்படுமாறு சுகாதார அமைச்சு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

வைத்திய நிர்வாகத்தை சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட என இரு பிரிவுகளாக பிரித்து செயற் படுத்தாது ஒரே அடிப்படையில் செயற்படுத்து வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் சார்பில் கருத்து தெரிவித்த விசேட வைத்திய நிபுணர் அனுருத்த பாதெனிய, இதன்போது முன்மொழிவொன்றை முன்வைத்தார்.





குறித்த சந்தர்ப்பத்தில் சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல, பிரதமரின் செயலாளர் காமினி எஸ். செனரத், சுகாதார அமைச்சின் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் எஸ்.எச்.முனசிங்க, தேசிய சம்பள ஆணைக்குழுவின் செயலாளர் சந்திரானி சேனாரத்ன, பிரதமரின் மேலதிக செயலாளர் சமிந்த குலரத்ன, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணரத்ன, அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பணிப்பாளர் நாயகம் சந்தன குமாரசிங்க, பிரதமரின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் பிரியங்க நாணயக்கார, பிரதமரின் உதவிச் செயலாளர் பாத்திமா பர்சானா, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் விசேட வைத்திய நிபுணர் அனுருத்த பாதெனிய உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## ශ්‍රී ලංකා මහ බැංකුව இலங்கை மத்திய வங்கி CENTRAL BANK OF SRI LANKA — 05.01.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 030 3206 | 036 32 1 |
| கனேடியன் டொலர் | 043 4283 | 05 3 12 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 2 7673 | 21 0272 |
| யூரோ | 112 8422 | 121 6684 |
| ஜப்பான் யென் | 0 6 83 | 0 6631 |
| சிங்கப்பூர் டொலர் | 035 14 0 | 04 8482 |
| ஸ்ரேலிங் பவுன் | 155 2 | 163 6 24 |
| சுவிஸ் பிராங்க் | 104 054 | 111 5641 |
| ஐ.அ.டொலர் | 087 4 7 | 1 1 8881 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 42 3436 |
| குவைட் | குவைட் தினார் | 550 0022 |
| ஓமான் | ஓமான் றியால் | 408 3627 |
| கட்டார் | கட்டார் றியால் | 43 82 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 42 162 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 43 34 6 |

# தமிழக மீனவர்கள் 13 பேரின் விளக்கமறியல் நீடிப்பு

(யாழ். செய்தியாளர்)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களின் விளக்கமறியல் 18ஆம் திகதிவரையில் நீடிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கடலில் கடந்த டிசம்பர் மாதம் 21ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட குறித்த 13 மீனவர்களும், மறுநாள் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டனர்.

இந்நிலையில், நேற்று (04) இரண்டாவது தவணையாக குறித்த வழக்கு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் நீதிபதி ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது 13 மீனவர்களின் விளக்கமறியலை எதிர்வரும் 18ஆம் திகதிவரையில் நீதவான் நீடித்து உத்தரவிட்டார்.

## தத்துவம் தங்கராசு



*கல்வி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவை பதவியிலிருந்து நீக்கியுள்ளார் ஜனாதிபதி.*

*விவசாயிகளின் பிரச்சினையை தீர்க்க முடியாத விவசாய அமைச்சர் பெயில் என்றும், அரச நிர்வாகத்தை செய்ய முடியாதவர்கள் சரியில்லையென்றும் கூறியமைக்காக சுசில் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.*

*உண்மையில் இப்படியான கருத்துகளை உள்வாங்கி அரசாங்கம் பக்கம் உள்ள குறைநிறைகளை நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும். ஏனெனில், சுசில் ஒன்றும் சாதாரண ஆள் கிடையாது. பெரும் கட்சிகளின் செயலராக இருந்திருக்கிறார். அரசியலிலும் நல்ல அனுபவம். சிரேஷ்ட சட்டத்தரணி.*

*அவரை நீக்கியிருப்பதன் மூலம் அடுத்த பொதுத் தேர்தலில் அவர் இலகுவாக வெற்றிபெற அவருக்கு மறைமுக உதவி செய்யப்பட்டுள்ளது. மக்களின் பிரச்சினையை பேசப்போனதால்தான் பதவியை இழந்தார் என்ற அனுதாபமும் அவருக்கு இருந்துகொண்டிருக்கும்.*

# பதவி நீக்கப்பட்ட சுசில் மலையக மக்கள் சார்பில் பேசியவர்

## மனோ எம்.பி. தெரிவிப்பு



"நுவரெலிய மாவட்டத்தில் புதிய பிரதேச சபைகள் அமைத்தேயாக வேண்டும்" என நான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கடும் வாய்த்தர்க்கம் செய்தபோது, பிரதமர் ரணில், "நுவரெலியாவில் புதிய சபைகள் இப்போது வேண்டாம். அம்பாறை மாவட்டத்தில் புதிய சபைகள் பிறகு அமைக்கப்படும்போது, இதையும் அமைப்போம். ஆகவே, இப்போது இதை ஒத்திவைப்போம்" என கூறியபோது, எனக்கு ஆதரவாக பேசிய முதல் சிங்கள அமைச்சர், சுசில் பிரேமஜயந்ததான் என தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன் கூறினார்.

பதவிநீக்கம் செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தொடர்பில், மனோ எம்.பி. மேலும் கூறியதாவது,

அன்றைய ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவின் கொழும்பு பெஜட் வீதி இல்லத்தில் நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தில், "நுவரெலியா மாவட்டத்தில், புதிய பிரதேச சபைகள் அமைத்தேயாக வேண்டும்" என நான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கடும் வாய்த்தர்க்கம் செய்தபோது பிரதமர் ரணில், "நுவரெலியாவில் புதிய சபைகள் இப்போது வேண்டாம். அம்பாறை மாவட்டத்தில் புதிய சபைகள் பிறகு அமைக்கப்படும்போது, இதையும் அப்போது அமைப்போம். ஆகவே, இப்போது இதை ஒத்திவைப்போம்" என கூறியபோது, எனக்கு ஆதரவாக பேசிய முதல் சிங்கள அமைச்சர்சுசில் பிரேமஜயந்ததான்.

நுவரெலியா மாவட்டத்தில் இருக்கின்ற மிகப்பெரிய அம்பகமுவ, நுவரெலியா பிரதேச சபைகளை பிரித்து புதிய பிரதேச சபைகளை அமைக்க வேண்டும் என நான் கோரியபோது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, "அம்பாறை மாவட்டத்திலும் புதிய பிரதேச சபைகளை அமைப்பதாக நான் தேர்தல் பிரசாரத்தின்போது, அமைச்சர் ரவுப் ஹக்கீமின் மேடையிலிருந்து அந்த மக்களுக்கு உறுதியளித்துள்ளேன். அந்த சபைகள் இன்னமும் அமைக்கப்படவில்லை. ஆகவே, அம்பாறை மாவட்டத்தில் புதிய சபைகள் பிறகு அமைக்கப்படும் போது, இதையும் அப்போது அமைப்போம். இப்போது இதை ஒத்திவைப்போம். இப்போது இதை அமைத்தால், ஏன் நுவரெலியாவில் மட்டும் அமைக்கிறீர்கள்? ஏன் அம்பாறையில் அமைக்கவில்லை? என்ற குற்றச்சாட்டு எழும்" - என்றார்.

"அம்பாறை மக்களுக்கு நீங்கள் வாக்குறுதி அளித்திருந்தீர்கள் என்றால் அதை நிறைவேற்றுங்கள். அது உங்களுக்கும் அமைச்சர் ரவுப் ஹக்கீமுக்கும் இடைப்பட்ட பிரச்சினை. ஆனால், நுவரெலியா வேறு. அம்பாறை வேறு. தமிழ் முற்போக்கு கூட்டணியாக நாங்களும் எங்கள் மக்களுக்கு வாக்குறுதி அளித்துள்ளோம். நாட்டில் ஏனைய பிரதேசங்களில் 25,000 பேருக்குகூட ஒரு பிரதேச சபை இருக்கும் போது, தலா இரண்டரை இலட்சம் ஜனத்தொகை கொண்டதாக அம்பகமுவ, நுவரெலிய பிரதேச சபைகள் 30 வருடங்களாக செயற்படுகின்றன. இது மிகப்பெரும் அநீதி. பாரபட்சம். எமக்கு கட்டாயம் புதிய பிரதேச சபைகள் அமைத்தேயாக வேண்டும்" என சிங்களத்தில் கடுமையாக சத்தம் போட்டேன்.

ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவின் பெஜட் வீதி இல்லத்தில் நடைபெற்ற அந்த விசேட அமைச்சரவைக் கூட்டத்தில், இதை சொல்லி விட்டு, நான் அமர்ந்திருந்த நாற்காலியை உதைத்துவிட்டு, கூட்டத்திலிருந்து வெளியேற கோபத்துடன் நான் எழுந்தபோது, எனக்கு ஆதரவாக "மனோ எமத்திதுமாகே இல்லீம இதாம சாதாரணய்" (அமைச்சர் மனோவின் கோரிக்கை மிகவும் நியாயமானது) என சொன்ன நண்பர்தான், அன்றைய அமைச்சர் சுசில் பிரேமஜயந்த.

அதன் பிறகுதான் இன்று நுவரெலியாவில் செயற்படும், நோர்வூட், மஸ்கெலியா, அம்பகமுவ, அக்கரப்பத்தனை, தலவாக்கலை, நுவரெலியா ஆகிய ஆறு புதிய பிரதேச சபைகளை அமைக்கும் வர்த்தமானியை வெளியிட அன்றைய அரசு இணங்கியது எனத் தெரிவித்துள்ளார்.

# அமைச்சர் டக்ளஸின் நிதியொதுக்கீட்டில் பாசையூர் கடலில் வெளிச்சவீடு

(யாழ். செய்தியாளர்)

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அறிவுறுத்தலுக்கமைய பாசையூர் கடற்கரை பகுதியில் வெளிச்சவீடு அமைப்பதற்கான ஆரம்பகட்ட பணிகளை முன்னெடுப்பது தொடர்பான கள ஆய்வுப் பணிகள் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சுதர்சன், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நிர்வாக பொறுப்பாளர் சிவகுரு பாலகிருஸ்ணன் மற்றும் துறைசார் அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினரால் நேற்று (04) மேற்கொள்ளப்பட்டது.

பல தசாப்த காலமாக பாசையூர், குருநகர், சாவற்கட்டு, காக்கைதீவு, நாவாந்துறை உள்ளிட்ட பல பிரதேசங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் சங்கமித்து தமது தொழில் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பகுதியாக காணப்படும் இந்த இடத்தில் வெளிச்சவீடு இன்மையால் கரையை அடையாளப்படுத்துவதில் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதாக கடற்றொழிலாளர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் குறித்த கடற்றொழிலாளர்கள் விடுத்திருந்த வேண்டுகோளுக்கிணங்க கடற்றொழில் அமைச்சினால் குறித்த திட்டத்தை மேற்கொள்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த பகுதிக்கு சென்றிருந்த குழுவினர் குடாக்கடல் பகுதியில் ஏற்கனவே முற்றாக செயலிழந்திருக்கும் வெளிச்சவீட்டின் நிலைமைகளை பார்வையிட்டதுடன், அந்த இடத்திலேயே புதிதாக 30 அடி உயரமான புதிய வெளிச்சவீடு ஒன்றை கட்டுமானம் செய்வதற்கான முன்னாயத்த செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.



சுமார் 4 இலட்சத்து 61 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிதியொதுக்கீட்டில் முன்னெடுக்கப்படும் குறித்த கட்டுமானப் பணி சுமார் 15 நாடுகளுக்கும் நிறைவுறுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, யாழ்ப்பாணம் ஐந்து மாடி குடியிருப்பு பகுதி மக்களின் பாதுகாப்பு கருதி குறித்த பகுதியிலுள்ள நீர்த்தாங்கியில் இடிதாங்கி அமைக்கும் பணியும் முன்னெடுக்கப்பட்டுள்ளது

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிதி ஒதுக்கீட்டில் முன்னெடுக்கப்படும் குறித்த பணிகளையும் இன்றையதினம் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சுதர்சன், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட நிர்வாக பொறுப்பாளர் சிவகுரு பாலகிருஸ்ணன் மற்றும் துறைசார் அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

குறித்த திட்டம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிதியொதுக்கீட்டில் 5 இலட்சம் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸார் முன்னிலையில் அடாவடி; வவுனியாவில் நால்வர் அதிரடியாக கைது





(வவுனியா செய்தியாளர்)

வவுனியா முதலாம் குறுக்குத் தெருவில் நேற்று (04) பிற்பகல் பொலிஸார் முன்னிலையில் அடாவடியில் ஈடுபட்ட இருவர் உட்பட நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வர்த்தக நடவடிக்கைகள் அதிகமுள்ள வவுனியா முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள கைத்தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு சென்ற சிலர் அங்கிருந்தவர்களுடன் முரண்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கு ஆதரவாக பண்டாரிகுளம் மற்றும் கோவில்குளம் பகுதிகளிலிருந்து முதலாம் குறுக்குத் தெருவிற்கு குழுக்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர் .

முரண்பாட்டில் ஈடுபட்ட இருதரப்பினருக்கும் இடையே கைகலப்பும் இடம்பெற்றுள்ளதாகவும் சம்பவ இடத்திற்குச் சென்ற குழுக்கள் சிலரிடம் கோடரி மற்றும் அபாயகரமான ஆயுதங்களும் வைத்திருந்ததாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற பகுதிக்குச் சென்ற பொலிஸார் இரண்டு மணிநேர விசாரணைகளின் பின்னர் குறித்த வர்த்தக நிலையத்தை மூடிவிட்டு அங்கிருந்த இருவரையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர்.


இதனிடையே வெளியே அவர்களுக்கு ஆதரவாக இரு குழுக்களின் ஆதரவாளர்கள் பலரும் நின்றிருந்தனர்.

அதில் சில செல்வாக்கானவர்கள் பொலிஸாருடன் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட முற்பட்டபோது பொலிஸார் முன்னிலையில் அடிதடியில் ஈடுபட்ட இருவரையும் கைதுசெய்தபோது அவர்களுக்கு ஆதரவாக வந்த பலர் தப்பிச்சென்றுவிட்டனர்.

அங்கு குழுமிருந்தவர்களை விரட்டிய பொலிஸார், நிலைமைகளை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்ததுடன் இச்சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஓய்வுபெற்ற ஆசிரியர் விபத்தில் உயிரிழப்பு

(யாழ் நிருபர்)



யாழ்.மாவட்ட செயலகத்திற்கு அண்மையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் பிரபல அளவையியல் ஆசிரியர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியரான வேலுப்பிள்ளை யுகபாலசிங்கம் என்பவரே உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் இரவு மாவட்ட செயலகத்தை அண்மித்த வீதியில் பதில் நீதிவான் ஒருவருடைய கார் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் சடுதியாக காரின் கதவு திறக்கப்பட்டுள்ளது.

அந்நேரம் அந்த வீதியால் பயணித்த ஆசிரியர் காரின் கதவு மீது மோதி வீதியில் விழுந்துள்ளார். அதன்போது, பின்னால் வந்த பஸ் முதியவர் மீது மோதியுள்ளது.

குறித்த ஆசிரியர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்து இடம்பெற்றவுடன் காயமடைந்தவரை வைத்தியசாலையில் உடனடியாக அனுமதிக்க விபத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என உயிரிழந்த ஆசிரியரின் உறவினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அதேவேளை, குறித்த பதில் நீதவானும், அவரது சாரதியும் நேற்று பொலிஸ் நிலையத்திற்கு சென்று வாக்குமூலம் வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ள நிலையில், பதில் நீதவானின் சாரதியும், பஸ் சாரதியும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# அரசாங்கத்தின் மாவுக்கான மானியத்தால் பெருந்தோட்ட மக்கள் கடும் அதிருப்தி

## பண்டிகை காலத்துக்கான சலுகைகளை வழங்குமாறும் கோரிக்கை

(யோ.தர்மராஜ்)

2022ஆம் ஆண்டு இடம்பெற்ற முதல் அமைச்சரவைக் கூட்டத்தின்போது மக்களுக்கும் அரச ஊழியர்களுக்கும் அரசாங்கத்தினால் மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி, பெருந்தோட்டங்களில் மாவின் பாவனை அதிகம் என்பதால் மாதமொன்றுக்கு 80 ரூபா அடிப்படையில் 15 கிலோ மாவை மானிய அடிப்படையில் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் அறிவித்துள்ளது.

எனினும், இந்த மாவுக்கான மானியத்தினால் மக்கள் பெரும் அதிருப்தியடைந்துள்ளனர். தங்களுக்கான நாட்சம்பளமும் உரிய முறையில் கிடைக்காதபோது, மாதமொன்றுக்கு 15 கிலோ மாவுக்கு மாத்திரம் மானியம் வழங்கியுள்ளமை போதுமானதாக இல்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பெருந்தோட்ட மக்களுக்கு நாட்சம்பளம் ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கு தீர்மானங்கள் எடுக்கப்பட்டது தொடக்கம் அது வெறும் தீர்மானமாகவே இருக்கின்றது. குறிப்பாக, நாட்சம்பள முறையாக வழங்கப்படாததோடு, சில நேரங்களில் வேலை நாட்களின் எண்ணிக்கை குறைக்கப்படுவதால் 5 ஆயிரம் தொடக்கம் 7 ஆயிரம் வரையான சம்பளத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இதனால், தங்களுக்குத் தேவையான பொருட்களைக்கூட கொள்வனவு செய்யமுடியாத இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளபோது, அரசாங்கத்தினால் மாவிற்கு மாத்திரம் மானியம் வழங்கியுள்ளதோடு, அந்த மானியமும் உரிய முறையில் கிடைக்கப்பெறுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளதால் அரசின் மானியம் குறித்து மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

வார நாட்களில் பெருந்தோட்டப் பகுதிகளில் பொங்கல் திருநாள் கொண்டாடப்படவுள்ள நிலையில், அரசின் இந்த மானிய முறைமை மக்களை மேலும் அசௌகரியத்திற்கு தள்ளியுள்ளது. தங்களுக்கான சம்பளமே உரிய முறையில் கிடைக்காதபோது, அரசின் இந்த மானியம் எங்களுக்கு எவ்விதத்திலும் திருப்தியானதாக இல்லை எனவும் மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

உற்சவ காலத்தில் தங்களுக்குத் தேவையான பொருட்களை மானிய முறையில் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமாக இருந்தால் அது எமக்கு பெரும் உதவியாக அமையும் எனவும் மக்கள் கோரிக்கைவிடுக்கின்றனர்.

# இயந்திரக் கோளாறை திருத்துவதற்கு முயற்சித்த பஸ் சாரதி உயிரிழப்பு




(அருண் யுகேஷ்)

தெஹியோவிட்ட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெஹியோவிட்ட பழைய பஸ் தரிப்பு நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த தனியார் பஸ் ஒன்றை அதன் சாரதி இயக்குவதற்கு முற்பட்டுள்ளார். எனினும், இயந்திரக் கோளாறு காரணமாக இயங்காத நிலையில் பஸ்ஸுக்கு கீழே சென்று அதனை திருத்துவதற்கு முற்பட்டபோது, பஸ் நகர்ந்ததால் அதில் சிக்குண்டு உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கலபிட்டமட, இம்புள்கொட பிரதேசத்தைச் சேர்ந்த மெடிவில ஆசாரிகே சானக துலிப் விஜேவங்ச என்ற 25 வயதுடைய இளைஞன் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை தெஹியோவிட்ட பொலிஸார் மேற்கொண்டுவருவதுடன், இறந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக அவிசாவளை மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.



பண்டாரவளை நகரில் எரிவாயு சிலிண்டரை கொள்வனவுசெய்வதற்கு மக்கள் நேற்று (04) வரிசையில் காத்திருந்தனர். ஆனாலும் இவர்களில் 20 பேருக்கு மட்டுமே அனுமதி இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வனுமதி இலக்கங்கள் வழங்கியவர்களுக்கு மட்டுமே, எரிவாயு சிலிண்டர் வழங்கப்படும் என விற்பனை நிலையத்தில் கூறப்பட்டபோதிலும், மக்கள் தொடர்ந்தும் வரிசையில் காத்துக்கொண்டிருக்கின்றனர். (படங்கள் : பதுளை நிருபர்)

# அரசியல்வாதிகளும் அரச ஊழியர்களும் தங்களின் பொறுப்பை உணராதவரை நாட்டை மீட்க முடியாது

## பிரமித பண்டார தென்னகோன் எம்.பி. தெரிவிப்பு

(மாத்தளை நிருபர்)

நாட்டைக் கட்டியெழுப்பிட அரசியல்வாதிகளும் அரச சேவையாளர்களும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளை நன்கு உணர்ந்து செயல்படாதவரை இந்நாட்டை ஒருபோதும் கட்டியெழுப்ப முடியாது - என மாத்தளை மாவட்ட பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரமித பண்டார தென்னகோன் தெரிவித்தார்.



2022ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட நிதி ஒதிக்கீடு சம்பந்தமாக அரச சேவையாளர்களை தெளிவுபடுத்தும் முக்கிய நிகழ்வு நாடாளுமன்ற உறுப்பினரின் இல்லத்தில் இடம்பெற்றபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

கடந்த காலங்களில் நம்நாடு கொவிட்-19 காரணமாக பல சவால்களை எதிர்நோக்கி வந்தது. இதிலிருந்து மீள்வதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு மேற்கொண்ட துரித நடவடிக்கை காரணமாக இந்த நாட்டை கொவிட் தொற்றுலிருந்தும் மீட்டுக்கொள்ள முடிந்தபோதும் கொரோனா அலை தற்பொழுது ஒமிக்ரோன் என்ற புதிய உருவில் நம்நாட்டில் ஊடுறுவச்செய்துள்ளது. தற்போது, மீண்டும் ஒரு சவாலுக்கு முகங்கொடுக்கவேண்டியுள்ளது.

நம் நாட்டில் தற்பொழுது பிரச்சினைக்கு மேல் பிரச்சினை தலைதூக்க ஆரம்பித்துள்ளது. இதை நம் நாட்டு மக்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். தற்பொழுது நம் நாட்டில் மாபெரும் பொருளாதார பிரச்சினை தலைதூக்க ஆரம்பித்துள்ளது. இதை உணர்ந்து பொதுமக்கள் பாதிக்காதவண்ணம் அரச சேவையாளர்கள் பணிபுரிய வேண்டும். இதை புரிந்து செயற்படாவிட்டால் எமது பயணம் தோல்வியிலேயே முடியும். எனவேதான் அரசியல்வாதிகளும் அரச சேவையாளர்களும் தனக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளை புரிந்து பொறுப்புடன் செயல்பட வேண்டும்.

எமது நாட்டில் சுமார் 14 ஆயிரத்து 22 கிராம சேவக பிரிவுகள் உள்ளனர். இப்பிரிவுகளிலுள்ள பொதுமக்களின் பிரச்சினைகளை தீர்த்திட சுமார் 70 ஆயிரம் அரச உத்தியோகத்தர்கள் பணிபுரிகின்றனர்.

அரசியல்வாதிகளும் அரச சேவையாளர்களும் ஒன்றிணைந்தால் வீழ்ச்சியடைந்துவரும் நாட்டை மீட்கலாம். நாட்டை கட்டியெழுப்ப அரசியல்வாதிகள் அரசு சேவையாளர்கள் ஒன்றிணைந்து செயல்படும்போது அதற்கு உந்துசக்தியாக ஊடக நிறுவனங்களும் ஊடகவியலாளர்களும் பக்கபலமாக செயல்பட வேண்டும்.

இந்த நாட்டில் நல்லது செய்து நல்ல பெயரை பெற்றுக்கொண்டது யார்? எப்படியென்றால் இலவச கல்வியின் தந்தையென பொதுமக்களால் புகழாரம் சூழப்பட்ட கன்னங்கரா தேர்தலில் போட்டியிட்டபோது அவரை தோல்வியடையச் செய்து அவரை வீட்டுக்கே அனுப்பிவைத்தவர்கள்.

உள்நாட்டு, வெளிநாட்டு வணிக சேவையை துரிதப்படுத்த கப்பலொன்றை கொள்வனவுசெய்த, டீ.பி.ஜீ. கலுகல்லையை கப்பல் கொள்ளையென தூற்றி தேர்தலில் தோற்கடித்து வீட்டுக்கே அனுப்பி வைத்தவர்கள்.

காணி சீர்திருத்த ஆணைக்குழுக்கு சொந்தமாக காணிகளை வறுமையிலுள்ள மக்களுக்கு வழங்கி அவர்களின் வாழ்க்கையில் விளக்கேற்றிவைத்த சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாரை தூசித்து அம்மையாரை ஆட்சியிலிருந்து விரட்டி அடித்தவர்கள் நம் நாட்டவர்கள்.

மகாவலி கங்கையின் ஸ்தாபகர் என புகழாரம் செய்யப்பட்ட காமினி திஸாநாயக்கவை மகாவலி கள்வர் என்றும் மூன்று தசாப்த கால யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்த மஹிந்த ராஜபக்ஷவையும் தூசித்து அவரின் அரசியல் வாழ்வுக்கு சேறு பூசிக்கொண்டிருப்பதும் நம் நாட்டவர்களே.

ஆகவே ஒருவன் செய்யும் சேவை அவன் உயிருடன் இருக்கும்போதே பாராட்டப்பட வேண்டும். அவன் இறந்த பின் அவனை பாராட்டுவது கண்மூடிய பிறகு சூரிய நமஸ்காரம் செய்வது போன்றதாகும் - என்றார்.

மலையக
செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# அலுவலக நேரங்களில் அரசியல் பேசி காலத்தை வீணடிக்காதீர்கள்; எடுக்கும் சம்பளத்திற்கு நேர்மையான சேவையை எதிர்பார்க்கின்றேன்

## ஊவா மாகாண சபை அதிகாரிகளுக்கு ஆளுநர் அறிவுறுத்தல்



அலுவலக நேரங்களில் ஆங்காங்கே கதை சொல்லித் திரிய வேண்டாம், அரசியல் பேசி நேரத்தை வீணடிக்க வேண்டாம், உங்களது கடமைகளைச் சரியாக நிறைவேற்றுங்கள், நீங்கள் எடுக்கும் சம்பளத்திற்கு நேர்மையான சேவையை நான் எதிர்பார்க்கின்றேன் - என ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாண ஆளுநர் அலுவலகம் மற்றும் ஊவா மாகாண சபை அதிகாரிகள் சமய நிகழ்வுகளை நடத்தி, செயல்திறன் மிக்க அரச சேவைக்கான உறுதிமொழி வழங்கி 2022ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (03) ஊவா மாகாண சபை வளாகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஆளுநர்,

2021ஆம் ஆண்டில் கொவிட் பரவலைக் கட்டுப்படுத்துவதில் நாம் வெற்றிகண்டுள்ளோம். எனினும், பொருளாதார ரீதியில் நாம் பெரிதும் பாதிக்கப்பட்டோம். சுற்றுலாத்துறை முழுமையாக வீழ்ச்சியடைந்தது. சுற்றுலா விடுதிகளில் பணிபுரிந்த பல இலட்சம் பேருக்குத் தொழில் இல்லாமல்போனது.

இதுபோன்ற பல பொருளாதார நெருக்கடிகளுக்கு அரசு முகங்கொடுக்க நேர்ந்தாலும் அரச ஊழியர்களின் சம்பளத்தை அரசாங்கம் ஒருநாளும் தாமதிக்காமல் வழங்கியது. அதேபோன்று வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மக்களுக்கும் அரசாங்கம் பிரதேச சபைகளின் ஊடாக உதவிகளை வழங்கியது.

பாடசாலைகள் மூடப்பட்டன, மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. இவை அனைத்துக்கு மத்தியிலும் நாட்டின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அரசாங்கம் தொடர்ந்து முன்னெடுத்தது.

ஜனாதிபதியின் பிரதிநிதி என்றவகையில் ஊவா மாகாணத்தில் உங்களால் முன்னெடுக்கப்படும் அரச சேவையை நாம் மிகவும் மதிக்கின்றோம். திறமையான, வேலைசெய்ய விருப்பமான அரச ஊழியர்கள் எம்முடன் இணைந்திருப்பது எமக்கு பெரும் சக்தியாகவும், சந்தோஷமாகவும் உள்ளது.

பொதுமக்கள் வழங்கும் வரியிலிருந்து நாம் சம்பளம் பெறுகிறோம். அதற்கு நாம் நேர்மையானவர்களாக இருக்கவேண்டும். அரச ஊழியர்கள் என்றவகையில் நாட்டின் முன்னேற்றத்திற்கு எமது அயராத ஒத்துழைப்பை வழங்க இந்த வருடமும் நாம் திடசங்கற்பம் பூணுவோம்.

அலுவலக நேரங்களில் ஆங்காங்கே கதை சொல்லித் திரிய வேண்டாம், அரசியல் பேசி நேரத்தை வீணடிக்க வேண்டாம், மேலும் மூன்று வருடங்களுக்கு ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ இந்த நாட்டை முன்னெடுத்துச் செல்வார். எமக்கு எமது நாட்டை அபிவிருத்திசெய்ய முடியும்.

எமது நாட்டின் எதிர்காலம் தொடர்பில் எமக்கு நம்பிக்கை வைக்கமுடியும். அந்நிய செலாவணி குறித்து எமக்குப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. டொலர் பற்றாக்குறை காணப்படுகிறது. அவை அனைத்தையும் பரிபூரணப்படுத்திகொண்டு நாம் முன்னோக்கிச் செல்வோம். உங்களது கடமைகளைச் சரியாக நிறைவேற்றுங்கள். நீங்கள் எடுக்கும் சம்பளத்திற்கு நேர்மையான சேவையை நான் எதிர்பார்க்கின்றேன் - என்றார்.



ஜனாதிபதியின் சுபீட்சமான நாட்டைக் கட்டியெழுப்பும் கொள்கை பிரகடனத்திற்கமைய சப்ரகமுவ மாகாண சபையில் கடமையாற்றும் அரச சேவையாளர்கள் தமது கடமைகளை உறுதிப்படுத்தும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (03) மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் இடம்பெற்றது. ( படங்கள் : இரத்தினபுரி நிருபர்)



கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன் தலைமையில் கண்டி செயலக அதிகாரிகள் 2022ஆம் வருடத்திற்காக தமது கடமைகளை ஆரம்பித்தனர். (படங்கள் : கண்டி நிருபர்)

# பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு தங்க விருது

(கண்டி நிருபர்)

இலங்கை அரச நிதிக் கணக்காய்வாளர்கள் சங்கம் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனம் என்பன இணைந்து நடத்திய விருது வழங்கலில் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு தங்க விருது கிடைத்துள்ளது.

2020ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட சிறந்த கணக்காய்வு அறிக்கை மற்றும் கணக்கு விவரங்களுக்காக இவ்விருது வழங்கப்பட்டதாக பேராதனைப் பல்கலைக்கழக பிரதி உபவேந்தர் பேராசிரியர் டெரண்ஸ் மதுஜித் தெரிவித்தார்.

உள்ளூராட்சி அமைப்புகள் மற்றும் பல்வேறு சபைகள், திணைக்களங்கள் என நூற்றுக்கணக்காக நிறுவகங்கள் இதில் பங்குகொண்டன.



இலங்கை அரச மற்றும் பொது நிறுவனங்களின் கணக்கறிக்கைகளை சிறந்த முறையில் பேணும் வகையில் இலங்கை அரச நிதிக் கணக்காய்வாளர்கள் சங்கம் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனம் என்பன இணைந்து வருடாவருடம் இதனை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மக்கள் வங்கி 2022ஆம் ஆண்டினை வரவேற்கின்றது









மக்கள் வங்கியின் தலைமைக் காரியாலயத்தில் புத்தாண்டைக் கொண்டாடும் விழாவொன்று அண்மையில் இடம்பெற்றது. இதன்போது அரச சேவை உறுதிமொழியை எடுத்துக்கொண்டு வங்கி ஊழியர்கள் தங்கள் பணிகளை ஆரம்பித்தனர்.

இந்நிகழ்வின்போது மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளரான ரஞ்சித் கொடிதுவக்கு உரை நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து செத் பிரித் ஓதப்பட்டதுடன், பல்மத அனுட்டானங்கள் இடம்பெற்றன.

இதன்போது மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ உரை நிகழ்த்துகையில்,

“Vistas of Prosperity எனும் செழுமைக்கொள்கை கட்டமைப்பிற்கு இணங்க இப்புத்தாண்டில் பொருளாதாரத்தின் வளர்ச்சியை ஆதரித்திடும் வங்கியின் உறுதிப்பாட்டினை வங்கி மீண்டும் வலியுறுத்துகின்றது” என்றார்.

மேலும் அவர் அனைத்து வங்கி ஊழியர்களுக்கும் கடந்த ஆண்டு வழங்கிய ஆதரவுக்காக நன்றிகளைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளரான ரஞ்சித் கொடிதுவக்கு உரை நிகழ்த்துகையில்,

“இப்புதிய வருடத்தில் அனைத்து பணியாளர்கள் மற்றும் பணிப்பாளர் சபையின் ஆதரவுடன் வலுவான நிதிச் செயற்பாடுகள், டிஜிட்டல் இயக்கம் மற்றும் சேவைத்தரம் போன்ற துறைகளில் வங்கி கவனம் செலுத்திடும்” என்றார்.

மேலும் சவால்கள்மிக்கதோர் ஆண்டில் தம்மோடு பயணித்த அனைத்து ஊழியர்களினதும் பங்களிப்புக்கு தமது பாராட்டுகளையும் தெரிவித்தார்.

தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பெருநிறுவன மற்றும் நிர்வாக முகாமைத்துவம், வர்த்தக சங்கத்தின் பிரதிநிதிகள், சமய நிறுவனங்களின் மற்றும் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிகள் மற்றும் அனைத்து குழு உறுப்பினர்களும் கலந்துகொண்டதுடன், நாடு முழுவதுமுள்ள அனைத்து கிளைகளிலும் ஒரேநேரத்தில் இதே போன்ற புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், பொதுச் சேவை உறுதிமொழியை அனைத்து ஊழியர்களும் எடுத்துக்கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 3 புதிய மடிக்கணினி வெளியீடுகள் மூலம் உள்ளடக்க உருவாக்கம் மற்றும் கேமிங்கில் புரட்சியை ஏற்படுத்தும் MSI

வணிகம், வடிவமைப்பு, கேமிங் தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் முன்னணி உற்பத்தியாளரான Micro-Star International (MSI), இலங்கையில் 3 புதிய மடிக்கணினிகளை அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ளது. கேமிங் தொடரான AMD Processor மூலம் இயங்கும் Bravo 15 தொடக்கம் Delta 15 கேமிங் மடிக்கணினி மற்றும் உள்ளடக்க உருவாக்கம், கிரபிக் வடிவமைப்பிற்கு ஏற்ற Creator Z16 மடிக்கணினி ஆகியனவே இவ்வாறு வெளியிடப்பட்டுள்ளன.

ஆரம்பநிலை gamerஇற்காக வடிவமைக்கப்பட்ட Bravo 15 கேமிங் மடிக்கணினி, மேம்பட்ட AMD Ryzen 5000 H-Series Mobile Processors மற்றும் AMD Radeon RX கிரபிக்ஸ் மூலம் இயக்கப்படுகிறது. இது Radeon Image Sharpening மற்றும் Radeon Anti-Lag அம்சங்களைக் கொண்டுள்ளது. இது உயர்மட்ட அம்சங்களுடன் மேம்படுத் தப்பட்ட மற்றும் சிறப்பான காட்சியை வெளிப்படுத்துவதுடன், உள்ளீட்டு பின்னடைவை குறைக்கிறது. இதன்மூலம் தடையற்ற ஒட்டுமொத்த கேமிங் அனுபவத்திற்கு வழிவகுக்கிறது. மிகக் கடினமான கேமருக்காக வடிவமைக்கப்பட்ட Delta 15 கேமிங் மடிக்கணினி, AMD Ryzen 5900 HX Series Mobile Processors இலிருந்து சமீபத்திய AMD Radeon RX 6700M Series Mobile graphics வரை இணைக்கப்பட்டுள்ளது. இவை இரண்டும் தடையற்ற கேமிங் அனுபவத்திற்கும் மேம்பட்ட காட்சி அம்சங்களுக்கும் வழிவகுக்கிறது. Radeon RX 6000 Series GPU+Ryzen 5000 H Series CPU ஆகியவற்றின் கலவையானது AMD Advantage என அழைக்கப்படுகிறது. இது இதனை ஒத்த கணினிகளை விட மிகவும் மெல்லியதாகவும் இலகு ரகமானதாகவும் உள்ளது. இது 1.9 கிலோகிராம் எடை, 19 மி.மீ. தடிப்பையும் கொண்டுள்ளதன் மூலம், பார்வையை ஈர்க்கும் வடிவமைப்பிற்கு வழிவகுப்பதுடன், எடுத்துச்செல்வதற்கும் இலகுவானதாகும். அத்துடன், 12 மணிநேர மின்கல ஆயுளையும் கொண்டுள்ளது. இவ்வாறான முன்னெப்போதும் இல்லாத அம்சங்களை இம்மடிக்கணினி கொண்டுள்ளது.



Delta 15 மற்றும் Bravo 15 ஆகியன பற்றிய சிறந்த விடயம் யாதெனில், அனைத்து அம்சங்களும் ஒரு சிறிய மற்றும் இலகு வடிவமைப்பில் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளதுடன், இதன்மூலம் முன்னர் காணாத அளவில் உயர்மட்ட கேமிங் மற்றும் இலகுவாக்கம் ஆகியன அனுமதிக்கப்படுகின்றன. ஆயினும் இந்த மடிக்கணினிகள் யாவும் கேமிங்கிற்கு மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை என்பதுடன், மேற்கூறிய அனைத்து அம்சங்களும் இந்த மடிக்கணினிகளை ஏனைய விடயங்களுக்கும் பயன்படுத்துவதற்கான அதிக திறன்கொண்டதாக ஆக்குகின்றன.

Creator Z16 மடிக்கணினியானது, சமீபத்திய Intel 11th Generation H Series processors மற்றும் NVIDIA GeForce RTX 3060 மடிக்கணினிக்கான GPU மூலம் இயக்கப்படுகிறது. Creator Z16ஆனது 16:10 எனும் சிறந்த விகிதத்தில், சிறந்த பார்வைக் கோணங்கள் மற்றும் அதிகரித்த உற்பத்தித்திறனுக்காக மெல்லிய சட்டகங்களுக்குள் அமைந்த திரையைக் கொண்டுள்ளது. சாம்பல் நிறத்தில் (Lunar Grey) ஒரு மெலிதான CNC-சிறிய அலுமினியம் சட்டத்தில் அமைந்த பாணியை இது கொண்டுள்ளது. அதேசமயம் 100% DCI-P3 வர்ண எல்லைகளுடன் கூடிய True Pixel திரையை QHD+ தெளிவுத்திறன் வரையான அம்சங்களுடன், வடிவமைப்பாளர்கள் மற்றும் படைப்பாளர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்கிறது. இது தனியே ஒரு மடிக்கணினியாக சிறப்பாக செயல்படுவது மட்டுமல்லாமல், அழகியல் அம்சங்களிலும் திகழ்கிறது. இதன் காரணமாக பயனர்களுக்கு உண்மையிலேயே மறக்கமுடியாத அனுபவத்திற்கு வழிவகுக்கும். இந்த மடிக்கணினியானது, உள்ளடக்க உருவாக்கத்தின் வெளிப்படுத்தல், rendering மற்றும் ஒரேநேரத்திலான பல்பணி அம்சங்களை வேகப்படுத்துகிறது. வீடியோ மற்றும் புகைப்பட உருவாக்கம் மற்றும் எடிட்டிங் ஆகியவற்றிற்கான வண்ணத் துல்லியம் இதில் அதிகளவில் உள்ளது. இதற்கு MSI True Pixel தொழில்நுட்பமே காரணமாகும்.

இந்த புதிய சாதனங்களின் அறிமுகம் தொடர்பில் கருத்து வெளியிட்ட MSI பிராந்திய சந்தைப்படுத்தல் முகாமையாளர் Green Lin, “MSI அதன் பயனர்களுக்கு சிறந்த அனுபவத்தை வழங்க தொடர்ந்து பாடுபடுகிறது. இதனாலேயே இந்த புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட சாதனங்களை நாம் கொண்டுவந்துள்ளோம். இலங்கையில் எமது விசுவாசமான இரசிகர் பட்டாளம் உள்ளது. கேமிங் மற்றும் உள்ளடக்க உருவாக்கம் ஆகிய இரண்டிற்கும் புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட சாதனங்களி லிருந்து அவர்கள் பெரிதும் பயனடைவார்களென நாம் நம்புகிறோம்” - என்றார்.

# மூன்று SABEA விருதுகளை வென்று பெட்போர்ம் நிறுவனம் சாதனை

ப்ளாஸ்ரிக் மற்றும் கடதாசி பொதியிடல் துறையின் முன்னணி நிறுவனமான வரையறுக்கப்பட்ட பெட்போர்ம் தனியார் நிறுவனம், 2021ஆம் ஆண்டுக்கான தெற்காசியாவின் சிறந்த தொழில்முயற்சியாளர் (SABEA) விருது விழாவில் உற்பத்திப் பிரிவின் ஆண்டின் சிறந்த பிரதம நிறைவேற்று அதிகாரி, சிறந்த புத்தாக்கப் பொதியிடல் உற்பத்தி நிறுவனம் மற்றும் நெருக்கடியான சூழலில் அளித்த சிறந்த தொழில்முயற்சி தலைமைத்துவம் ஆகிய மூன்று விருதுகளை வென்று சாதனை படைத்துள்ளது.

விருது வழங்கும் விழா அண்மையில் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன மற்றும் அமைச்சர் தயாசிறி ஜயசேக்கர ஆகியோரின் தலைமையில் கொழும்பு மொனேஸ் இம்பீரியல் ஹோட்டலில் வெகு விமரிசையாக நடைபெற்றது. “தரத்தில் உயர்வான உற்பத்திகளை வழங்குவதையே அடிப்படை நோக்கமாக கருதி செயற்படுவதே எமது வெற்றியின் இரகசியமாகும். இந்த வெற்றிக்காக உழைத்த நிறுவனத்தின் ஊழியர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் எனது நன்றியை தெரிவிக்கின்றேன்,” என பெட்போர்ம் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பேரின்பம் மதிதரன் தெரிவித்தார்.

தெல்கொட மற்றும் மல்வானை பிரதேசங்களில் அமைந்துள்ள 04 கைத்தொழிற்சாலைகளில் 250இற்கும் மேற்பட்ட ஊழியர்களுடன் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற பெட்போர்ம் நிறுவனம் ஐக்கிய இராச்சியம், சவூதி அரேபியா மற்றும் மாலைதீவு போன்ற நாடுகளுக்கு தமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்கின்றது. ப்ளாஸ்ரிக் போத்தல்கள் மற்றும் மூடிகள் உள்ளிட்ட பொதியிடல் உற்பத்திகளுக்கு மேலதிகமாக கடதாசிகளை அடிப்படையாகக் கொண்டு கிண்ணங்கள், பீங்கான்கள் மற்றும் பொதியிடல் சாதனங்களை உற்பத்திசெய்கின்ற பெட்போர்ம் நிறுவனம் ISO 9001:2015 தரச் சான்றிதழுடன் SLS 1336 தரச் சான்றிதழையும்




வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும், இந்நிறுவனமானது, இன்றளவில் உணவுப் பாதுகாப்பு ஒழுங்குபடுத்தல் கருதி ISO 22000 தரச் சான்றிதழை பெறுவதற்கும் நடவடிக்கை எடுத்து வருகிறது. மல்வானை பிரதேசத்தில் சிறிய தொழிற்சாலையாக 2004 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பெட்போர்ம் நிறுவனம் தற்பொழுது இலங்கையில் முழுமையான பொதியிடல் தீர்வுகளை வழங்கும் முதன்மையான நிறுவனமாக காணப்படுகிறது. பொருளின் புத்தாக்கத்தை பாதுகாத்து அதற்கு புதுப் பொலிவை தரக்கூடிய வகையில் பொதியிடல் தீர்வுகளை வழங்கியமையே நிறுவனத்தின் வளர்ச்சிக்கு காரணமாக இருந்துள்ளது. பசுமை உற்பத்தி எண்ணக்கருவை அடிப்படையாகக்கொண்ட பெட்போர்ம் நிறுவனத்தின் சகல உற்பத்திகளும் மீள்சுழற்சி செய்யக்கூடியவை என்பது கூடுதல் சிறப்பாகும். மேலும் ஒரு அடி முன் சென்று செயற்கை மூலப்பொருட்களுக்கு பதிலாக இயற்கையாகவே உக்கக்கூடிய மூலப்பொருட்களை (HDPE Materials) பயன்படுத்தி தைலம், மருந்துகள், கமத்தொழில் மற்றும் விஷக்கிருமி அழிப்பு போன்ற கைத்தொழில்களின் தேவைகளுக்கு பொதியிடல் தீர்வுகளை அறிமுகப்படுத்துவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

# இலங்கையின் பேண்தகு நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கும் முயற்சிகளை துரிதப்படுத்துகிறது Eco Spindles

## பிளாஸ்ரிக் மீள்சுழற்சியை 10% அதிகரிப்பதே நோக்கம்





PETஆனது, சிறிய பிளாஸ்ரிக் துண்டுகளிலிருந்து நேரடியாக பொலியேஸ்டர் நூலை உற்பத்திசெய்யும் வசதிகொண்ட உலகிலுள்ள இரண்டு தொழிற்சாலைகளில் ஒன்றாகும், மேலும், இது இலங்கையின் மிகப்பெரிய பிளாஸ்ரிக் சுத்திகரிப்பு நிறுவனமான Eco Spindles நாட்டில் மீள்சுழற்சி செய்வதற்கான சுற்றுச்சூழல் கட்டமைப்பை உருவாக்குவதன் மூலம் இலங்கையின் மீள்சுழற்சி திறன்களை கணிசமாக வலுப்படுத்தியுள்ளது.

இந்த ஆண்டு, நிறுவனம் பிளாஸ்ரிக் சேகரிப்புக்கான திறமையான பொறிமுறையை உருவாக்குதல், கார்ப்பரேட் கூட்டாண்மை வலையமைப்பை உருவாக்குதல் மற்றும் நுகர்வோர் விழிப்புணர்வை அதிகரிப்பதில் குறிப்பிடத்தக்க முதலீடுகளைச் செய்துள்ளது.

இந்த முயற்சிகள் இலங்கையில் பொலிஎதிலீன் டெரெப்தலேட் (PET) பிளாஸ்ரிக் மீள்சுழற்சி வீதத்தை தற்போதைய 15% இலிருந்து 2022இன் இறுதிக்குள் 20%ஆக அதிகரிப்பதை நோக்கமாகக்கொண்டுள்ளது.

“மீள்சுழற்சி செய்வதற்கு வெவ்வேறு பங்குதாரர்களுக்கு இடையேயான ஒத்துழைப்பு தேவை. எனவே, Eco Spindles இலங்கைக்குள் மீள்சுழற்சி செய்யும் கலாசாரத்திற்கான அடித்தளத்தை அமைப்பதற்காக அடித்தளத்தை அமைப்பது மிகவும் முக்கியமானதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நாட்டில் மீள்சுழற்சிக்கு முந்தைய முறையை வலுப்படுத்தவும் விரிவுபடுத்தவும் எங்களால் தேவையான பங்குதாரர்களைக் கொண்டுவந்து அத்தகைய அடித்தளத்தை உருவாக்க முடிந்தது” என Eco Spindles Recyclingஇன் பிரதம நிறைவேற்று அதிகாரி மனோஜ் உடவத்த தெரிவித்தார்.

மீள்சுழற்சி உட்கட்டமைப்பில் நிறுவனத்தின் முதலீட்டின் மூலம், Eco Spindles இலங்கையில் ஒரு மாதத்திற்கு சுமார் 6 மில்லியன் PET போத்தல்களை சேகரிக்க முடியும். சுற்றுலாத் துறை வழமைக்குத் திரும்பியுள்ளதுடன், இது 9 மில்லியன் PET போத்தல்கள் வரை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த PET பிளாஸ்ரிக்குகள் கார்ப்பரேட் மற்றும் பிற பங்குதாரர்கள், சேகரிப்பாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்/வீட்டுக் கொள்கலன்கள் மூலம் சேகரிக்கப்படுகின்றன. Google Play Store மற்றும் (Apple) App Storeஇல் உள்ள ‘Waste 2 Value’ மொபைல் செயலியைப் பயன்படுத்தி Drop-off binகளை கண்டறியலாம். தற்போது மேல் மாகாணத்தில் 400இற்கும் மேற்பட்டோர் உள்ளனர், இலங்கையின் பிற பகுதிகளில் 50இற்கும் மேற்பட்டோர் உள்ளனர். 2022ஆம் ஆண்டின் இறுதியில், Eco Spindles இந்த வலையமைப்பை இரட்டிப்பாக்க உத்தேசித்துள்ளது, மேல் மாகாணத்தில் 700 மற்றும் நாட்டின் பிற பகுதிகளில் 300 Drop-off binsகளுடன் நாடு முழுவதிலும் மொத்த எண்ணிக்கையை 1,000ஆக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நிறுவனம் பயன்படுத்திய PET போத்தல்களைப் பெற சேகரிப்பாளர்களின் வலையமைப்பைப் பயன்படுத்தியுள்ளது. தற்போது, 500இற்கும் மேற்பட்ட சேகரிப்பாளர்கள் நிறுவனத்தில் பதிவுசெய்துள்ளனர். மீள்சுழற்சியை வலுப்படுத்துவதுடன், கடலோர சமூகங்கள் போன்ற குறைந்த வருமானம் பெறும் குழுக்களுக்கு இது சிறந்த வருமான ஆதாரமாகும். இது குறிப்பாக, PET போத்தல்களுக்கு சந்தையில் அதிக விலையை நிறுவனம் செலுத்துவதால் ஆகும்.

Eco Spindlesஇன் கார்ப்பரேட் மற்றும் பிற பங்காளர் வலையமைப்பும் முக்கிய பங்கு வகிக்கிறது. எடுத்துக்காட்டாக, பாடசாலைகள், ஹோட்டல்கள், உணவகங்கள், பொதுப் பூங்காக்கள், காவல் நிலையங்கள் மற்றும் பஸ்தரிப்பு நிலையங்கள் போன்ற இடங்களில் பெரிய உலோகக் கொள்கலன்களை (1,500 PET போத்தல்களை சேகரிக்க முடியும்) நிறுவனம் தனது சொந்த செலவில் அல்லது கூட்டாளர்களின் உதவியுடன் வைத்துள்ளது. பங்குதாரர் சேகரிப்பு கொள்கலன்களின் விலையை ஏற்கும் சந்தர்ப்பங்களில், Eco Spindles சேகரிப்பாளர்களின் ஊதிய விகிதத்தை அதிகரிப்பதன் மூலம் சேமிப்பை வழங்குகிறது.

நிறுவனம் மூன்று மூலப்பொருள் மீட்பு வசதி (MRF) மத்திய நிலையங்களையும் அமைத்துள்ளது மற்றும் 4ஆவது MRF நிலையம் மார்ச் 2022இல் பெலவத்தையில் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பிளாஸ்ரிக் கழிவுகள் அப்பகுதியில் பிராந்திய கழிவு சேகரிப்பு வலையமைப்பை உருவாக்கவும் வலுப்படுத்தவும் சேகரிக்கப்பட்ட PET போத்தல்களை செயலாக்கவும் உதவுகிறது. எனவே, அவர்கள் MRF ஒப்பரேட்டர்களுக்கு கூடுதல் வருவாய் வழிகளை வழங்குகிறார்கள். ஏனெனில், மற்ற கழிவுகளை தங்கள் உற்பத்தியில் மூலப்பொருளாகப் பயன்படுத்தும் நிறுவனங்கள் மற்ற கழிவுகளை விற்கலாம்.

Coca-Cola Beverages Sri Lanka, ஒரு பெருநிறுவன பங்காளியாக இரத்தினபுரி மற்றும் பாணந்துறையில் இரண்டு MRF நிலையங்கள் அமைந்துள்ளதுடன், மற்றொன்று நீர்கொழும்பில் அமைந்துள்ளது. கூடுதலாக, Eco Spindles நாடு முழுவதும் 19 PET செயலாக்க மையங்களின் வலையமைப்பைக் கொண்டுள்ளது. இந்த வலைப்பின்னல் மூலம், PET போத்தல்களை Eco Spindles மீள்சுழற்சி மையத்திற்கு அனுப்பப்படுவதற்கு முன் திடமான தொகுதிகளாக சுருக்கப்படுகின்றன.

திகதி 03.01.2022
திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4636
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 10,755,340.00
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 2 3 1 3 9 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 18,538,400.00

கொவிசெத
Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2931
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 6,263,180.00
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 06 22 31 33
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 63,594,171.60

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 984
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,972,260.00
ஆங்கில எழுத்து V
சுப்பர் இலக்கம் 22
வெற்றி இலக்கங்கள் 08 42 73 77
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 164,847,670.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 666
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,287,900.00
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 01 23 56 69
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 91,213,874.80

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு இலக்கம் :1656
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 1,190,720.00
சுப்பர் இலக்கம் 04
வெற்றி இலக்கங்கள் 17 20 35 36
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 2,370,502.00

வாசனா சம்பத
Vasana Sampatha
சீட்டிழுப்பு இலக்கம் :1681
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,247,240.00
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 05 26 46 72
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 27,169,836.30

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# மன்னாரில் தற்போதுவரை 36 கொரோனா மரணங்கள் பதிவு; அதிகரிக்கும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் வினோதன்

மன்னார் மாவட்டத்தில் கடந்த 3 நாட்களில் 2 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ள நிலையில், மாவட்டத்தில் தற்போது வரை 36 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளது – என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் கடந்த வருடம் மொத்தமாக 3 ஆயிரத்து 161 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருந்தது. இவர்களில் 34 கொரோனா தொற்றாளர்கள் மரணித்துள்ளனர். இதேவேளை, இவ்வருடம் முதல் கடந்த மூன்று நாட்களில் 8 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 2 பேர் உயிரிழந்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் கடந்த நவம்பர், டிசம்பர் மாத ஆரம்பப் பகுதியில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்டுள்ள நிலையில், தற்போது வீழ்ச்சியடைந்துள்ளது. 60 வயதுக்கு மேற்பட்டவர்களின் இறப்பு கடந்த நவம்பர் மாதத்தின் பின் மொத்தமாக 13 மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

இவர்களில் இருவரைத் தவிர, ஏனையவர்கள் கொரோனா தடுப்பூசியின் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்ட பின்னர் மூன்று மாதங்கள் கடந்தவர்களாக காணப்படுகின்றனர்.

தடுப்பூசியை பெற்றுக்கொண்டவர்கள் 2ஆவது தடுப்பூசி பெற்று 3 மாதங்கள் கடந்திருந்தால் மேலதிக வலுவூட்டல் தடுப்பூசியை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

கடந்த ஆண்டு முதலாவது தடுப்பூசியை 20 வயதுக்கு மேற்பட்ட சுமார் 83 சதவீதமானவர்களும், 2ஆவது தடுப்பூசியை 20 வயதுக்கு மேற்பட்ட சுமார் 75 சதவீதமானவர்களும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

எனினும், இதுவரை 30 வயதுக்கு மேற்பட்ட மேலதிக வலுவூட்டல் தடுப்பூசியை மொத்தமாக 30 சதவீதமானவர்கள் மாத்திரமே பெற்றுக் கொண்டுள்ளனர்.

மேலதிக வலுவூட்டல் தடுப்பூசியை பெற்றுக் கொள்ள ஊக்கப்படுத்தும் வகையில் எதிர்வரும் இரண்டு வாரங்கள் அலுவலகங்கள், தொழிற்சாலைகள், சங்கங்கள் போன்றவற்றுக்கு நேரடியாகச் சென்று தடுப்பூசியை வழங்கவிருக்கிறோம்.

இவ்வாறான தடுப்பூசி சேவை தேவையானவர்கள் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள்




பணிமனையுடன் 0232222916 என்ற தொலைபேசி இலக்கத்துடன் காலை 8 மணிமுதல் மாலை 3 மணிவரை தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

இவ்வாறான நடவடிக்கைகள் இன்று புதன்கிழமை முசலி பிரதேச செயலகத்திலும், நாளை மறுதினம் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்திலும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, 2021ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ளது. 360 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார். 2017 ஆம் ஆண்டு 543 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டமையைத் தொடர்ந்து ஏற்பட்ட அடுத்தகட்ட அதிகரிப்பாக காணப்படுகின்றது.

2022ஆம் ஆண்டு மூன்று நாட்களில் 18 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். பேசாலை பகுதியில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த டிசம்பர் மாதம் அதிகரித்த நிலையில் காணப்பட்டபோதும் தற்போது குறைவடைந்துள்ளது.

தற்போது மன்னார் நகரப் பகுதியில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலை காணப்படுகின்றது. அவற்றை கட்டுப்படுத்தும் நோக்குடன் நேற்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் வியாழக்கிழமை வரை டெங்கு தடுப்பு வாரம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இதன்போது பாதுகாப்புத்துறையினர், சுகாதாரத்துறையினர், பிரதேச செயலகம், மாவட்ட செயலக உத்தியோகத்தர்களும் மக்களின் வீடுகளுக்கு சென்று டெங்கு நுளம்பு பரவக்கூடிய இடங்களை அடையாளம் கண்டு அழிப்பது அல்லது அகற்ற, சுத்தப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

குறிப்பாக, நீர் சேமித்து வைக்கும் தொட்டிகளில் குறித்த டெங்கு நுளம்புகள் வளரும் சாத்தியம் உள்ளதால் பொதுமக்கள் அவற்றை அடிக்கடி சுத்தப்படுத்திக்கொள்ள வேண்டும். தேவையற்ற தொட்டிகளை அகற்ற வேண்டும் – என்றார்.

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு தற்காலிக பணிப்பாளர் நியமனம்



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராக வடமாகாணத்தின் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் கே.நந்தகுமாரன் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தனவினால் நேற்றையதினம் இந்நியமனக் கடிதம் வழங்கப்பட்டது.


அதனடிப்படையில், யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் தனது பதவியை பொறுப்பேற்றுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராக இருந்த வைத்தியர்.த.சத்தியமூர்த்தி மேற்படிப்புக்காக மீண்டும் வெளிநாடு சென்றுள்ள காரணத்தினால் தற்காலிகமாக இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, வைத்தியர் கே.நந்தகுமாரன் வடமாகாணத்தின் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளராகவும் தொடர்ந்து செயற்படவுள்ளார்.

# தமிழர்களுக்கு துரோகமிழைக்காதீர்கள்; வல்வெட்டித்துறை மண்ணுக்குரிய பெருமையுடன் பட்டத் திருவிழாவை நடத்துங்கள்

## சார்ள்ஸ் எம்.பி. அழைப்பு





எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தன்று வல்வெட்டித்துறையில் இடம்பெறவுள்ள பட்டத் திருவிழாவானது, ஏற்பாட்டாளர்களினால் தமிழினப் படுகொலை புரிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளமையை நான் வன்மையாக கண்டிப்பதோடு, குறித்த பட்டத் திருவிழாவானது வல்வெட்டித்துறை மண்ணுக்குள்ள பெருமையுடன் நடைபெற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

வல்வெட்டித்துறை உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் பட்டத் திருவிழாவில் இம்முறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவை அழைக்க, சிறு குழுவொன்று ஏற்பாடு செய்துள்ளது. தனிப்பட்ட நலன்களின் அடிப்படையில் அந்தக் குழு, இந்த முடிவை எடுத்துள்ளதாக வல்வெட்டித்துறை மக்கள் மத்தியிலும் கடுமையான எதிர்ப்பு எழுந்துள்ளது. இந்தக் குழுவின் முடிவுக்கு பல்வேறு தரப்புகளும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

நீண்ட இனவழிப்பையும் தமிழர்களின் பூர்வீக நிலங்கள் முறையற்ற விதத்தில் பறிப்பதுமென கொடூர ஆட்சி நடத்தும் இந்த அரசாங்க அமைச்சர்களின் பிரசன்னத்துடன் அவர்களின் அனுசரணையுடன் எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தன்று வல்வெட்டித்துறையில் இடம்பெறவுள்ள பட்டத் திருவிழாவானது வல்வெட்டித்துறை மண்ணுக்கும் மக்களுக்கும் செய்யும் துரோகமாகும்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் எழுத்துமூல அறிக்கையை இலங்கை அரசாங்கம் சமர்ப்பிக்கவேண்டிய நிலையில், 2009ஆம் ஆண்டு இனப்படுகொலையை நடத்திய ராஜபக்ஷ குடும்பத்தினரை பிரதம விருந்தினராக அழைத்து இந்த பட்டத் திருவிழா நடத்துவது 2009ஆம் ஆண்டு நடைபெற்ற இனப் படுகொலையை சர்வதேச அரங்கிலிருந்து இல்லாது செய்வதற்குரிய அரசாங்கத்தின் இராஜதந்திர நடவடிக்கையே இது.

நீண்டகாலமாக மனித உரிமை செயற்பாட்டாளர்கள் எதிர்பார்த்திருக்கும் இந்த நேரத்தில் அவர்களின் முயற்சி வீண்போகும் வகையில் இந்த செயல்பாடு சர்வதேசத்தின் பார்வை இனப்படுகொலை புரிந்தவர்களை அழைத்து இந்த பட்டத்திருவிழாவை நடத்துவதானது சர்வதேச அரங்கிலிருந்து இலங்கை அரசாங்கத்தை தப்பிப்பதற்குரிய சந்தர்ப்பங்களை பெற்றுக்கொடுக்கும்.

ஆகவே ஏற்பாட்டாளர்கள் இதை கவனத்திற்கொண்டு பட்டத் திருவிழா அரசியல் கலப்படமற்ற வகையில் சிறப்பாக நடைபெற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

உடனடியாக இந்த நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் இந்த புதிய நடைமுறையை கைவிட்டு இந்த மண்ணில் காலாகாலமாக நடைபெற்றுவரும் பட்டத் திருவிழா போன்று இம்முறையும் நடைமுறைப்படுத்த முன்வருமாறு நான் கேட்டுக்கொள்கிறேன் – என குறிப்பிடப்பட்டுள்ளது.

# குத்திக் கொலைசெய்யப்பட்டவரின் சடலத்துடன் ஏ-9 வீதியை மறித்து நீதிகோரி போராட்டம்





(கிளிநொச்சி நிருபர்)

கடந்த முதலாம் திகதி பரந்தன் பகுதியில் வைத்து குத்திக் கொலைசெய்யப்பட்டவரின் சடலத்துடன் பரந்தன் பகுதியில் ஏ-9 வீதியை மறித்து உறவினர்களும் பொதுமக்களும் எதிர்ப்புப் போராட்டமொன்றை நேற்று மேற்கொண்டிருந்தனர்.

கொலைசெய்யப்பட்ட இளைஞனுக்கு நீதி கிடைக்க வேண்டும், குற்றவாளிகள் கைதுசெய்யப்பட வேண்டும் எனத் தெரிவித்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இச்சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் கைதுசெய்யப்படாத நிலையில் நேற்று குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றுக் காலை 10 மணியளவில் குறித்த இளைஞனின் இறுதிக்கிரியைகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து சடலம் மக்கள் பேரணியுடன் பரந்தன் சந்தி வரைசென்றது. தொடர்ந்து குறித்த பகுதியில் ஏ-9 வீதியை மறித்து இளைஞர்கள், பெண்கள், முதியவர்கள் என பல்வேறுபட்ட வயதைச் சேர்ந்தவர்கள் இணைந்து வீதிமறியல் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர். இதன்போது ஏ-9 வீதியூடான போக்குவரத்து முழுமையாக தடைப்பட்டது.

இந்நிலையில், பொலிஸார் குறித்த போக்குவரத்தினை சீர்செய்யும் வகையில் பல்வேறு முயற்சிகளை எடுத்திருந்தபோதிலும், போராட்டக்காரர்கள் எதிர்ப்பினை தெரிவித்து தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர். குறித்த போக்குவரத்துக்காக மாற்று வழிகள் பொலிஸாரால் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டன.

இந்நிலையில், பொலிஸ் உயரதிகாரிகளும் அவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து குறித்த போராட்டம் இடம்பெற்ற பகுதிக்கு கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வருகை தந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடனும் குடும்பத்தினரிடமும் கலந்துரையாடியிருந்தார்.


குறித்த குற்றவாளிகளை கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஏற்கனவே ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், நேற்றும் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த விடயங்களை உள்ளடக்கி போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் ஒப்பந்தத்துடன் கடிதம் ஒன்றும் பொலிஸ் அத்தியட்சகரிடம் கையளிக்கப்பட்டது. குறித்த விடயங்களை உடனடியாக நடைமுறைப்படுத்துவதாக தெரிவித்து பொலிஸ் அத்தியட்சகர் கையெழுத்திட்டு போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் கையளித்தார்.

இதனையடுத்து, குறித்த போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் உறவுகள் மற்றும் பொதுமக்கள் அவ்விடத்தை விட்டு கலைந்து சென்று உயிரிழந்தவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டனர்.

குறித்த போராட்டம் சுமார் 40 நிமிடங்களுக்கு மேலாக ஏ-9 வீதியை மறித்து இடம்பெற்றிருந்த நிலையில், போக்குவரத்து பாதிக்கப்பட்டு மாற்றுவழிகள் பயன்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுப்பு





(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் அதிகரித்துவரும் டெங்கு பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, மன்னார் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் பிரதேச செயலகம், மாவட்ட செயலகம் இணைந்து முன்னெடுக்கும் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை மன்னார் பிரதேச வைத்திய அதிகாரி பிரிவில் பல இடங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வீடுகள் மற்றும் பொது இடங்களில் டெங்கு நுளம்பு பரவக்கூடிய சூழல்களை அடையாளப்படுத்தல் மற்றும் அவற்றை அப்புறப்படுத்துதல், அதேநேரம் நுளம்பு பெருக்கத்துக்கான சூழல் காணப்படும் வீடுகளின் உரிமையாளர்களை அடையாளப்படுத்தும் முகமாக சுகாதார வைத்திய அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், டெங்கு ஒழிப்பு செயலணி உத்தியோகத்தர்கள், பாதுகாப்புத் துறையினர் ஆகியோர் விசேட கள விஜய செயற்பாடுகளையும் முன்னெடுத்திருந்தனர்.

அதேநேரம், மன்னார் பிராந்திய சுகாதார பணிமனை மற்றும் வைத்தியசாலை பகுதிகளைச் சூழவுள்ள பகுதிகள் இராணுவத்தினரின் உதவியுடன் விசேட சிரமதான பணிகளும் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன், இவ்வாரம் முழுவதும் டெங்கு ஒழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டு மன்னார் மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்து ஆலயங்களில் விக்கிரகங்கள் திருடிய குற்றச்சாட்டில் இராணுவச் சிப்பாய் கைது

(யாழ். நிருபர்)

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் இராணுவ மற்றும் கடற்படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள இந்து ஆலயங்களில் விக்கிரகங்கள் திருடிய குற்றச்சாட்டில் இராணுவச் சிப்பாய் ஒருவர் இராணுவப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் இராணுவ பொலிஸாரால் தெல்லிப்பளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

டிசம்பர் 9ஆம் திகதிக்கும் 23ஆம் திகதிக்கும் இடையே தெல்லிப்பளை மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளிலுள்ள இந்து ஆலயங்களில் விக்கிரகங்கள் திருடப்பட்டுள்ளன. அத்துடன், உயர் பாதுகாப்பு வலயங்களிலுள்ள இந்து ஆலயங்களில் திருடப்பட்ட விக்கிரகங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் உப பொலிஸ் பரிசோதகர் நிதர்சன் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். இந்நிலையில் காங்கேசன்துறை நல்லிணக்கபுரத்தைச் சேர்ந்த 34 வயதுடைய ஒருவர் முதலில் கைதுசெய்யப்பட்டார்.

கொழும்புக்கு விரைந்த உப பொலிஸ் பரிசோதகர் நிதர்சன் தலைமையிலான குழுவினர் அங்கு வர்த்தகர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட மேலும் 20இற்கு மேற்பட்ட விக்கிரகங்களை மீட்டனர். அவற்றை கொள்வனவுசெய்த வர்த்தகர்கள் தலைமறைவாகியுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அவற்றில் பல இராணுவ மற்றும் கடற்படையின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் உள்ள இந்து ஆலயங்களின் விக்கிரகங்கள் என பொலிஸார் தெரிவித்தனர். இந்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையோரைக் கைதுசெய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் இராணுவ பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் 42 வயதுடைய இராணுவச் சிப்பாய் கைதுசெய்யப்பட்டு தெல்லிப்பளை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## சுகாதார தொழிலாளி மீது தாக்குதல் நடத்தப்பட்டதை கண்டித்து

# வலி. தெற்கு பிரதேச சபை ஊழியர்களால் பகிஷ்கரிப்புப் போராட்டம் முன்னெடுப்பு





(யாழ். நிருபர்)

சுகாதார தொழிலாளி மீது தாக்குதல் நடத்தப்பட்டதை கண்டித்தும், அதற்குரிய நடவடிக்கை எடுக்காததை கண்டித்தும் வலி. தெற்கு பிரதேச சபை ஊழியர்களால் நேற்றுக் காலை 9 மணியளவில் பகிஷ்கரிப்புப் போராட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

இணுவில் ஆரம்பப் பாடசாலை முன்பாக வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் அனுமதி பெறாது நடைபாதையில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டவரை, நேற்று அங்கிருந்து அப்புறப்படுத்த முற்பட்டவேளையில், குறித்த வியாபாரியால் வருமானவரி பரிசோதகர், சுகாதார பரிசோதகர் அச்சுறுத்தப்பட்டதோடு, பிரதேச சபையில் கடமையாற்றும் சுகாதார தொழிலாளி மீது தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தவிசாளரால் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து குறித்த நபர் கைதுசெய்யப்பட்டார்.

ஆனாலும் குறித்த பகுதியில் இன்றும் தொடர்ந்து வியாபாரம் நடைபெறுவதாக தெரிவித்து பிரதேச சபை ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதுடன், பொலிஸார் குறித்த நபரை கைதுசெய்து நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளனர். அதேவேளை, குறித்த பகுதியில் வியாபாரம் நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகின்ற நிலையில், உடனடியாக அதனை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என வலி. தெற்கு பிரதேச சபை தவிசாளர் கருணாகரன் தர்ஷன் தெரிவித்தார்.

# யாத்திரையின்போது வாக்குவாதம்: தீக்குளித்த நபர் வைத்தியசாலையில்!

**வேறொருவரின் மனைவியுடன் சிவனொளிபாதமலைக்கு வந்தவரின் விபரீத முடிவு**

(சித்தார இராஷ்)

சிவனொளிபாதமலைக்கு யாத்திரைக்குச் சென்ற நபரொருவர் பெண்ணொருவருடன் வாக்குவாதப்பட்டு தீக்குளித்த சம்பவம் நேற்றுமுன்தினம் (03) நல்லதண்ணி பகுதியில் இடம்பெற்றுள்ளது. வேறொருவரின் மனைவியை யாத்திரைக்கு அழைத்துவந்தபோது, இருவருக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடே இதற்குக் காரணமென பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,



கடவத்தையிலிருந்து 36 பேர் கொண்ட குழுவொன்று சிவனொளிபாதமலைக்கு யாத்திரை சென்றுள்ளது. இதில் பயணித்த நபரொருவர் வேறொருவரின் மனைவியுடன் அங்கு சென்றுள்ளார். பஸ்ஸில் இவர்கள் இருவருக்கும் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த முறுகல் வலுவடைந்த நிலையில், நல்லதண்ணி பகுதியில் வைத்து சமையல் தேவைகளுக்காக கொண்டுவரப்பட்ட மண்ணெண்ணெயை உடலில் ஊற்றிக்கொண்ட நபர் தனக்குத் தானே தீமூட்டிக்கொண்டுள்ளார். கடும் ஆத்திரத்தில் அவர் இவ்வாறு நடந்துகொண்டதாக சம்பவத்தை நேரில் கண்டோர் தெரிவித்துள்ளனர்.

தீ பற்றியபோது தன்னை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லுமாறு அவர் சத்தமிட்டுள்ளார். பொதுமக்களின் உதவியுடன் தீ அணைக்கப்பட்டபோதிலும் அவர் கடும் காயங்களுக்குள்ளாகியுள்ளார். இதனையடுத்து அவர் மஸ்கெலிய பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டதுடன், மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நல்லதண்ணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வாழைக்குலை களவெடுத்தபோது சிக்கிய பழத் திருடன்!



(விஜேரத்ன ஹல்மடுவ)

பூஜாபிட்டிய பகுதியில் பல நாட்களாக தேடப்பட்டுவந்த திருடன், வாழைக்குலை களவெடுத்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளான்.

அதிக விலைகொண்ட வாழைக்குழையொன்று திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது. இதனையடுத்து கண்காணிப்புக் கெமரா காட்சிகளை சோதனையிட்ட பொலிஸார் சந்தேகநபரை கைதுசெய்துள்ளனர். நீண்டகாலமாக திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டுவந்தவரே இவ்வாறு கைதாகியுள்ளமை விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. சந்தேகநபர் முழுமையாக தனது தோற்றத்தை மாற்றிக்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரால் களவாடப்பட்ட வாழைக்குலை அக்குறணை பகுதியில் ஐயாயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

# வயிறுபெருக்க சாப்பிட்டு உறங்குவதை தொழிலாகக்கொண்ட பொலிஸ் அதிகாரி!



(எப். அஸ்லம்)

கொழும்பு தெற்கிலுள்ள பொலிஸ் நிலையமொன்றின் பொறுப்பதிகாரியொருவர் குறித்து பொலிஸ் தலைமையகத்துக்கு பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்தப் பொலிஸ் அதிகாரி சிற்றுண்டிச்சாலையிலிருந்து பல்வேறு வகையான உணவுகளை தினமும் பெற்றுக்கொள்வதுடன், தனது மேசையின் மீது நித்திரைகொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

சிற்றுண்டிச்சாலைக்கு பணம் செலுத்தாமல் விதவிதமான உணவுகளை அவர் பெற்றுக் கொண்டுள்ளார்.

குறித்த பொலிஸ் நிலையத்துக்கு கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்னர் நியமனம் பெற்றுவந்த இந்த அதிகாரி ஏராளமான உணவுகளை உண்பதாக உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

பெருத்த வயிறுடன் காணப்படும் இவர், தகாத வார்த்தைகளால் பொலிஸாரை திட்டுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# துருக்கியிலுள்ள இலங்கையர்களால் மருத்துவ உபகரணங்கள் நன்கொடை

## தூதரகத்தின் ஊடாக வழங்கிவைப்பு






கொவிட்-19 தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கையிலுள்ள அரசாங்க மருத்துவமனைகளில் பயன்படுத்தப்படத்தக்க மருத்துவ உபகரணங்களை தூதரகத்தின் வேண்டுகோளுக்கிணங்க, துருக்கியில் வசிக்கும் இலங்கையர்கள் மற்றும் எர்சுரம், அலன்யா, பர்சா மற்றும் இஸ்தான்புல் ஆகியவற்றின் கௌரவ தூதுவர்கள் நன்கொடையாக வழங்கினர்.

இலங்கையில் அரசாங்கம் முன்னெடுத்துவரும் மகத்தான முயற்சிக்கு ஆதரவாக இந்த நன்கொடையில் விரல் நுனி ஒக்சிமீட்டர்கள், அகச்சிவப்பு நெற்றி வெப்பமானிகள், நேர்மறை காற்றுப்பாதை அழுத்தி, ஒட்சிசன் செறிவூட்டிகள் மற்றும் கம்ப்ரசர் நெபுலைசர் ஆகியன உள்ளடக்கப்பட்டிருந்தன.

துருக்கிய எயார்லைன்ஸின் சரக்குப்பிரிவு மற்றும் ஆஸ்யா நக்லியாட் ஆகியவற்றின் உதவியுடன் மருத்துவ நன்கொடைகளை அனுப்பிவைப்பதற்கு தூதரகம் உதவியது.

தூதுவர்கள் மற்றும் இலங்கையர்களின் உதவிகள் குறித்து கருத்துத் தெரிவித்த தூதுவர் எம்.ஆர்.ஹஸன், அவர்களது முயற்சி மற்றும் இலங்கை அரசாங்கத்துடனும் மக்களுடனுமான அவர்களது ஒற்றுமையைப் பாராட்டினார்.

# பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கும் பொறுப்பு அரச ஊழியர்கள் அனைவருக்கும் உண்டு

## பிரதமர் அலுவலகத்தில் புத்தாண்டு பணிகளை ஆரம்பித்து செயலாளர் காமினி செனரத் உரை









தற்போதைய சூழ்நிலையில் நமது நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையுமா என அனைவரும் கேட்கின்றனர். அப்படி ஒரு நிலை இல்லை. ஆனால், இந்த பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க உங்கள் அனைவருக்கும் பொறுப்புள்ளது - என பிரதமரின் செயலாளர் காமினி செரனத் தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டிற்கான பிரதமர் அலுவலக பணிகளை ஆரம்பிக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்றுமுன்தினம் (03) முற்பகல் அலரி மாளிகையில் நடைபெற்றது.

இதன்போது பிரதமரின் செயலாளர் காமினி செனரத் தேசிய கொடியை ஏற்றியதைத் தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப்பட்டு உத்தியோகபூர்வ நிகழ்வு ஆரம்பமாகியது.

முதலில் தாய்நாட்டிற்காக உயிர்த்தியாகம் செய்த இராணுவ வீரர்களை நினைவுகூர்ந்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து பிரதமர் அலுவலக ஊழியர்கள் அரச உறுதிமொழி கூறினர்.

புத்தாண்டிற்கு வாழ்த்துத் தெரிவித்து நாட்டின் சவால்களை வெற்றிகொள்வதற்கு அரச சேவையின் வினைத்திறன் உதவியுள்ளதாக சுட்டிக்காட்டிய பிரதமரின் செயலாளர் காமினி செனரத், புத்தாண்டின் சவால்களை வெற்றிகொள்வதற்கு பணிக்குழாம் ஊழியர்கள் மற்றும் அனைத்து அரச சேவையாளர்களினதும் அர்ப்பணிப்பை எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த பிரதமரின் செயலாளர் காமினி செனரத்,

பல சவால்களுக்கு மத்தியில் 2021ஆம் ஆண்டில் நாங்கள் பணியாற்றவேண்டியிருந்தது. 2020 முதல் இந்த சவால்களை நாங்கள் எதிர்கொண்டுள்ளோம். கடந்த இரண்டு வருடங்களாக இந்த நாடு 18 மாதங்களுக்கும் மேலாக அவ்வப்போது மூடப்பட்டது உங்களுக்குத் தெரியும். இவ்வாறானதொரு சவாலான காலப்பகுதியில் நாம் எமது கடமைகளை நிறைவேற்ற வேண்டியிருந்தது.

கொவிட் தொற்றுநோய்க்கு மத்தியிலும் பிரதமர் அலுவலகம் சிறப்பான பணியை செய்ததென்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். குறிப்பாக, கொவிட் தொற்றுநோய்க்கு முகங்கொடுத்து நாடு செயலற்ற நிலையில் இருக்கும் நேரத்தில் ஜனாதிபதி நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்வதற்காகவும் மக்களின் அன்றாட தேவைகளை நிறைவேற்றுவதற்காகவும் ஒரு செயலணியை ஸ்தாபித்தார். அந்தச் செயலணி நமது பிரதமர் அலுவலகத்திலிருந்து செயல்பட்டது. இந்த அதிகாரிகள் அனைவரும் இரவு பகலாக இந்த அலுவலகத்திற்கு வந்து அந்த சவால்களை முழு பலத்துடன் எதிர்கொண்டு நாட்டிற்காக தங்கள் சேவையை செய்ததை நான் அறிவேன்.

2022ஆம் ஆண்டைப் பார்த்தால், இன்றிலிருந்து நமக்குப் புத்தாண்டு பிறந்துள்ளது. இந்தப் புத்தாண்டை புதிய முகத்துடன் தொடங்க நாம் அனைவரும் உறுதியாக இருந்தால் நல்லது. கொவிட் தொற்றுநோயின் உலகளாவிய சவாலை எதிர்கொள்ள அரசாங்கம் உறுதியாக உள்ளது. இன்று நாம் கொவிட் தொற்றுநோயை மிகக் குறைந்த நிலைக்குக் கொண்டுவந்துள்ளோம் என்பது உங்களுக்குத் தெரியும். நான் பார்த்தவரையில், நேற்று கொவிட் நோய்த்தொற்றுகளின் எண்ணிக்கை சுமார் முந்நூறாகும்.

எனவே, இது மிகவும் நல்ல நிலை. எமது நாட்டில் அரச சேவையின் வினைத்திறன் காரணமாக எம்மால் இதனை அடைய முடிந்தது. அவர்கள் தங்கள் கடமையை சரியாக செய்தார்கள்.

வலுவான அரச சேவையின் காரணமாகத்தான் கொவிட் தொற்றுநோயை இவ்வளவு திட்டமிட்ட முறையில் சமாளிக்க முடிந்தது. இன்று உலகின் மற்ற பகுதிகளைப் பாருங்கள். பல ஐரோப்பிய நாடுகள் ஏற்கனவே மூடப்பட்டுள்ளன. அவ்வாறான சூழ்நிலையிலும் நமக்கு இன்று இதுபோன்ற திட்டமிடலின் மூலம் அதற்கு முகங்கொடுக்கக்கூடியதாக உள்ளது என அவர் தெரிவித்தார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மனிதநேயம் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ஷிரந்த ஹீன்கெந்தவினால் சுபீட்சமான இலங்கையில் உற்பத்தித் திறன்கொண்ட குடிமக்களையும் பசுமையான நாட்டையும் உருவாக்குவதற்கான அரசாங்கக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரச சேவைகள் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து அவர் முக்கிய உரையை ஆற்றினார்.

மஹிந்த சிந்தனையில் ஆரம்பிக்கப்பட்ட பல விடயங்களை நாம் இன்னும் நம்பியிருக்கின்றோம். 2015ஆம் ஆண்டு ஏற்பட்ட அரசியல் எழுச்சியால் எங்களால் பலன்களை பெற முடியவில்லை. குறிப்பாக, பிரதமரின் தலைமையிலான இந்த அரசாங்கம் எப்போதும் அரசு ஊழியர்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளது.

2019ஆம் ஆண்டின் ஆரம்பம் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் நாங்கள் உலக மதிப்பீடுகளின் குறியீட்டில் கீழே செல்ல ஆரம்பித்தோம். ஆனால், தற்போதைய சூழ்நிலையில் நமது நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையுமா என அனைவரும் கேட்கின்றனர். அப்படி ஒரு நிலை இல்லை.

இந்த பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க உங்கள் அனைவருக்கும் பொறுப்புள்ளது. சுகாதாரம் குறித்து நோக்கினால் தடுப்பூசி ஏற்றும் செயற்பாட்டை நாம் உரிய முறையில் மேற்கொண்டுள்ளோம். எங்களின் அடுத்த மூலோபாயம் நாட்டிற்கு எவ்வாறு முதலீட்டை கொண்டுவருவது என்பதாகும்.

நல்ல தடுப்பூசி திட்டங்களால் மூடப்படும் அபாயத்திலிருந்த தொழிற்சாலைகள், அந்த உற்பத்தி நிலையங்கள் தொடர்ந்து இயங்கி வருகின்றன. டிஜிட்டல்மயமாக்கல், அத்துடன் அரச சேவையில் தொடர்ச்சியான பயிற்சி வழங்கலும் தொழில்நுட்பத்தில் முன்னேற்றம் மற்றும் அரச சேவையின் உற்பத்தித்திறனை அதிகரிப்பது மிகவும் முக்கியமானது என பேராசிரியர் ஷிரந்த ஹீன்கெந்த சுட்டிக்காட்டினார்.

கொவிட்-19 வைரஸ் பரவாமல் தடுக்க நாடு எதிர்கொள்ளும் தனிநபர் மற்றும் சமூகப் பொறுப்பை வலியுறுத்தி வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம உரையாற்றினார்.

கொவிட் தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்கு நாம் தொடர்ந்து சுகாதார முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது அவசியம். உங்கள் கைகளை சரியாகக் கழுவி சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள். அவசியமில்லாத இடங்களுக்கு செல்வதைத் தவிர்க்கவும்.

சமூக இடைவெளியை பேணவும். முகக்கவசத்தை சரியாக அணியுங்கள் மற்றும் புகைப்பிடிப்பதைத் தவிருங்கள் எனத்தெரிவித்த விசேட வைத்தியர் நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம, இந்த நிலைமையிலிருந்து முன்னோக்கிச் செல்லும்போது நேர்மறையாக சிந்திக்குமாறு மக்களை வலியுறுத்தினார்.

குறித்த சந்தர்ப்பத்தில் பிரதமர் அலுவலக பணிக்குழாம் பிரதானியோஷித ராஜபக்ஷ, பிரதமரின் மேலதிக செயலாளர்களான சட்டத்தரணி சமிந்த குலரத்ன, ஹர்ஷ விஜேவர்தன உள்ளிட்ட பிரதமர் அலுவலகத்தின் அனைத்து ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

# உடப்பு பகுதிகளில் தீவிரமடையும் கடலரிப்பை கட்டுப்படுத்த விசேட கவனம்

## ஆராச்சிகட்டுவ பிரதேச சபை தவிசாளர் தட்சிணாமூர்த்தி தெரிவிப்பு

(ரஸீன் ரஸ்மின்)

உடப்பில் தீவிரமடையும் கடலரிப்பை கட்டுப்படுத்த விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபையின் தவிசாளர் தட்சிணாமூர்த்தி நேற்று முன்தினம் தெரிவித்தார். அத்துடன் உடப்பு பிரதேசத்தில் மீனவர்களுக்கான இறங்குதுறை ஒன்றை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

உடப்பில் தீவிரமடையும் கடலரிப்பு தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று உடப்பில் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த பிரதேச சபைத் தலைவர் மேலும் கூறுகையில்,

புத்தளம் மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் ஒன்றான உடப்பு பகுதியில் தீவிரமடைந்து வரும் கடலரிப்பின் காரணமாக,



இங்குள்ள மீனவர்களும் மக்களும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்வாறு கடலரிப்பின் உக்கிரம் காரணமாக பல மீன் வாடிகளும் வீடுகளும் சேதமடைந்து காணப்படுகின்றன.

இதுதொடர்பில் அண்மையில் இந்த பகுதிக்கு விஜயம் செய்த விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவிடம் இதுபற்றி தெரியப்படுத்தி, கடலரிப்பின் உக்கிரத்தை நேரில் காண்பித்து இதனால் ஏற்படப்போகும் பாதிப்பு பற்றியும் விளக்கப்படுத்தினோம்.

இதுகுறித்து விரைவில் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதாக வாக்குறுதியளித்துச் சென்றார்.

அத்துடன், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும் சந்தித்து, கடலரிப்பு மற்றும் மீனவர்கள் எதிர்நோக்கிவரும் இறங்குதுறை உள்ளிட்ட பிரச்சினைகள் பற்றி அமைச்சரின் கவனத்துக்கும் கொண்டு வந்தோம்.

எனினும், விரைவில் உடப்பு பகுதிக்கு விஜயம் செய்து, கடலரிப்பு பிரச்சினை மற்றும் இறங்குதுறை அமைப்பது தொடர்பில் கவனம் செலுத்துவதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எம்மிடம் தெரிவித்தார்.

எனவே, உடப்பு கடலரிப்புக்கு விரைவில் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதுடன், இந்தப் பகுதியில் பாரிய இறங்குதுறை ஒன்றையும் அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபையின் தவிசாளர் தட்சிணாமூர்த்தி மேலும் தெரிவித்தார்.





தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் 2022ஆம் ஆண்டுக்கான அலுவலக பணிகள் ஆரம்பம், அதன் தலைவர் துமிந்த சில்வா தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. தேசியக் கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்ட பின்னர், ஊழியர்கள் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டனர். அத்துடன் ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் ஊழியர்களது பிள்ளைகளுக்கும் புலமைப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# சீன சுற்றுலா இயக்குனர்களுடன் இலங்கை பிரதிநிதிகள் சந்திப்பு

## பயணக்கட்டுப்பாடு நீக்கத்தின் பின்னரான சீனர்களின் வருகை குறித்து ஆராய்வு







சீனாவின் பயணத்துறை சார்ந்த பிரதிநிதிகளை பெய்ஜிங்கில் உள்ள இலங்கைத் தூதரகம், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஹுடன் இணைந்து கடந்த டிசம்பர் 30ஆம் திகதி நகர மண்டபக் கூட்டத்தில் சந்தித்தது. சுற்றுலா நடத்துநர்கள், முக்கிய சுற்றுலா முகவர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் உட்பட அழைக்கப்பட்ட விருந்தினர்கள் 60 பேர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இலங்கை வழங்கும் தனித்துவமான அனுபவங்கள் குறித்த அவர்களது கவனத்தை தூதுவர் கலாநிதி பாலித கொஹொன ஈர்த்தார். இலங்கையின் பாரம்பரியமற்ற சுற்றுலா அம்சங்களான சுதேச மருத்துவம், படகோட்டம், நீர்ச் சறுக்கு, பட்டம் விடுதல், மலையேற்றம், பலூனிங், திமிங்கலத்தைப் பார்த்தல், யானை சவாரி மற்றும் சஃபாரி உள்ளிட்ட சாகச வாய்ப்புக்கள் இளம் பயணிகளின் ஆர்வத்துக்காக சிறப்பித்துக் கூறப்பட்டன. இலங்கை ஆண்டு முழுவதும் பசுமையான மற்றும் வெப்பமான காலநிலையால் ஆசீர்வதிக்கப்படுகின்றது.

சீன எல்லைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தளர்த்தப்படும்போது அதிகமான சீன சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு விஜயம் செய்வார்கள் என எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார். இரு நாடுகளுக்கும் இடையிலான விமான இணைப்பை மேம்படுத்துவதற்காக தூதரகம் ஏற்கனவே பல சீன விமான நிறுவனங்களுடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். எதிர்காலத்தில் அனைத்து முக்கிய சுற்றுலா இயக்குனர்களையும் சந்திப்பதற்கு அவர் எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் வழங்கும் சுகாதார நெறிமுறைகள் மற்றும் விமான சேவைகள் குறித்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் பிராந்திய முகாமையாளர் சிந்தக வீரசிங்க விளக்கினார். ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் சீனாவுக்கான விமானங்களின் எண்ணிக்கையை தேவைக்கேற்ப அதிகரிக்கும் என அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வின்போது, ஸ்பிரிங் டிரவல் உள்ளிட்ட சுற்றுலா முகவர்கள் இலங்கையின் அழகு குறித்த அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். உத்தியோகபூர்வ நிகழ்வு ஆரம்பிப்பதற்கு முன்னர், இலங்கை மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் காணொளிகள் திரையிடப்பட்டன.

பங்கேற்பாளர்கள் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்கு தூதுவர் கலாநிதி பாலித கொஹொன மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பிராந்திய முகாமையாளர் சிந்தக வீரசிங்க ஆகியோர் பதிலளித்தனர்.

வாத்திய இசை மற்றும் சீன முன்னணிக் கலைஞரின் நிகழ்ச்சியுடன் விருந்தினர்கள் மகிழ்விக்கப்பட்டனர்.

வெற்றியாளருக்கு இலங்கைக்கு விஜயம் செய்வதற்கான இலவச விமானப் பயணச்சீட்டை வழங்கும் வகையிலான அதிர்ஷ்ட ரேஃபிள் போட்டியுடன் நிகழ்வு நிறைவு பெற்றது. உள்நாட்டு கிரேக்க உணவகத்தின் மூலம் உணவு மற்றும் பானங்கள் வழங்கப்பட்டன.





புத்தாண்டை முன்னிட்டு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தலைமையில் இடம்பெற்றது.

# மகாவலியை அண்மித்த மக்களுக்கு எச்சரிக்கை

மகாவலி கங்கைக்கு அண்மித்து வாழும் மக்களை மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

சில நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் அதிகரித்துள்ள நிலையில், அதிலிருந்து வெளியேறும் நீரானது மகாவலி கங்கையுடன் இணைந்து வருவதாக நீர்ப்பாசன திணைக்களத்தின் நீர் முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் ரீ.அபேசிறிவர்தன தெரிவித்துள்ளார்.

இதனால் மகாவலி கங்கையின் நீர் மட்டமும் அதிகரித்துள்ளது. மேலும், கலாஓயா, மட்டக்களப்பு – முந்தனையாறு ஆகியவற்றின் நீர் மட்டமும் அதிகரித்துள்ளதாக நீர்ப்பாசன திணைக்களத்தின் நீர் முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

# வாரியபொல பிரதேச சபையின் தலைவர் பதவி நீக்கம்

வாரியபொல பிரதேச சபையின் தலைவர் டி.எம். திலகரத்ன பண்டார திஸாநாயக்க அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

வடமேல் மாகாண ஆளுநர் எட்மிரல் வசந்த கரன்னாகொடவினால் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அப்பதவியிலிருந்து அவர் நீக்கப்பட்டுள்ளார்.

வடமேல் மாகாண ஆளுநருக்கு எதிரான பல குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்தே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, வாரியபொல பிரதேச சபையின் தலைவர் திலகரத்ன பண்டார திஸாநாயக்க ஜனவரி 01ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

# விமானப்படையின் புதுவருடப் பணிகள் சர்வ மத வழிபாடுகளுடன் ஆரம்பம்







2022 புத்தாண்டை தொடர்ந்து விமானப்படை தலைமை காரியாலயத்தில் இலங்கை விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரனவின் பங்கேற்பில் சர்வ மத வழிபாடுகளுடன் இலங்கை விமானப்படையின் புதுவருட பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பமாயின.

இதன்போது விமானப்படை தளபதியினால் புதுவருட உரை நிகழ்த்தப்பட்டது. இவை அனைத்தும் வீடியோ தொழில்நுட்பம் மூலம் அனைத்து விமானப்படைத்தளங்களுக்கும் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. தனது உரையின்போது 2022ஆம் ஆண்டு புதுவருட வாழ்த்துக்களை முதலில் தெரிவித்து கடந்த 2021ஆம் ஆண்டு சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு சிறப்பாக செயற்பட்டமைக்கு அனைத்து விமானப்படை அங்கத்தவர்களுக்கும் தனது பாராட்டுகளை தெரிவித்தார். மேலும் மலர்ந்திருக்கும் புதிய வருடத்தில் நாட்டின் பாதுகாப்பை நிலைநாட்டவும் நாட்டை கட்டியெழுப்பவும் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

புதுவருடத்தை முன்னிட்டு விமானப்படை அங்கத்தவர்கள், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உலகவாழ் மக்கள் அனைவருக்கும் ஆசி வேண்டி விமானப்படை தலைமையகத்தில் இரவுநேர பிரித் பூஜை வழிபாடுகள் கங்காராம விகாரையின் விகாராதிபதி வணக்கத்துக்குரிய கிரிந்தே அஸ்ஸஜி நாயக தேரர் தலைமையில் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து சர்வ மதத் தலைவர்களினால் பிரார்த்தனை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் விமானப்படை பணிப்பாளர்கள் மற்றும் அதிகாரிகள், படைவீரர்கள், சிவில் ஊழியர்கள் உட்பட அனைவரும் பங்கேற்றனர்.

# இலக்கிய விருதுக்கு தெரிவுசெய்யப்பட்ட கவிஞர் இப்னு அசுமத்துக்கு அமைச்சர் டக்ளஸ் கௌரவம்





சிறந்த மொழிபெயர்ப்பாளருக்கான 2021 ஆம் ஆண்டுக்கான சர்வதேச இலக்கிய விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள கவிஞர் இப்னு அசுமத், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் இந்நிகழ்வு நேற்று நடைபெற்றது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரத்தியேக மொழிபெயர்ப்பாளரும், மக்கள் தொடர்பாடல் அதிகாரியுமான ரீ.எம். பாரூக் அஸீஸ், இப்னு அசுமத் என்னும் புனைபெயரில் பிறமொழிக் கவிதைகள், கதைகள், சிறுகதைகள் என்பவற்றை மொழிபெயர்ப்பு செய்து இலக்கியத்துக்கு பெரும் பங்காற்றியுள்ளார்.

இதன்காரணமாக, எதிர் பிரதிகள் இலக்கிய செயற்பாட்டு அமைப்பினால் சிறந்த மொழிபெயர்ப்புக்கான 2021ஆம் ஆண்டுக்கான சர்வதேச இலக்கிய விருதுக்கு தெரிவு செய்து கௌரவித்துள்ளது.

இந்நிலையில், கடந்த 22 ஆண்டுகளாக தன்னுடன் பணியாற்றி வரும், கலைச் செல்வன் என வாஞ்சையுடன் தன்னால் அழைக்கப்படுபவருமான கவிஞர் இப்னு அசுமத், நேற்று பாராட்டிக் கௌரவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உரப் பற்றாக்குறையால் சிலாபம் விவசாயிகள் பாதிப்பு





(ஜூட் சமந்த)

உரப் பற்றாக்குறை காரணமாக தமது விவசாய காணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக சிலாபம் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். சிலாபத்தில் சுமார் 03 ஆயிரம் விவசாயிகள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

மரக்கறி, பழ வகைகளை உற்பத்தி செய்வதில் அவர்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். உர வகைகளை உடனடியாக பெற்றுக்கொடுக்காவிட்டால் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.



# ஓட்டமாவடி ஆசிரியர்கள் சுகயீன விடுமுறை போராட்டம்; பாத்திமா பாலிகா பாடசாலை கல்வி நடவடிக்கை ஸ்தம்பிதம்







(கல்குடா நிருபர்)

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்துக்குட்பட்ட ஓட்டமாவடி பாத்திமா பாலிகா மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) பாடசாலை அதிபர் இடமாற்றத்தினை இரத்து செய்யாத காரணத்தினால் நேற்று பாடசாலை ஆசிரியர்கள் சுகயீன விடுமுறையில் ஈடுபட்டுள்ளனர்.

ஓட்டமாவடி பாத்திமா பாலிகா மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) பாடசாலை காணி சுவீகரிப்பு மற்றும் அதிபர் இடமாற்றத்தினை கண்டித்து பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் என பலரும் ஒன்றிணைந்து கொட்டும் மழை என்றும் பாராமல் பாடசாலையின் வாயில் கதவினை பூட்டி வீதியில் இறங்கி கவனயீர்ப்பு போராட்டத்தில் நேற்று முன்தினம் ஈடுபட்டனர்.

இந்நடவடிக்கையினால் பாடசாலை கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. அதேபோன்று நேற்று பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் சுகயீன விடுமுறை காரணமாக பாடசாலைக்கு சமூகமளிக்காத காரணத்தினால் பாடசாலை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பாடசாலை மூடிக் காணப்படுகின்றது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு வருகை தந்த வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி எம்.எஸ்.எம்.உமர்மௌலானா கருத்து தெரிவிக்கையில், அதிபரின் இடமாற்றமானது கல்வி அமைச்சின் செயலாளரினால் மேற்கொள்ளப்பட்ட விடயமாகும். அவர் தற்போது எமது அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளார்.

அமைச்சின் செயலாளரினால் அதிபரின் இடமாற்றம் தொடர்பாக இரத்துச் செய்யப்பட்ட கடிதம் கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்தில் மீண்டும் குறித்த பாடசாலைக்கு அவர் இணைக்கப்படுவார் என்றும், குறித்த கட்டடமானது பல்கலைக் கழகம் சார்ந்த மட்டத்தில் கணினி வசதிகளை கொண்டமைந்ததாகவும், பெற்றோர்கள் இப்பிரதேசத்தில் இதன் கல்வி நடவடிக்கைகள் தொடர்பாக எதிர்ப்பு தெரிவிக்கின்றமையினால் பிறிதொரு இடத்துக்கு இடமாற்றம் செய்வது தொடர்பாக தமது கருத்தினை அமைச்சின் செயலாளருக்கு தெரிவிப்பதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



**மாகாணசபை எலக்சன் இந்த நாளையில இல்லையாம் எண்டு தினேஷ் அமைச்சர் சொல்லிப்போட்டாரு... அப்ப சம்பந்தரு மோடி ஐயாவுக்கு அனுப்புற கூட்டு ஆவணம் இனி ஆணம்தான்...!**

# சாய்ந்தமருது பெண்கள் சந்தை மழை வெள்ளத்தால் பாதிப்பு

## வியாபாரிகள் கவலை



(பாறுக் ஷிஹான்)

சாய்ந்தமருது பெண்கள் சந்தை மழை வெள்ளத்தினால் தினமும் பாதிக்கப்பட்டு வருவதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சாய்ந்தமருது பெண்கள் சந்தை இப்பகுதியில் பிரபலமிக்க சந்தை தொகுதியாகும்.

இங்கு மீன், இறைச்சி உள்ளிட்ட மரக்கறி வகைகள் தினமும் விற்பனை செய்யப்படுகின்றன. அன்றாடம் பல்லாயிரக்கணக்கான மக்கள் இச்சந்தையை நாடி தத்தமது தேவைகளை பூர்த்தி செய்கின்றனர். இச்சந்தை தற்போது அப்பகுதியில் பெய்கின்ற அடைமழை காரணமாக ஒழுக்கு ஏற்பட்டுள்ளதுடன் குறித்த சந்தை வெள்ள நிலையினால் அவலநிலையை அடைந்துள்ளதாக பாதிக்கப்பட்ட வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், இங்கு எதுவிதமான அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் வியாபாரிகள் மழைக்காலங்களில் தமது வியாபாரங்களை செய்யமுடியாது பொருட்களை மூடி வைத்துக்கொண்டிருக்கும் பரிதாப நிலையினையும் காணக்கூடியதாக உள்ளது.

எனவே, இதற்கான தீர்வினை உரிய தரப்பினர் மேற்கொள்ள வேண்டும் என வியாபாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் பெய்துவரும் அடை மழையினால் மாவட்டத்தின் பல்வேறு தாழ் நிலப்பிரதேசங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அக்கரைப்பற்று, திருக்கோவில், பொத்துவில், கல்முனை, நிந்தவூர் உள்ளிட்ட பிரதேசங்களிலேயே இவ்வாறு அடைமழை பெய்து வருகின்றது. அம்பாறை பிரதான வீதி, கல்முனை பிரதான வீதி உள்ளிட்ட பல வீதிகளும் வெள்ளத்தால் மூழ்கியுள்ளதுடன், போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. சந்தைப்பகுதியில் சில வியாபாரநிலையங்களிலும் வெள்ள நீர் உட்புகுந்துள்ளது.

இந்நிலையில், மக்களின் அன்றாட நடவடிக்கைகளும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் ஆரம்பித்த மழைவீழ்ச்சி நேற்று காலை வரை நீடித்துவரும் நிலையில், தொடர்ந்தும் மழை நீடிக்குமேயானால், தாழ்நிலப் பிரதேசங்களில் வாழும் மக்கள் இடம்பெயரக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# வீணான வதந்திகளை பொதுமக்கள் நம்பாதீர்; மட்டக்களப்பில் வெள்ள அச்சுறுத்தல் இல்லை

## மாவட்ட அரசாங்க அதிபர் கருணாகரன் அறிவிப்பு

(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாரியளவில் வெள்ள அச்சுறுத்தலுக்கான நிலைமைகள் இல்லையெனவும், மக்கள் அச்சம்கொள்ளத் தேவையில்லையெனவும், வீணான வதந்திகளை நம்பவேண்டாம் எனவும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சில கிராமங்களில் பொது அமைப்புகள் பாரிய தாக்கம் ஏற்படும் என்ற ரீதியில் ஒலிபெருக்கிகள் மூலம் அறிவுறுத்தல்களை வழங்கிவருவதாகவும், வீணான வதந்திகளை நம்பாமல் திணைக்களங்களின் தகவல்களைப்பெற்று முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மாவட்ட பணிப்பாளர் பொறியியலாளர் நாகரத்தினம், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ திணைக்களத்தின் உதவி பணிப்பாளர் ஏ.எம்.எஸ்.சியாட் ஆகியோர் இதன்போது மாவட்ட வெள்ள நிலைமைகள் குறித்தான தகவல்களை வழங்கினார்கள்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன்,

மட்டக்களப்பு மாவட்டம் வழமையாக டிசம்பர், ஜனவரி மாதங்களில் பாரியளவில் மழையினை எதிர்கொள்ளும் மாவட்டம். கடந்த இரண்டு தினங்களாக மாவட்டத்தின் பல இடங்களில் மழை பெய்துவருகின்றது. இதன்காரணமாக வாவிக்கரையோரப் பகுதிகளிலே வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், பாரியளவிலான வெள்ள அச்சுறுத்தல்கள் மாவட்டத்தில் ஏற்படவில்லை. சில கிராமங்களிலே பொதுஅமைப்புகள், கிராம மட்ட அமைப்புகளினால் பாரிய தாக்கம் ஏற்படும் என ஒலிபெருக்கிகள் மூலம் அறிவிப்புகள் செய்யப்படுகின்றன.



இந்த விடயத்தில் திணைக்களங்களின் அதிகாரிகளின் தகவல்களைப்பெற்று முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கேட்டுக்கொள்வதுடன், வீணான வதந்திகளை நம்பவேண்டாம்.

எந்தவொரு பகுதியிலும் மக்கள் இடம்பெயரவில்லை என்றும், கிரான் பிரதேச செயலகப் பிரிவில் மாத்திரம் கிரான் பாலத்தின் மேலாக நீர்பாய்வதனால் மக்களின் போக்குவரத்துக்கு இயந்திரப் படகுகள் மூன்று கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது எனவும் குறிப்பிட்டார்.

அதனைத் தொடர்ந்து உரையாற்றிய நீர்ப்பாசன பணிப்பாளர் பொறியியலாளர் ந.நாகரத்தினம் குறிப்பிடுகையில்,

பெரிய அளவிலான குளங்கள் மாவட்டத்தில் நான்கு உள்ளதாகவும் அதில் உன்னிச்சை குளத்தின் மூன்று வான் கதவுகளும் ஒரு அடிக்கு திறக்கப்பட்டு 800கனயடி நீர் வெளியேற்றப்பட்டு வருவதாகவும் உறுகாமம் குளத்திலும் இரண்டு வான் கதவுகள் திறக்கப்பட்டு 800 கனயடி நீர் வெளியேற்றப்படுவதாகவும் மற்றைய நவகிரி, வாகனேரி ஆகிய இரு குளங்களும் நீர்மட்டம் சாதாரணமாக உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அனர்த்த முகாமைத்துவ நிலைய மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.சியாத் குறிப்பிடுகையில், வருடாந்த மழை வீழ்ச்சியாக 2020 இல் 1650.9மில்லி மீற்றர் கிடைக்கப்பெற்றது. கடந்த ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரைக்கும் 2254.8 மில்லிமீற்றர் கிடைத்துள்ளதாகவும் அதன்படி 603.9மில்லிமீற்றர் அதிகமாக கிடைத்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய அனர்த்த காலங்களில் மக்களுக்கான பாதுகாப்பு மற்றும் நிவாரணப் பணிகளை தொடர்வதற்கு முன்னாயத்தங்களுடன் உள்ளதாக குறிப்பிட்டார்.

# கிழக்கு மாகாண தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பணிமனை திறப்பு





(மட்டக்களப்பு நிருபர்)

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினர் ரி.பி.பரமேஸ்வரனால் கிழக்கு மாகாண காரியாலயம் நேற்று திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான க.கருணாகரன் கலந்துகொண்டு உரையாற்றுகையில், மக்களுக்கு உயர்வான சேவையினை வழங்கும் நோக்குடன், அரசு இவ்வாறான அலுவலகங்களை மாகாணங்களில் திறந்துவருகின்றது. மக்கள் தயக்கம் இன்றி தங்களின் சேவையினை பெற்றுக்கொள்ளலாம் எனக் குறிப்பிட்டார். தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினரான ரி.பி.பரமேஸ்வரன் கருத்து தெரிவிக்கையில், எங்களுடைய நோக்கமானது எங்களுடைய மக்களுக்கும் பொலிஸ் திணைக்களத்துக்கும் நல்லதொரு உறவை உருவாக்கி அதன் மூலம் பயனைப் பெறக்கூடியதாக இருக்கவேண்டும். 09 மாகாணங்களில் வடக்கு கிழக்கு தனி மாகாணமாகவும் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய 3 மாவட்டத்துக்கும் சேர்ந்த பணிமனையாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இங்கு மாகாண பணிப்பாளரும் புலனாய்வு உத்தியோகத்தரும் கடமைகளை மேற்கொள்வார்கள். இதன் பிரதான அலுவலகம் கொழும்பில் உள்ளதாகவும் 24 மணி நேரமும் இயங்குகின்ற 1960 என்ற தொலைபேசி எண்ணின் மூலம் முறைப்பாடுகளை அறிவித்தவுடன், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

மேலும், பாதிக்கப்பட்ட நபர்கள் தமது முறைப்பாடுகளை கடிதங்கள் மூலமாகவோ அல்லது நேரடியாக அல்லது தொலைநகல் 0112166555 மூலமாகவும் அல்லது மின்னஞ்சல் info@npc.gov.lk மூலமாகவும் அல்லது தொலைபேசி இலக்கம் 0112166500, 0112166533 மூலமாக அல்லது வட்சப் இலக்கம் 0710361910 ஊடாகவும் அல்லது www.npc.gov.lk மூலமாகவே தமது முறைப்பாடுகளை தெரிவிக்கலாம்.

மேலும், நல்லதொரு சமுதாயத்தை பொலிஸ் திணைக்களத்தின் மூலம் உருவாக்குவதற்கும் இதன்போது பொது மக்கள் உரிமையுடன் வேலைகளை பெற்றுக்கொள்வதற்கான ஒரு ஆணைக்குழுவாக மாற்றுவதே அரசாங்கத்தின் கொள்கையாக காணப்படுகின்றது என தெரிவித்தார். இந்நிகழ்வின்போது சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கமல் சில்வா கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# தொடர்ந்துவரும் விலையேற்றத்தால் கொலை, கொள்ளை அதிகரித்து நலிவடைந்த சமுதாயமாக மாறும் அபாயம்

## மூதூர் பிரதேச சபையின் உப தவிசாளர் துரைநாயகம்

(கிண்ணியா நிருபர்)

அத்தியாவசிய உணவுப் பொருட்களையாவது கட்டுப்பாட்டு விலையில் பேணி மக்களை பட்டினிச்சாவிலிருந்து பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என மூதூர் பிரதேச சபை உப தவிசாளர் சி.துரைநாயகம் தெரிவித்துள்ளார்.

அவர் ஊடகங்களுக்கு நேற்று மேலும் தெரிவிக்கையில், முக்கிய பொருட்களுக்கான விலைகளை அரசாங்கம் தொடர்ச்சியாக அதிகரித்து வரும் நிலையில், சங்கிலித்தொடரான விலையேற்றத்துக்கு மக்கள் முகம்கொடுத்து வருகின்றார்கள். இதன் காரணமாக நாளாந்த வாழ்க்கைச் செலவு பல மடங்காக அதிகரித்திருக்கின்றது. எனினும், வறுமைக் கோட்டின்கீழ் வாழும் மக்கள் நிவாரணங்கள் எதுவுமின்றி உயிர் வாழ்வதற்கே சிரமப்பட்டு வரும்நிலையில் விலையேற்றம் ஒருபக்கம், பொருட்களுக்கான தட்டுப்பாடு ஒருபக்கமென மக்கள் மனதளவிலும் பாதிப்புக்குள்ளாகி வருகிறார்கள்.



வருமானங்களில் எவ்வித அதிகரிப்பும் இல்லாத நிலையில், அனைத்துப் பொருட்களுக்குமான விலை நாளாந்தம் அதிகரிக்கப்பட்டு வருகின்றது. இதனால் கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், சிறுவர்கள் எனப் பலரும் பாதிப்புக்குள்ளாவதால் நாட்டின் எதிர்கால சமுதாயம் ஆரோக்கியமற்ற நலிவடைந்த சமுதாயமாக மாற்றமடையும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. தொடர்ந்துவரும் விலையேற்றம், பட்டினிச்சாவு, போசாக்கின்மை போன்றவற்றை ஏற்படுத்தும் அதேநேரம் கொலை, கொள்ளை போன்ற சட்டவிரோத செயற்பாடுகளுக்கும் காரணமாக அமையும்.

நாட்டில் பொருளாதார நெருக்கடியை அப்பாவி மக்களின்மீது திணிப்பது பொருத்தமற்ற செயற்பாடாகும். அத்துடன் விலையேற்றம் எப்போதும் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வாகாது. இதற்கான மாற்றுவழியாக அரசு சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிக்கும் அதேவேளை அரிசி, பருப்பு, மா போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களினுடைய விலையினையாவது மிகக்குறைந்த கட்டுப்பாட்டு விலையில் பேணி பட்டினிச் சாவிலிருந்து எமது மக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இந்த விலையேற்றம் அப்பாவி ஏழை மக்களைத்தவிர அரசியல் கதிரைகளில் இருக்கின்றவர்களை இன்னமும் பாதிக்காத காரணத்தால் அதன் தாற்பரியத்தை அரசினால் இன்னமும் உணர்ந்துகொள்ள முடியவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மட்டக்களப்பில் தொடர்ந்தும் அடைமழை; 24 மணி நேரத்தில் 120 மி.மீ. மழைவீழ்ச்சி



## மக்கள் பெரும் பாதிப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் அடைமழையால் தாழ் நிலப்பகுதியில் வெள்ள நீர் தேங்கியுள்ளது. இதனால் அப்பகுதியிலுள்ள மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கின்றனர். இந்நிலையில், போரதீவுப்பற்று பிரதேசத்தின் பட்டாபுரம் கிராமத்தில் அதிகளவு வெள்ளநீர் தேங்கியுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இந்நிலையில் பெரியபோரதீவு மட்பாண்ட வீதியில் அமைந்துள்ள வீட்டிலிருந்து தென்னை மரம் ஒன்றும் காற்றினால் சரிந்து அயல் வீட்டின் மீது வீழ்ந்துள்ளது.

இது இவ்வாறிருக்க மட்டக்களப்பில் 120.4 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், கிரானில் 58.8 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், உன்னிச்சையில் 49.0 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், உறுகாமத்தில் 51.4மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், வாகனேரியில் 158.7மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், கட்டுமுறிவில் 49.0மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், நவகிரியில் 56.0மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், தும்பங்கேணியில் 64.5மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், மைலம்பாவெளியில் 103.4மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், பாசிக்குடாவில் 89.0மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், கல்முனையில் 24.6 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், நேற்று முன்தினம் காலை 8.30மணிவரையில் கடந்த 24 மணித்தியாலத்தில் பதிவாகியுள்ளதாக வானிலை அவதான நிலையத்தின் மட்டக்களப்பு நிலையப் பொறுப்பதிகாரி சுப்பிரமணியம் ரமேஸ் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, நேற்றுக் காலை 6 மணிவரையில் உன்னிச்சைக் குளத்தின் நீர்மட்டம் 29அடி 4அங்குலம், உறுகாமம் குளத்தின் நீர்மட்டம் 15அடி 4அங்குலம், வாகனேரி 18அடி 0அங்குலமும், நவகிரிக்குளத்தின் நீர்மட்டம் 29அடியாகவும், தும்பங்கேணிக்குளத்தின் நீர்மட்டம் 15அடி 8அங்குலமாகவும், உயர்ந்துள்ளதாக அக்குளங்களுக்குப் பொறுப்பான நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் தெரிவித்தனர்.

தொடர்ந்து அடைமழை பெய்து வருவதனால் போரதீவுப்பற்றுப் பிரதேசத்தின் காக்காச்சுவட்டை - சின்னவத்தை வீதி, வெல்லாவெளி - மண்டூர் வீதி, மாலையர்கட்டு - றாணமடு வீதி, ஆகியவற்றை ஊடறுத்து வெள்ள நீர் பாய்வதனால் அவ்வீதிகளைப் பயன்படுத்தும் மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், கிரான் வீதியை ஊடறுத்து வெள்ள நீர் பாய்வதனால் அவ்வீதிப் போக்குவரத்துக்கு இயந்திரப்படகு பயன்படுத்தப்பட்டு வருவதாக மட்டக்களப்பு அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

# வெள்ள நீரில் அடித்துச்செல்லப்பட்ட பட்டிமேடு விவசாயியின் சடலம் மீட்பு



(வி.சுகிர்தகுமார்)

ஆலையடிவேம்பு பட்டிமேடு வடக்கு பள்ளப்பாமங்கை துரிசில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் அள்ளுண்டு செல்லப்பட்ட விவசாயியின் சடலம் நேற்று புளியம்பத்தை கிராமத்தின் முன்பகுதியில் உள்ள நரகக்குழி என அழைக்கப்படும் ஆற்றின் நடுப்பகுதியில் இருந்து கண்டெடுக்கப்பட்டது.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலமானது, அதிக மழைவீழ்ச்சி காரணமாக ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பட்டிமேடு வடக்கு பள்ளப்பாமங்கை துரிசில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் நேற்று அள்ளுண்டு செல்லப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்டவர் புளியம்பத்தை கிராமத்தைச் சேர்ந்த 57 வயதுடைய கணபதிப்பிள்ளை கிருபைராஜா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஆற்றின் நடுப்பகுதியில் சடலமொன்று காணப்படுவதாக மீனவர் ஒருவரால் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் குறித்த பகுதிக்கு சென்ற உறவினர்கள் அதிகாரிகளின் அனுமதியின் பிரகாரம், தோணியின் மூலமாக சடலத்தை ஆற்றின் கரையோரமாக சேர்த்தனர்.

நீரில் அடித்துச் செல்லப்பட்டு நேற்று முன்தினம் காணாமல் போனவரை அக்கரைப்பற்று பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பிரதேச செயலகத்தின் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து தேடும் பணியில் ஈடுபட்டிருந்த நிலையிலேயே நேற்று சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. குறித்த துரிசில் வெள்ளப்பெருக்கு அதிகரித்த நிலையில் வெள்ள நீரை வெளியேற்ற துரிசில் பலகையினை கழற்ற முற்பட்ட சந்தர்ப்பத்தில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சடலம் சேகரிக்கப்பட்ட இடத்துக்கு சென்ற அக்கரைப்பற்று பொலிஸார் மற்றும் பிரதேச செயலகத்தின் கிராம உத்தியோகத்தர்கள் சென்று விசாரணைகளை ஆரம்பித்த நிலையில் நீதிமன்ற உத்தரவின்பேரில் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தனர்.

இதேநேரம் அம்பாறை மாவட்டத்தில் தொடரும் அடைமழையினால் மாவட்டத்தின் பல்வேறு தாழ்நிலப் பிரதேசங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

# இடி மின்னல் தாக்கத்தில் பாதிக்கப்பட்டு மயக்கமுற்ற இருவர் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதி

(வாழைச்சேனை நிருபர்)


மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள எழுச்சி கிராமம் சுங்கான்கேணி மற்றும் குளக்கோட்டன் கிராமம் கிண்ணையடி போன்ற கிராமங்களில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இடிமின்னல் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டு மயக்கமுற்ற நிலையில் இருவர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீட்டில் வழமைபோன்று இருந்தவேளை திடீரென ஏற்பட்ட இடிமின்னல் தாக்கத்தினால் தாங்கள் அதிர்ச்சிக்குள்ளானதாகவும் பின்னர் தங்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாது என்றும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

குளக்கோட்டன் கிராமத்தினைச் சேர்ந்த க.தாமோதரம்பிள்ளை வயது (83) என்ற வயோதிபரும் கு.தவசாந்தி வயது (30) என்ற குடும்ப தலைவியுமே இவ்வாறு மின்னல் தாக்கத்துக்குள்ளாகியுள்ளனர். இவர்களது வளவினுள் உள்ள தென்னை மரங்களில் இடிமின்னல் தாக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் வீட்டினுள் இருந்த மின்சாரப் பொருட்கள் மற்றும் வீட்டு மின்னிணைப்புக்கள் என்பன சேதமுற்றுள்ளன.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் கனமழை தொடர்ச்சியாக பெய்து வருவதனால் காற்றுடன் கூடிய மழை வீழ்ச்சி காணப்படுகிறது. இதன்போது இடியுடன் கூடிய மின்னல் தாக்கமும் உள்ளது. மாவட்டத்தில் உள்ள பல்வேறு தாழ் நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

# சுற்றுலா சென்ற மினிரக வேன் விபத்து



## 5பேர் படுகாயம்

(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு - கிரான்குளம் பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 5பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரான்குளம் பிரதான வீதியில் நேற்று அதிகாலை 3மணியளவில் இடம்பெற்றுள்ளது. இவ்வாகன விபத்தில் 5பேர் படுகாயமடைந்து களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிசிச்சைபெற்று வருவதாக வாகனத்தில் பயணித்தவர்கள் தகவல் தெரிவிக்கின்றார்கள்.

அம்பாறை மாவட்டம் ஒலுவில் கிராமத்திலிருந்து குடும்ப உறவினர்கள் ஒன்றிணைந்து நேற்று முன்தினம் திருகோணமலைக்கு சுற்றுலா சென்று வீடு திரும்பிக்கொண்டிருக்கையில், கிரான்குளம் பிரதான வீதியில் வைத்து அதிகாலை வேளையில் மினிரக வேன் பாதையை விட்டுவிலகி இலங்கை மின்சாரசபை மின்கம்பத்தில் மோதுண்டு இவ்விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனால் வேன் மற்றும் மின்கம்பம் சேதமடைந்துள்ளது. இவ்விபத்து சம்பந்தமாக காத்தான்குடி போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

# வெள்ள நீரை வடிந்தோடச்செய்ய நடவடிக்கை



(மீராவோடை நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்துவரும் அடைமழை காரணமாக பல்வேறு இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அந்தவகையில், வாழைச்சேனை பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட பகுதியும் வெள்ளத்தில் மூழ்கியதில் பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனைக் கருத்திற்கொண்டு கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் ஐ.எம்.இம்தியாஸ் வெள்ள நீரை வடிந்தோடச் செய்வதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளார்.

இதன்போது, நீர் வடிந்தோடாமல் காணப்பட்ட வடிகான்கள் மற்றும் வீதிகள் போன்றவைகளை ஜெ.சி.பி. இயந்திரம் மூலம் தோண்டப்பட்டு வெள்ளநீரை வடிந்தோடச் செய்ய பிரதேச சபை உறுப்பினர் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சாய்ந்தமருதில் கடந்த காலத்தை மறந்து எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் செயலமர்வு





(பொலிவேரியன் நிருபர்)

நீதி அமைச்சின் தேசிய நல்லிணக்க அலுவலகத்தினுடனான நிதி ஒதுக்கீட்டின் கீழ், கடந்த காலத்தை மறந்து எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவோம் எனும் தொனிப்பொருளில் தேசிய மற்றும் நல்லிணக்கம் தொடர்பான செயலமர்வு சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் நெறிப்படுத்தலில், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச்.சபீகாவின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வுகளில், வளவாளராக திருக்கோவில் பிரதேச செயலகத்தின் கலாசார உத்தியோகத்தர் ஏ.எச்.ஏ.அம்ஜத் மற்றும் உளவள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.மனூஸ் ஆகியோர் கலந்துகொண்டு காத்திரமான பல கருத்துக்களை முன்வைத்து தெளிவுபடுத்தினர்.

தொடர்ந்து 6 செயலமர்வுகளாக இடம்பெற்ற இந்நிகழ்வுகளில், முதலாவது செயலமர்வு இளைஞர்களுக்கும் இரண்டாவது மகளிர்களுக்கும் மூன்றாவது சமயத்தை போதிக்கும் உறுப்பினர்களுக்கும் நான்காவது அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் ஐந்தாவது கீழ்மட்ட வருமானம் உடைய உறுப்பினர்களுக்கும் ஆறாவதும் இறுதியுமான இச்செயலமர்வு, சமூகத்தில் உள்ள கழகங்களான முதியோர் சங்கம், மகளிர் அபிவிருத்தி சங்கம் மற்றும் கலைமன்றங்களுக்கும் என தேசிய மற்றும் நல்லிணக்கம் தொடர்பாகத் தெளிவுபடுத்தி, விழிப்புணர்வூட்டும் வகையில் இச் செயலமர்வுகள் அனைத்தும் இடம்பெற்றன.

ஐந்தாவது நிகழ்வில், சமுர்த்தி தலைமைபீட முகாமையாளர் ஏ.சி.எம்.நஜீம், நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.நளீர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# கிழக்கில் 5000 மரக்கன்றுகளை நடும் வேலைத்திட்டம் காரைதீவில் முன்னெடுப்பு

(நூருல் ஹுதா உமர்)

பலநோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளரின் பணிப்புரைக்கு அமைவாக, கிழக்கு மாகாணம் பூராகவும் ஐயாயிரம் மரக் கன்றுகளை நடும் வேலைத்திட்டத்தின் கீழ் காரைதீவு பிரதேச செயலகத்தின் செயலாளர் சி.ஜெகராஜனின் வழிகாட்டலின் கீழ் காரைதீவு பிரதேச செயலக பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட இடங்களில் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் செ. பார்த்திபன், பலநோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஜெ.ரகுபதி, உ.சுபராஜ், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் வே.அரவிந்தன் மற்றும் பயிலுனர் பலநோக்கு அபிவிருத்தி உதவியாளர்களும் கலந்துகொண்டனர்.

# நாட்டின் அபிவிருத்தி மேம்படுவதற்கு தேசிய சொத்துகள் பாதுகாக்கப்பட வேண்டும்

## திருமலையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

(திருகோணமலை நிருபர்)

நாட்டின் அபிவிருத்தி முன்னோக்கிச் செல்வதற்கு நாட்டின் தேசிய சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். நாட்டை ஆட்சி செய்பவர்களிடம் ஊழல், கொலை மற்றும் கொள்ளை, மக்களை ஏமாற்றுதல் போன்ற செயற்பாடுகள் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

திருகோணமலைக்கு இரண்டு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவின் எண்ணக்கருவில் உருவான பிரபஞ்சம் திட்டத்தின் ஊடாக பாடசாலை மாணவர்களுக்கான டிஜிட்டல் கற்றல் உபகரணங்கள் வழங்கும் திட்டத்தில் திருகோணமலையில் நான்கு பாடசாலைகள் உள்வாங்கப்பட்டு அதனை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வுக்கு திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

திருகோணமலைக்கு வருகைதந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச திருகோணமலை கோணேஸ்வரா ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை ஒன்றில் கலந்துகொண்டு திருகோணமலை சாம்பல்தீவு தமிழ் வித்தியாலயத்தில் "பிரபஞ்சம்" திட்டத்தினூடாக பாடசாலை மாணவர்களுக்கான டிஜிட்டல் கற்றல் உபகரணங்கள் மற்றும் பாடசாலையின் கணினி அறை என்பன உத்தியோகபூர்வமாக திறந்து வைத்து பாடசாலையின் அதிபர் வைரமுத்து கமலநாதனிடம் கையளித்தார்.

இதன்போது உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் அனைவரும் ஊடகங்களின் ஊடாக அரசியல் பிரமுகர்கள் செய்யும் வேலைத்திட்டங்களை ஒவ்வொரு நாளும் பார்த்திருப்பீர்கள். 24 மணித்தியாலங்கள் 365 நாட்களும் பேசுவதற்கு சிறந்தவர்கள் அரசியல்வாதிகள். எவ்வளவுதான் பேசினாலும் நடைமுறைப்படுத்துவது என்பது குறுகிய வேலைத்திட்டங்களையே. ஆனால், நாம் "பிரபஞ்சம்" எனும் வேலைத்திட்டத்தின் கீழ் எதிர்க்கட்சியாக இருந்துகொண்டு அரச பாடசாலைகளை டிஜிட்டல் மயப்படுத்தும் வேலைத்திட்டத்தினை செவ்வனே செய்து வருகின்றோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.









மேலும், எம்மைப்போன்ற அரசியல்வாதிகளை தெரிவுசெய்வது தேர்தல் ஒன்றின் மூலம் அது ஒரு வரம், மக்களின் ஆசீர்வாதம். இவ்வாறு தெரிவுசெய்யப்படும் நாம் அவர்களுக்கு சேவை செய்வதற்காக தற்காலிகமாக 5 அல்லது 6 வருடங்களுக்கு சேவைசெய்ய காலக்கெடு தரப்பட்டுள்ளது. அவர்கள் எதிர்பார்ப்பது சிறந்த ஒரு ஆட்சியாளர்களை அமைத்து நாட்டின் அபிவிருத்தி, நாட்டின் சௌபாக்கியத்தினை கட்டியெழுப்புவது.

ஆனால், எம்மால் காணக்கூடியதாக இருப்பது மக்களை ஏமாற்றி தேர்தலில் வென்ற ஆட்சியாளர்கள் தற்காலிக சேவையாளர்கள் என்பதை மறந்து ஒருவரினால் எழுதி வைத்ததை நடைமுறைப்படுத்துவது போன்று செயற்படுகின்றனர். இவ்வாறான செயற்பாட்டினால் நாட்டில் ஊழல், கொலை, கொள்ளை நாட்டின் தேசிய சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல் மற்றும் தேசிய சொத்துக்களை தீய சக்திகள் ஊடாக இலாப நோக்குடன் வழங்குதல் என்பன நாட்டில் தலைதூக்கி செயற்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. சுருக்கமாக சொல்லப்போனால், தற்போது நடைபெறும் ஆட்சி ஒரு அதள பாதாளத்தினை நோக்கி இருளில் சென்றுகொண்டிருக்கிறது.

எனவே, எமது ஆட்சியில் இவ்வாறான நபர்களுக்கு இடம் இல்லையெனவும் அவ்வாறான ஊழல் அரசியல்வாதிகளுக்கு பதிவுகளை வழங்கி பாதுகாக்கவில்லை எனவும் இனியும் அவ்வாறு இடமளிக்கமாட்டோம் எனவும் உறுதியளிக்கின்றோம் எனவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், மேலும் எனது தந்தை காலம்சென்ற ரணசிங்க பிரேமதாசவினால் கொண்டுவரப்பட்ட இலவச சீருடை, இலவச உணவு என்பன இன்றுவரை அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. அவ்வாறு நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளும் டிஜிட்டல் மயப்படுத்தபடும் எனவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இவ்வாறு டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட பணம் உங்களிடம் இருக்குமா என சந்தேகம் வரலாம். ஆம், எங்களிடம் பணம் இருக்கு. ஊழலற்ற அரசாங்கத்தினை உருவாக்கினால் முடியும்.

ஊழலற்ற அரசத் தலைவர் ஒருவரை உருவாக்க மக்கள் தயாராக வேண்டுமெனவும் ஐக்கிய மக்கள் சக்தி அதற்கு தயராகவுள்ளதாகவும் நேற்று கையளிக்கப்பட்ட டிஜிட்டல் உபகரணத்தினை சரியான முறையில் பயன்படுத்தி இப்பாடசாலையில் நற்பண்பு, நகரிகள் கொண்ட ஊழலற்ற சமுதாயமாக உருவாக வாழ்த்துக்களை தெரிவிப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மேலும் இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப், புத்திக பத்திரன, கிழக்கு மாகாண முன்னாள் மாகாணசபை உறுப்பினர் வைத்தியர் அருண, பிரதேச சபை உப தவிசாளர் முகம்மட் நௌபர், பிரதேச சபை உறுப்பினர் வெள்ளைத்தம்பி சுரேஷ் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சி ஆதரவாளர்கள், செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# அடைமழையால் வெள்ளநீரில் மூழ்கிய விவசாய நிலங்கள்




## கிண்ணியா விவசாயிகள் கவலை




(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலகபிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள வயல் நிலங்கள் வெள்ளத்தினால் மூழ்கடிக்கப்பட்டு பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். கடந்த மூன்று தினங்கள் பெய்த தொடர் அடைமழை காரணமாக விவசாய வயல்கள் நீரில் மூழ்கியுள்ளதுடன், தாழ்நிலப் பகுதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

தம்பலகாமம் கோயிலை அண்டிய பகுதிகளான கோயிலாற்றுவெளி, கறிகட்டை முனை, கரமுட்டுவெளி, சம்மாந்துறைவெளி, பட்டிமேடு உள்ளிட்ட பல பகுதிகளிலுள்ள வயல் நிலங்களே இவ்வாறு கனமழை காரணமாக மூழ்கியுள்ளதுடன், சில வீடுகளில் வெள்ளநீர் தேங்கியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கர் வயல்களில் இவ்வாறு வெள்ளநீர் பாதிப்பை ஏற்படுத்தி யுள்ளதாகவும் அப்பகுதி நெற்செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான தொடர் வெள்ள அனர்த்தம் காரணமாக ஒவ்வொரு மாரி மழை காலங்களிலும் தாங்கள் பாதிக்கப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கின்றனர். வெள்ளநீரை வடிந்தோடச் செய்ய முறையான திட்டமிடலின்மை காரணமாக பட்டிமேடு வீதியானது நீரினால் மூழ்கடிக்கப்பட்டு போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்து காணப்படுகிறது.

பொதுமக்கள் தங்களை பாதுகாக்க முறையான வடிகான் வசதி, நீரை வடிந்தோடச் செய்யக்கூடிய வசதி மற்றும் விவசாய வயல் நீரேந்து பகுதிகளை திறம்படச் செய்து வெள்ள நீரிலிருந்து தங்களையும் தங்களது விவசாய நிலங்களையும் பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரச அதிகாரிகளிடத்தில் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சாய்ந்தமருது நகர சபை விடயத்தில் மக்களை அதாவுல்லா எம்.பி. இனியும் ஏமாற்றக்கூடாது

## மு.காவின் பிரதிப் பொருளாளர் யஹியாகான் தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

சாய்ந்தமருது நகர சபை கோரிக்கையை வைத்து இன்னும் இன்னும் அந்த மக்களை தே.கா. தலைவர் ஏமாற்றக்கூடாதென முகாவின் பிரதிப் பொருளாளரும் உயர்பீட உறுப்பினருமான ஏ.சி.யஹியாகான் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பகுதியிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் (03) மாலை ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்முனை மாநகர சபையின் பதவிக்காலம் பெப்ரவரி மாதத்துடன் நிறைவடையவுள்ள நிலையில், 2022 பெப்ரவரியில் சாய்ந்தமருது நகர சபை மலரும் என்று கூறி 9000 வாக்குகளை கபளீகரம் செய்த அதாவுல்லா, பொதுத் தேர்தலிலும் அம்மக்களின் வாக்குகளை பெற்றார். ஆனால், நகர சபை இதுவரை சாய்ந்தமருதுக்கு கிடைக்கவில்லை.

சாய்ந்தமருதைச் சேர்ந்த தே.கா. முக்கியஸ்தர் சலீமும் அதாவுல்லாவுடன் இணைந்து சாய்ந்தமருது நகர சபை கோஷத்தை முன்வைத்து வாக்குகளை பெற்று ஏமாற்றி வருகின்றார். இதுவொரு ஆரோக்கியமான செயற்பாடல்ல.



ஒருபோதும் அதாவுல்லாவினால் நகர சபையை பெற்றுத்தர முடியாது. அவருக்கு அரசாங்கத்தில் பலம் இல்லாமை என்பது வர்த்தமானி இரத்துச்செய்யப்பட்டவுடனேயே அறியமுடிந்தது.

2022 பெப்ரவரி மாதத்துக்கு இடையில் அதாவுல்லாவும் சலீமும் நகர சபையை பெற்றுத் தரவேண்டும். இல்லையேல், தங்களால் முடியாது என மக்கள் முன்னிலையில் பகிரங்கமாகக் கூறி ஒதுங்கிக்கொள்ள வேண்டும். இன்னும் இன்னும் சாய்ந்தமருது மக்களை ஏமாற்ற முனையக்கூடாது - என்றார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## காத்தான்குடியில் அடுப்பு வெடித்துச் சிதறியது



(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாவியா ரோட் உடையார் ஒழுங்கையில் நேற்று முன்தினம் (03) இரவு சமையல் எரிவாயு சிலிண்டரில் ஏற்பட்ட கசிவினால் அடுப்பு திடீரென்று வெடித்துச் சிதறியுள்ளது.

இதனால் அவ்வீட்டிலிருந்த சமையல் பாத்திரங்கள் மற்றும் கேஸ் அடுப்பு பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளது.

மேற்படி கேஸ் சிலிண்டர் புதிதாக விநியோ கிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் எஜமானியை வெட்டிக்கொலைசெய்த தந்தை, மகள் இருவருக்கும் 18 வரை விளக்கமறியல்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு பார் வீதியில் பெண் ஒருவரை கண்டம் துண்டமாக வெட்டிக் கொலை செய்து தங்க ஆபரணங்களை கொள்ளையிட்ட சம்பவத்தில் கைது செய்யப்பட்ட பணிப்பெண்ணையும் அவரது தந்தையையும் எதிர்வரும் 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு காணொளி மூலம் நேற்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம்.றிஸ்வான் உத்தரவிட்டார்.

வேலைக்காரியால் பார் வீதியிலுள்ள எஜமானியான 48 வயதுடைய செல்வராசா தயாவதி என்ற பெண்ணொருவரை கடந்த டிசம்பர் மாதம் 20ஆம் திகதி கண்டம் துண்டமாக வெட்டிக்கொலை செய்துவிட்டு அங்கிருந்த 46 பவுண் தங்கநகைகளை கொள்ளையிட்டுச் சென்ற பணிப்பெண்ணையும் அவரது தந்தையையும் பொதுமக்கள் மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதனைத் தொடர்ந்து குறித்த இருவரையும் கைதுசெய்த பொலிஸார் கடந்த டிசம்பர் 21ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது, அவர்களை நேற்று 04ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

குறித்த வழக்கு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம்.றிஸ்வான் முன்னிலையில் விசாரணைக்கு நேற்று எடுக்கப்பட்டபோது கொரோனா காரணமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் சந்தேக நபர்கள் இருவரையும் நீதிமன்றுக்கு அழைத்து வரமுடியாததையிட்டு காணொளி மூலம் தொடர்ந்து 14 நாட்களாக 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும், 11ஆம் திகதி மரண விசாரணையை மேற்கொள்ளுமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

# 30 வருட சேவையாற்றிய நிர்வாக உத்தியோகத்தருக்கு கௌரவிப்பு




(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் 30 வருடங்களாக சேவையாற்றி ஓய்வு பெற்றுச்செல்லும் நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எம்.எம்.றிபாயை பாராட்டிக் கௌரவிக்கும் பிரியாவிடை நிகழ்வு வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் தலைவர் டொக்டர் ஏ.சீ.அப்துல் றசாக் தலைமையில் கேட்போர் கூடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (02) நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வைத்திய அத்தியட்சகர் டொக்டர் அஸாத், எம். ஹனிபா கலந்துகொண்டு பொன்னாடை, ஞாபகச்சின்னம், பணப்பரிசு என்பனவற்றை வழங்கியதுடன், திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி ஆக்கில் சரிபுத்தீன், தாதிய பரிபாலகர் பி.ரீ.நௌபர், செயலாளர் ஏ.பி.நூறுல்லாஹ், கதிர் இயக்கவியலாளர் எஸ்.ரீ.எம்.றஹ்மத்துல்லா, நலன்புரிச் சங்கத்தின் உறுப்பினர்கள், சுகாதார சேவை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# பெண் தலைமை தாங்கும் குடும்பம் ஒன்றுக்கு மக்கள் சேவை மன்றத்தினால் வீடு கையளிப்பு


(கிண்ணியா நிருபர்)

வறுமைக்கோட்டின்கீழ் வாழும் நிரந்தர வீடுகளற்ற குடும்பங்களுக்கு பாதுகாப்பானதும் நிரந்தரமானதுமான வீடுகள் வழங்கும் வாழ்வதற்கான இல்லறம் செயற்றிட்டத்தின்கீழ் மற்றொரு நிரந்தர வீடு கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (03) திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தின் தலைவர் எம்.ரீ.எம்.பாரிஸ் மற்றும் மட்டக்களப்பு வைத்தியசாலை இயன் மருத்துவர் டிலக்ன் ஆகியோரின் பங்குபற்றுதலும் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்டத்தில் வறுமைக் கோட்டின்கீழ் வாழ்கின்ற தகரக் கொட்டில்கள் மற்றும் ஓலைக் குடிசைகளில் மிக நீண்டகாலம் கஷ்டப்பட்டு வாழ்ந்துவரும் குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை நிர்மாணித்து பாதுகாப்பானதும் கௌரவமானதுமான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன் வன்னி ஹோப் நிறுவனமும் திருகோணமலை மக்கள் சேவை மன்றமும் இணைந்து இன, மத. பிரதேச வேறுபாடுகளின்றி வீடுகளை நிர்மாணித்து வழங்கிவருகின்றன.

இந்த திட்டத்தின்கீழ் திருமலை பட்டிணமும் சூழலும் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பாலையுற்றுக் கிராமத்தில் தாயை இழந்த மூன்று பேரப்பிள்ளைகளைப் பராமரித்துவரும் ஒரு விதவைத் தாய்க்கே இந்த வீடு நிர்மாணித்து வழங்கப்பட்டது.

குறித்த வீடு நிர்மாணிப்புப் பணிகளுக்காக வன்னி ஹோப் நிறுவனத்தின் ஊடாக அவுஸ்ரேலியாவிலுள்ள பிரபல சமூக ஆர்வலர் விந்திரன் வெங்டாச்சலம் மற்றும் அவரது குடும்பத்தார் நிதிப் பங்களிப்பு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# பல்கலைக்கழக தரத்தை உயர்த்துவதற்கு ஊழியர்களின் ஒத்துழைப்பு மிக அவசியம்

## தென்கிழக்குப் பல்கலை உபவேந்தர் பேராசிரியர் றமீஸ்

(பாறுக் ஷிஹான்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2022ஆம் ஆண்டிற்கான அரச பணிகளை ஆரம்பிக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு 2022.01.03ஆம் திகதி இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் பதிவாளர் எச்.அப்துல் சத்தார் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஏ.றமீஸ் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

பல்கலைக்கழக உபவேந்தரினால் தேசியக் கொடி ஏற்றப்பட்டதுடன், தேசிய கீதமும் இசைக்கப்பட்டு இந்நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. இதனையடுத்து தாய்நாட்டிற்காக உயிர்நீத்த படைவீரர்களையும் ஏனையோரையும் நினைவுகூர்ந்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் பல்கலைக்கழக பதிவாளரினால் புதிய ஆண்டிற்கான அரச சேவை உறுதியுரை சிங்களம், தமிழ் ஆகிய அரசகரும மொழிகளில் வாசிக்கப்பட்டதுடன், பல்கலைக்கழக ஊழியர்கள் அவ்வுறுதி உரையினைக் கூறி புதிய ஆண்டிற்கான கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் பல்கலைக்கழக மூதவை உறுப்பினர் சிரேஷ்ட வைத்திய அதிகாரி டாக்டர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.ரஜப் சிறப்புரை நிகழ்த்தினார். உலகளாவிய தொற்றாக கொவிட்-19 பரவலடைந்துள்ளமை, அதனால் உலகம் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள், அதிலிருந்து மீள்வதற்கான வழிவகைகள் குறித்தும் அவர் தனது உரையில் கவனம் செலுத்தியிருந்தார். இதனைத் தொடர்ந்து பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஏ.றமீஸின் உரை இடம்பெற்றது.





பல்கலைக்கழக ஊழியர்கள் ஒவ்வொரு வருக்கும் புத்தாண்டு வாழ்த்தினைக் கூறிய உபவேந்தர், தனது உரையில் கொவிட்-19 நெருக்கடி நிலையிலும் கடந்த ஆண்டில் பல்கலைக்கழக ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் கருமமாற்றியதனை நினைவுகூர்ந்தார். ஜனாதிபதியின் தொலைநோக்குக்கமைய ஓர் அறிவுக் கேந்திரமாக இந்தப் பல்கலைக் கழகத்தினை மேம்படுத்துவதற்கு சகல ஊழியர்களும் வழங்கிவரும் தொடர்ச்சியான ஒத்துழைப்புக்கு உபவேந்தர் நன்றிகூறினார்.

உபவேந்தர் தனது உரையில், ''மலர்ந்துள்ள புதிய ஆண்டு சுபீட்சம் நிறைந்ததோர் ஆண்டாக இருக்கவேண்டும். பல்கலைக்கழகத்தின் தரத்தினையும் அதன் நிலையினையும் உயர்த்துவதற்கு ஊழியர்களின் அர்ப்பணிப்பும் தியாகமும் நிறைந்த பரஸ்பர ஒத்துழைப்பு அவசியமானது. ஒரு நிறுவனத்தில் கருமமாற்றுதல் என்று வருகின்றபோது, தனிப்பட்ட வாழ்க்கை நிலையினை கைவிட்டுவிட முடியாது. வேலைத்தளம் மற்றும் தனிபட்ட வாழ்வு ஆகிய இரண்டினையும் சமநிலையாகக்கொண்டு செல்ல வேண்டும். ஒருவர் மற்றையவர் மீது தேவையற்ற தலையீடுகளைக் கொண்டிருப்பதற்கு இடமளிக்கமுடியாது"

"ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் கொள்கைகளுக்கமைய, பல்கலைக்கழகம் புத்தாக்க சிந்தனைகளை உள்வாங்கி தொழில்துறைக்கேற்ற கற்கைநெறிகளை ஆரம்பிக் வேண்டிய தேவையுள்ளது. தொழில்வாண்மையுள்ள முயற்சியாளர்களாகவும் நுட்பவியலாளர்களாகவும் செயற்படக்கூடிய பட்டதாரிகளை உருவாக்கவேண்டும். பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவருகின்ற ஆய்வுகளின் எண்ணிக்கையினை அதிகரித்து, அவற்றின் தரத்தினையும் மேம்படுத்த வேண்டும். நிர்வாக நடவடிக்கைகளிலுள்ள தேவையற்ற காலதாமதத்தினைக் குறைப்பதற்கு இலத்திரனியல் நுட்பமுறைகளை உட்புகுத்த வேண்டும். இத்தகைய மாற்றங்களை பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்தக்கூடிய ஆண்டாக இவ்வாண்டினை கருதி செயற்பட வேண்டும். இதன்போது எழுகின்ற சவால்களை வெற்றிகொண்டு நாம் முன்னோக்கிப் பயணிக்க வேண்டும்" - என்றார்.

உபவேந்தரின் உரையுடன் இந்நிகழ்வு நிறைவுக்கு வந்தது. இந்நிகழ்வில் பீடாதிபதிகள், நிதியாளர், நூலகர், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், சிரேஷ்ட-கனிஷ்ட விரிவுரையாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், போதனைசாரா ஊழியர்கள், பல்கலைக்கழக பாதுகாப்பு ஊழியர்கள் என பலரும் பங்குபற்றினர். நிகழ்வின் இறுதியில் ஊழியர்கள் ஒவ்வொருவரும் தமக்கிடையே புதுவருட வாழ்த்தினைப் பரிமாறிக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

# இந்திய செய்திகள்

# தீவிரமடையும் கொரோனா - ஒமிக்ரொன் பரவல்: சனி - ஞாயிறுகளில் முடங்கும் தலைநகர் டில்லி

## முதலமைச்சர் கெஜ்ரிவாலுக்கு தொற்று; தனிமைப்படுத்தலில் பிரியங்கா காந்தி

டில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், குடும்ப உறுப்பினர் ஒருவர் மற்றும் தமது அலுவலக ஊழியர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி தன்னை தனிமைப்படுத்திக்கொண்டுள்ளார்.

இந்தியாவில் ஒமிக்ரொன் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 1,892ஆக அதிகரித்துள்ளது. அதிகபட்சமாக மஹாராஷ்டிராவில் 568 பேரும், டில்லியில் 382 பேரும், கேரளாவில் 185 பேரும் ஒமிக்ரொன் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், இந்தியாவில் நேற்று 24 மணிநேரத்தில் புதிதாக 37,379 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதுடன், 124 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனா தொற்று குறித்து டில்லி முதலமைச்சர் கெஜ்ரிவால் தெரிவிக்கையில்,

''எனக்கு கொவிட் தொற்று உறுதியாகியிருப்பதால் நான் தனிமைப்படுத்திக்கொண்டேன். என்னுடன் தொடர்பில் இருந்தவர்களை சோதனை செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்'' - எனத் தெரிவித்துள்ளார்.

ஒமிக்ரொன் வைரஸ் தாக்கம் தற்போது டில்லி, மகாராஷ்டிரா, மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநிலங்களில் தீவிரமாக பரவி வருகிறது. முக்கிய அரசியல் தலைவர்கள் பலருக்கு தற்போது பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.




இந்நிலையில், காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். அவரது அலுவலகத்தில் பணியாற்றும் ஊழியர் ஒருவருக்கும் குடும்ப உறுப்பினர் ஒருவருக்கும் கொரோனா தாக்கம் இருந்ததன் காரணமாக தற்போது அவர் தனிமையிலுள்ளார்.

மேலும், முக்கிய கூட்டங்களில் அவர் கலந்துகொள்வது தள்ளிப்போடப்பட்டுள்ளது. இதுகுறித்து அவர் தனது சமூக வலைத்தள பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

**டில்லியில் சனி, ஞாயிறுகளில் முழுப் பொதுமுடக்கம்**

இந்நிலையில், கொரோனா வேகமாக பரவி வரும் நிலையில் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பொதுமுடக்கம் அமுல்படுத்துவதாக டில்லி துணை முதலமைச்சர் மனீஷ் சிசோடியா தெரிவித்துள்ளார்.

டில்லியில், கொரோனா பரிசோதனை செய்வோரில் தொற்று உறுதியாகும் விகிதம் கடந்த 24 மணிநேரத்தில் 6.5 சதவீதமாக உயர்ந்திருக்கும் நிலையில், டில்லி பேரிடர் மேலாண்மை ஆணையம் நேற்று ஆலோசனை நடத்தியது. ஆலோசனைக்குப் பின்னர் துணை முதலமைச்சர் வெளியிட்ட அறிவிப்பில்,

“டில்லியில் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் முழுப் பொதுமுடக்கம் அமுல்படுத்த டில்லி பேரிடர் மேலாண்மை ஆணையம் முடிவெடுத்துள்ளது. அத்தியாவசிய பணிகள் தவிர, பிற அரசு மற்றும் தனியார் அலுவலக ஊழியர்கள் வீட்டிலிருந்தே பணிபுரிய வேண்டும்.

டில்லியில் கடந்த 8 முதல் 10 நாட்களில் 11,000 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒமிக்ரொன் கொரோனாவும் பரவி வருகின்றது. மருத்துவமனையில் 350 பேர் சிகிச்சைபெற்று வருகின்றனர். அவர்களில் 124 பேருக்கு ஒக்ஸிஜன் மற்றும் 7 பேர் வெண்டிலேட்டர் உதவியுடனும் இருக்கின்றனர்.”

ஏற்கனவே இரவுநேர ஊரடங்கு, உணவகம் உள்ளிட்டவைக்கு கட்டுப்பாடுகள் என மஞ்சள் எச்சரிக்கை அமுலில் இருப்பது குறிப்பிடத்தக்கது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆபிரிக்காவினூடாக ஐரோப்பா செல்ல முயன்ற யாழ். வாசிக்கு மலேரியா

*(யாழ். நிருபர்)*

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் மலேரியா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார். இவருக்கு பிளாஸ்மோடியம் ஃபால்ஸிபோரம் என்ற மூல மலேரியாவை ஏற்படுத்தும் கிருமி காணப்பட்டது.

இவர் அண்மையில் சட்டவிரோதமாக ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்காக ஆபிரிக்கா கண்டத்தில் உள்ள நாடுகளுக்கு சென்றுள்ளார். இது ஒரு ஆபத்தான சூழ்நிலையை எடுத்துக்காட்டுகிறது என யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் வைத்தியர் ஜமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

அண்மையில் மலேரியா நோயாளிகள் இனங்காணப்பட்டமை தொடர்பாக நேற்று கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நமது நாட்டில் இருந்து பலர் ஐரோப்பிய நாடுகளுக்கு சட்டவிரோதமாக செல்வதற்கு எத்தனிக்கின்றனர். அவர்கள் அங்கு செல்வதற்காக முதலில் ஆபிரிக்க நாடுகளுக்கு செல்கிறார்கள்.

அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்கான பயணங்கள் தடைப்பட்டதும் மீண்டும் திருட்டுத்தனமாக எமது நாட்டுக்குள் வருகின்றார்கள். இவர்கள் மலேரியா உள்ள இடத்தில் இருந்து வருகின்றார்கள்.

அவர்களுக்கு அந்த நாடுகளில் சிலவேளை மலேரியா காய்ச்சலும் ஏற்பட்டிருக்கலாம். இவ்வாறு வருபவர்கள் மீண்டும் எமது பிரதேசத்தில் மலேரியாவை தோற்றுவிக்கின்றார்கள்.

மிக அண்மையில் 3 மலேரியா நோயாளிகள் இனங்காணப்பட்டமை பாரியதொரு அபாய நிலையை எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. எனவே நாங்கள் எமது மக்களுக்கு விழிப்புணர்வூட்ட வேண்டும்.

காய்ச்சல் இருக்கும் வேளையில் அவர்கள் வெளிநாட்டு பயணங்கள் மேற்கொண்டால் மலேரியா பரிசோதனை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் மலேரியா உள்ள நாடுகளுக்கு சென்று வந்தால் அதற்குரிய தடுப்பு மருந்துகளை எந்த ஒரு வைத்தியசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தற்போது 3 மலேரியா நோயாளிகள் இனங்காணப்பட்டதால் எமது பிரதேசத்திலிருந்து வரும் அனைவருக்கும் மருத்துவ சோதனை செய்தால் நல்லது. அடுத்ததாக நாங்கள் நுளம்பு கட்டுப்பாட்டையும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

குறிப்பாக தற்போது மலேரியா நோய் இனங்காணப்பட்டதால், மலேரியா கிருமியானது ஒருவரில் குறைந்தது 21 நாட்கள் வரை இருக்கலாம். அத்துடன் நுளம்பிலும் 21 நாட்கள் வரை இருக்கலாம்.

எனவே 21 நாட்களுக்கு நாங்கள் எமது சுற்றாடலை சுத்தப்படுத்துவதனால் இந்த மலேரியா கிருமி எமது சமூகத்தில் பரவுவதைக் கட்டுப்படுத்தலாம்.

இதற்குரிய விழிப்புணர்வு நடவடிக்கைகளை யாழ். மாநகர சபை, கொக்குவில் பிரதேச சபை முன்னெடுத்தால் நல்லது. வருமுன் காப்பதனால் பெருமளவு நோய் ஏற்படுவதை தவிர்க்கலாம். இது தற்போதைய காலத்தின் கட்டாயமாகும்.

குறிப்பாக கொவிட் தொற்றுக்குப் பின்னர் பல நாடுகளில் மலேரியா மீண்டும் வருவது கண்டறியப்பட்டுள்ளது.

அந்தவகையில் இலங்கையும் பாதிக்கப்பட்டதை நாம் விழிப்புடன் உணர்தல் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## முகக்கவசம் அணியாது அலட்சியப்படுத்துவோருக்கு வீதிக்கு இறங்கி முகக்கவசம் அணிவித்த தமிழக முதலமைச்சர்



முகக்கவசம் அணியாமல் வீதியில் சென்றுகொண்டிருந்தவர்களை கவனித்த தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு முகக்கவசம் அணிவித்து அனுப்பியுள்ளார்.

தமிழகத்தில் கொரோனா வைரஸ் பாதிப்பு அதிகரித்துவரும் சூழலில், அனைவரும் முகக்கவசம் அணியவேண்டுமென தொடர்ந்து அறிவுறுத்தப்படுகிறார்கள். ஆனாலும், சிலர் முகக்கவசம் அணியாமல் அலட்சியமாக இருப்பதாக சமீபத்தில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்நிலையில், சென்னையில் பல்வேறு பகுதிகளில் முதலமைச்சர் ஸ்டாலின் நேரில் ஆய்வு செய்கையில் பொதுமக்களிடம் முகக்கவசங்களை வழங்கி, விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

இதன்போது வீதியில் சிலர் முகக்கவசம் அணியாமல் சென்றதை கவனித்த அவர், வீதிக்கு இறங்கி முகக்கவசமின்றி வந்தவர்களுக்கு தானே முகக்கவசத்தை மாட்டிவிட்டுள்ளார். தொடர்ந்து, அங்கிருப்பவர்களுக்கு முகக்கவசத்தை வழங்கினார்.

இந்நிலையில்அ தமிழகத்தில் ஒமிக்ரொன் மற்றும் கொரோனா பாதிப்பை கட்டுப்படுத்த, வார இறுதி நாட்களான வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் வழிபாட்டுத் தலங்களை மூடவும், இன்றுமுதல் கடைகளுக்கு நேரக் கட்டுப்பாடு விதிக்கவும் முடிவு செய்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் அதிகரித்துவரும் ஒமிக்ரொன் மற்றும் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் அதிகாரிகளுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தியுள்ளார்.



## தாய் இறந்தும் வராத மகன்கள்; 4 கி.மீ. தூரம் சுமந்துசென்று இறுதிச்சடங்கு செய்த மகள்கள்



தாய் இறந்தது அறிந்தும் வராமல் புறக்கணித்த மகன்களால் அவரது உடலை 4 கி.மீ. தூரம் சுமந்து சென்று மகள்களே இறுதிச்சடங்கு செய்த சம்பவம் ஒடிசா மாநிலத்தில் நடந்துள்ளது.

ஒடிசா மாநிலம் பூரி நகரில் ஜதி நாயக் என்ற மூதாட்டி காலமானார். இவருக்கு இரு மகன்கள் மற்றும் 4 மகள்கள் உள்ளனர். மகள்களுக்கு திருமணமாகி கணவன் வீட்டில் வசிக்கின்றனர். மகன்களுக்கும் திருமணமாகி தனியாக வசிக்கின்றனர்.

கடந்த 10 ஆண்டாக மகன்கள் தாயை பார்த்துக்கொள்ளாமல் புறக்கணித்து வந்துள்ளனர். இந்நிலையில், மூதாட்டி சிறு வியாபாரம் செய்து தன்னுடைய உணவு செலவுகளை சமாளித்து வந்துள்ளார். மூதாட்டி உயிரிழந்த தகவலை அக்கம்பக்கம் வீட்டார் அவருடைய இரு மகன்களுக்கு தெரிவித்துள்ளனர். ஆனால், அவர்கள் இருவரும் இறுதிச்சடங்கு செய்ய வரவே இல்லை. இதையடுத்து 4 மகள்களும் தனது தாய்க்கு இறுதிச்சடங்கு செய்ய முடிவு செய்தனர். தாயின் சடலத்தை நான்கு கி.மீ. தூரம் உள்ள சுடுகாடுவரை சுமந்து சென்று அவர்களே அனைத்து காரியத்தையும் செய்து முடித்துள்ளனர்.

*04ஆம் பக்கத் தொடர்ச்சி...*

**கே : கிழக்கு மக்கள் சார்பில் அந்த ஆவணத்தில் சேர்க்க நீங்கள் முன்வைக்கும் ஆலோசனை என்ன?**

13இல் வடக்கு - கிழக்கை இணைப்பது தொடர்பில் மிகத்தெளிவாக வலியுறுத்தப்பட்டுள்ளது. எனவே, கிழக்கில் சகல இன மக்களும் ஒற்றுமையாக வாழும் சூழ்நிலையில், முஸ்லிம் கட்சிகள் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டுமானால் கிழக்கு மாகாணம் தனியாக இருக்கவேண்டும் என்ற அம்சத்தையாவது உள்ளடக்க வேண்டும். அது சாத்தியப்படாமல் போனால் கிழக்கில் பதற்றம் அதிகரிக்கும். இந்த ஆவணத்தில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் கிழக்கு வேறாகவும், வடக்கு வேறாகவும் இருக்கவேண்டும் என்பதையும் ஒவ்வொரு மாகாணங்களும் தனித்தனியாக இருக்கவேண்டும் என்பதையும் தமிழ்க் கட்சிகள் உறுதிப்படுத்த வேண்டும். இதனை தவிர்த்து இணைந்த வடக்கு - கிழக்கில் சமஷ்டி தீர்வென்பது கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகளை முற்றாக மறுப்பதுடன், வடக்கு பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெறும் விடயமாக நோக்க நேரிடும்.

இதில் வடக்கு - கிழக்குக்கு வெளியே உள்ள முஸ்லிம்களையும் நாங்கள் கவனத்தில் எடுத்து அவர்களின் எதிர்காலத்தையும், பிரச்சினைகளையும் பற்றி நாங்கள் சிந்திக்க வேண்டும். சஹ்ரானின் தாக்குதலின் பின்னர் முஸ்லிம்கள் பலத்த சங்கடங்களை அனுபவித்து வருகிறார்கள். முஸ்லிம்களின் வாழ்வியல், மத, கலாசார விடயங்கள் இன்று பாரிய சிக்கல்களை அனுபவித்துவரும் சூழ்நிலையில், தமிழ்க் கட்சிகள் முஸ்லிம்களை அனுதாப கண்கொண்டு பார்க்கவேண்டியுள்ளது. முஸ்லிம் அரசியல் சஹ்ரானின் தாக்குதலுக்கு முன்னர், தாக்குதலுக்குப் பின்னர் என்ற நிலை உருவாகியுள்ளது. இந்த காலகட்டத்தில் இந்தியப் பிரதமருக்கு அனுப்பும் ஆவணத்தில் முஸ்லிம்களின் ஒப்புதலையும் பெறுதலென்பது தெற்கு சிங்கள அரசியலில் பாரிய அதிர்வலைகளை முஸ்லிம்களுக்கு எதிராக உருவாக்கும் அபாயமும் உள்ளது. இந்த விடயம் தொடர்பில் சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்கு நிறைந்தவர்களும், அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களுமான தினேஷ் குணவர்தன, விமல் வீரவங்ச போன்றோர் இரத்தக்களரி உருவாகும் வாய்ப்புள்ளதாகவும் மேலும் பல விடயங்களையும் தெரிவித்திருந்தார்கள். எனவே, சிங்களத் தலைவர்கள் முஸ்லிம் மக்களின் நிலைப்பாடறிய ஆவலாக உள்ளார்கள். பிழையான முடிவுகளை முஸ்லிம் தலைவர்கள் எடுத்தால் அது சிங்கள மக்களுடன் வாழும் முஸ்லிம்களின் இருப்புக்கு அச்சுறுத்தலாக மாறும் வாய்ப்புள்ளது.

**கே : தமிழ்பேசும் கட்சிகளின் பேச்சுவார்த்தைகள் தொடர்பில் தமிழ்க் கட்சிகளுக்கு நீங்கள் முன்வைக்கும் கோரிக்கை என்ன?**

நாட்டில் எல்லா திசைகளிலும் பரந்துபட்டு வாழும் முஸ்லிம்களின் நலன்கருதி இப்படியான நடவடிக்கைகளில் மற்றும் இந்தியப் பிரதமருக்கு அனுப்ப தயாரிக்கப்படும் அந்த ஆவணங்களில் எவ்வகையான விடயங்களை உள்ளடக்கியுள்ளீர்கள் எனும் விடயத்தை முஸ்லிம் எம்.பிக்களுக்காவது வெளிப்படையாக காட்டுங்கள் என தமிழ்க் கட்சிகளை கேட்டுக்கொள்கிறேன். இந்த வரலாற்று முக்கியத்துவமிக்க ஆவணங்கள் தொடர்பில் எம்.பிக்களான நாங்கள் சிவில் சமூகம், பள்ளித்தலைமைகள், உலமாக்கள், புத்திஜீவிகளுடன் கலந்துரையாடியே இந்த ஆவணத்தை இறுதிப்படுத்த வேண்டும். இந்த ஆவணத்தின் மூலம் உருவாகும் நன்மை, தீமைகள் பரந்துபட்டு ஆராயப்பட வேண்டும். இந்த ஆவணங்களின் மூலம் வடக்கு, கிழக்கில் வாழும் முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி, நாட்டில் எல்லா திசைகளிலும் பரந்துபட்டு வாழும் முஸ்லிம்களுக்கு ஆபத்து இருக்கிறது. சகலருடைய விடயங்களையும் கவனத்திற்கொண்டே இந்த ஆவணம் தொடர்பில் முஸ்லிம்கள் ஒரு நிலைப்பாட்டை எடுக்கமுடியும். அப்படி இல்லாமல் தனிப்பட்ட ரீதியாக ஏதாவது செய்தால் அது நாட்டிலும், சமூகத்திலும் பாரிய குழப்பத்தை உண்டாக்கும். இந்த ஆவணம் மாகாண சபைத் தேர்தலை நடத்தக்கோரிய விண்ணப்பமாக அனுப்படவுள்ளதாக சிலர் பேசிக்கொள்கின்றனர். அப்படியாயின், அந்த வரைவை வரைந்து சகல எம்.பிக்களும் அந்த நகலை தரமுடியும். மாகாண சபைத் தேர்தலை நடத்தக்கோரிய விண்ணப்பமாக மட்டும் அந்த ஆவணம் இருந்தால் மக்கள் பிரதிநிதியான நாங்களே கையெழுத்திட தயாராக உள்ளோம். இதில் எங்களுக்கு இரட்டை கருத்தில்லை.

**கே : மாகாண சபைத் தேர்தல்கள் நீண்டகாலமாக நடைபெறாமல் உள்ளதே, இது தொடர்பில் என்ன நினைக்கிறீர்கள் ?**

இந்த சந்தர்ப்பத்தில் ஒரு விடயத்தை நான் கூறவேண்டும். மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாமல் ஒத்திப்போட காரணம், உண்மையில் இந்த அரசாங்கம் அல்ல. கடந்த நல்லாட்சி அரசாங்கம் இருந்தபோது மாகாண சபைத் தேர்தலை ஒத்திப்போட அப்போதைய பிரதமர் ரணிலும், அப்போதைய ஜனாதிபதி மைத்ரியுமே முயற்சி செய்தனர். அதற்காக சட்டமூல திருத்தத்தை கொண்டுவந்தபோது நாங்கள் பலமாக எதிர்த்தோம். அன்று 06.30க்கு வாக்கெடுப்பு இருந்தபோது 05.00 மணியளவில் அந்த சட்டமூலத்தை எதிர்ப்பது என்று தீர்மானித்து மலையக, முஸ்லிம், தமிழ் எம்.பிக்கள் நாங்கள் 30 பேரளவில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமின் அறையில் தயாராக இருந்தபோது தமிழ்க் கூட்டமைப்பின் எம்.பியும், பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்ரமரத்ன ஆகியோர் அங்கு வருகைதந்து இந்த சட்டமூலத்தை ஆதரித்து நிறைவேற்ற வேண்டும் என்றும் அரசாங்கத்தை பாதுகாக்க வேண்டும் என்றும் கடுமையாக வாதிட்டார்கள். அப்படி அந்த சட்டமூலத்தை நிறைவேற்ற அன்று பிரதான பாத்திரம் வகித்தவர் தமிழ்க் கூட்டமைப்பின் எம்.பியும், பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன்தான். என்னுடைய இந்த கூற்றை அவர் மறுத்தால் இதுதொடர்பிலான உண்மைகளை வெளியிட நான் தயாராக உள்ளேன். அவர் பகிரங்க விவாதமொன்றுக்கு வந்து இதனை மறுப்பாரா என்று சவால் விடுகிறேன். அவர்தான் மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்க முன்னின்று பணியாற்றியவர்.

அவர்களின் தேவைகளுக்காக சிறுபான்மையினருக்கு இருந்த மிகப்பெரும் வரப்பிரசாதமான விகிதாசார தேர்தல் முறையை மாற்றி, அந்த முறைக்கு பதிலாக தொகுதிவாரி முறைமையை வலுக்கட்டாயமாக திணித்து, மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்று போராடியவர்கள் இவர்களே. தேர்தல் எல்லைநிர்ணய ஆணைக்குழு சமர்ப்பித்த அறிக்கையை குறித்த அமைச்சின் அமைச்சர் அடங்கலாக 224 எம்.பிக்கள் எதிர்த்து வாக்களித்து நிராகரித்த விடயம். இப்போது ஜனாதிபதி கோட்டாபய, பிரதமர் மஹிந்த போன்றோர் இப்போது ஆட்சியில் இருப்பதனால் கடந்த காலங்களில் தமிழ்க் கூட்டமைப்பின் எம்.பியும், பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்ரமரத்ன ஆகியோர் விட்ட தவறுகளை மன்னிக்கவோ அல்லது மறந்துவிடவோ முடியாது. இந்த ஆவணங்களை அவர்கள் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதற்காக தயாரிக்கிறார்கள் என்றால் வெளிப்படைத்தன்மையுடன் இருந்து சகல நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் ஒப்பத்தை பெற முடியும்.

**கே : இந்த பேச்சுவார்த்தைகள் எல்லாவற்றிலும் உங்கள் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் பிரதான பாத்திரம் வகிக்கிறார். அவர் மு.கா. உயர்பீடத்திடம் கலந்துரையாடி முடிவெடுத்தாரா? இது தொடர்பில் நீங்கள் அவருடன் பேசினீர்களா? இந்த பேச்சுவார்த்தைகள் தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன?**

இப்போது நடக்கும் பேச்சுவார்த்தைகள் இணைந்த வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் சமஷ்டி தீர்வை பெறவேண்டும், சுயநிர்ணய உரிமையை பெறவேண்டும் என்பதே இப்போது வெளிப்படையாக பேசப்பட்டு வருகிறது. மக்களின் பிரதிநிதிகளுக்கு கூட காட்டமுடியாத ஆவணமா அது என்று கேட்கிறேன். சஹ்ரானின் தாக்குதலின் பின்னர் முஸ்லிம்கள் பல்வேறு இன்னல்களை சந்தித்துக்கொண்டிருக்கும்போது மதத் தீவிரவாதிகளாக, மதப் பயங்கரவாதிகளாக சிங்கள அரசியல் தலைமைகள் விரல் நீட்டி பேசும் நிலையில், முஸ்லிம்கள் நாட்டை பிரிக்க துணைபோகும் பிரிவினைவாதிகள் எனும் இழிச்சொற்களை பெற்றுத்தரவேண்டாம் என சிரேஷ்ட தமிழ்த் தலைமையான இரா.சம்பந்தனிடம் கேட்டுக்கொள்கிறேன். இந்த 13ஆம் திருத்தத்தின் விளைவுகளை பற்றி நன்றாக அறிந்தமையினாலேயே அன்று தலைவர் அஷ்ரப் அதை கிழித்தெறிந்தார். தமிழ் மக்களுடன் பேச்சுவார்த்தைகள் செய்யவேண்டும், பிரச்சினைகள் தொடர்பில் புரிந்துணர்வு வேண்டும் என்பதில் தலைவர் அஷ்ரப் உறுதியாக இருந்தார்.

முஸ்லிம்களின் நலன் தொடர்பில் மக்கள் பிரதிநிதியான நாங்கள் கரிசனையுடன் நடந்துகொள்ள வேண்டும். இது தொடர்பில் எங்களின் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் அந்த பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்கின்றவர் என்ற ரீதியில் பலவிடயங்ககளை குறுந்செய்தியினூடாக கேட்டிருந்தேன். இந்த பேச்சுவார்த்தை இறுதி நிலையை தொட முன்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களுடனும், கட்சி முக்கியஸ்தர்களுடனும் கலந்துரையாடுவதாக உறுதியளித்துள்ளார். அந்தச் சந்தர்ப்பத்தில் தலைவரிடம் வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் மற்றும் ஏனைய பாகங்களிலுள்ள முஸ்லிம்களின் நிலைகள் தொடர்பில் நான் எடுத்துரைக்கவுள்ளேன். தமிழ்க் கட்சிகளின் பேச்சுவார்த்தைகள் கொள்கையடிப்படையில் இருக்கவேண்டுமே தவிர, 13ஐ முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்பதை எங்களினால் ஏற்றுக்கொள்ள முடியாது. வடக்குக்கு வேறாகவும் கிழக்குக்கு வேறாகவும் மாகாண சபைகள் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். வடக்கு - கிழக்கை இணைப்பதை ஏற்க முடியாது - என்றார்

**நேர்கண்டவர் : நூருல் ஹுதா உமர்**
***(மாளிகைக்காடு செய்தியாளர்)***

# உலக செய்திகள்

## சீன ஹெனான் நகரில் முழு ஊரடங்கு அமுல்



சீனாவில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக, ஹெனான் மாகாணத்திலுள்ள Yuzhou நகரில் முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

10 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வசிக்கும் அந்நகரில் 3 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதியானதால், மக்கள் வெளியே செல்வதை தவிர்த்து வீடுகளிலேயே இருக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

அங்கு பொதுப் போக்குவரத்து சேவை நிறுத்தப்பட்டு வணிக வளாகங்கள், அருங்காட்சியகங்கள் மற்றும் சுற்றுலாத் தலங்கள் உள்ளிட்ட அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

பீஜிங்கில் குளிர்கால ஒலிம்பிக் போட்டி நடைபெற இன்னும் ஒரு மாதமே உள்ள நிலையில், சீன அரசு கொரோனா தடுப்பு நடவடிக்கையை தீவிரப்படுத்தியுள்ளது. ஏற்கனவே, சீனாவின் சியான் நகரில் கடந்த 2 வாரங்களாக கடும் ஊரடங்கு அமுலாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.



பனிப்பொழிவில் அமெரிக்காவில் அழகு மிகுந்த வெள்ளை மாளிகையை பார்வையிடும் சுற்றுலாப் பயணிகள்...

## 15 நிமிட இடைவெளி...

## வெவ்வேறு ஆண்டுகளில் பிறந்த இரட்டைக் குழந்தைகள்



அமெரிக்காவில் இரட்டைக் குழந்தைகள் 15 நிமிட இடைவெளியில் வெவ்வேறு ஆண்டில் பிறந்துள்ளன.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம் கிரீன்பீல்ட் நகரில் வசிக்கும் ரொபர்ட் ட்ரூஜில்லோ - பாத்திமா மேட்ரிகல் தம்பதிக்கு ஏற்கனவே மூன்று குழந்தைகள் உள்ளனர். இந்நிலையில், மீண்டும் கர்ப்பம் தரித்த பாத்திமா, டிசம்பர் 31இல் பிரசவத்துக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

பாத்திமாவுக்கு 2021 டிசம்பர் 31 நள்ளிரவு 11.45 மணிக்கு ஆண் குழந்தையொன்று பிறந்தது. அடுத்த 15 நிமிடங்களில் 2022 ஜனவரி முதலாம் திகதி பெண் குழந்தை பிறந்தது. டொக்டர்கள் மற்றும் குடும்பத்தினருடன் மகிழ்ச்சியை பகிர்ந்துகொண்ட பாத்திமா, "இரட்டைக் குழந்தைகள் பிறந்தது மிகவும் சந்தோஷமாக உள்ளது. ஆனால், இருவருக்கும் வெவ்வேறு ஆண்டில் பிறந்த நாள் என்பதுதான் ஆச்சர்யம் கலந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது" என்றார்.

ஆண் குழந்தைக்கு ஆல்பிரெடோ ஆண்டோனியோ என்றும், பெண் குழந்தைக்கு அய்லின் யோலாண்டா என்றும் பெயர் சூட்டியுள்ளனர்.

## பிரான்ஸில் 46 உருமாற்றங்களைக்கொண்ட புதிய வகை கொரோனா வைரஸ் கண்டுபிடிப்பு

### 12 பேருக்கு தொற்று உறுதி



- ஒமிக்ரொனை விட அதிகமாக பரவும் தன்மை கொண்டது – ஆராய்ச்சியாளர்கள்
- 'IHU B.1.640.2' என பெயர் சூட்டிய விஞ்ஞானிகள்

பிரான்ஸில் புதிய வகை கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது எனவும், இது ஒமிக்ரொனை விட அதிகமாக பரவும் தன்மை கொண்டது எனவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.


கடந்த டிசம்பர் 10ஆம் திகதி மத்திய ஆபிரிக்க நாடான கெமரூனிலிருந்து வந்த பயணிக்கு முதன்முறையாக உருமாறிய கொரோனா கண்டறியப்பட்டுள்ளதாகவும், அவருடன் தொடர்பில் இருந்த மார்சேயில்ஸ் பகுதியைச் சேர்ந்த 12 பேருக்கு இந்த வகை தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.



மேலும், இந்த உருமாறிய கொரோனாவுக்கு 'IHU B.1.640.2' வகை பெயரிட்டுள்ள விஞ்ஞானிகள், இந்த வகை தொற்று 46 உருமாற்றங்களைக்கொண்டது எனவும், ஒமிக்ரொனை விட வீரியமிக்கதாக இருக்கக்கூடும் எனவும் தெரிவித்துள்ளனர்.


பிற நாடுகளில் இன்னும் இந்த வகை தொற்று கண்டறியப்படாத நிலையில், உலக சுகாதார அமைப்பும் அதிகாரபூர்வமாக எந்த தகவலையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## 24 மணிநேரத்தில் 15 முறை புத்தாண்டு கொண்டாட்டம்



சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மையத்திலுள்ள 10 பேர், 24 மணிநேரத்துக்குள் 15 முறை புத்தாண்டை கொண்டாடியுள்ளனர்.


அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் உள்ளிட்டவை சார்பில் விண்வெளியில் சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மையம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு 10 விண்வெளி வீரர்கள் உள்ளனர். டிசம்பர் 31ஆம் திகதி இரவில் உலகெங்கும் புத்தாண்டு கொண்டாட்டங்களுக்காக மக்கள் காத்திருந்தனர். அதுபோலவே இந்த வீரர்களும் புத்தாண்டை வரவேற்கத் தயாராக இருந்தனர்.



இந்திய நேரப்படி 31ஆம் திகதி இரவு 6.14 மணிக்கு பசுபிக் பெருங்கடலில் மார்ஷல் தீவுகள் பகுதியை விண்வெளி ஆய்வு மையம் கடந்தபோது, அதிலிருந்த வீரர்கள் முதல் முறையாக புத்தாண்டை வரவேற்றனர். அதன்பின் இந்த விண்வெளி மையம் பூமியின், ஒவ்வொரு பகுதியையும் கடக்கும்போது, நேர மண்டலம் மாற்றமடையும்போது, அதில் இருந்த விண்வெளி வீரர்கள் புத்தாண்டை வரவேற்றுள்ளனர்.

மேலும், இந்த 10 பேரும் தங்களது நாட்டுக்கு மேலே விண்வெளி மையம் சென்றபோதும், புத்தாண்டைக் கொண்டாடினர். இப்படி 24 மணிநேரத்தில், 15 முறை இவர்கள் புத்தாண்டைக் கொண்டாடினர். இவர்களைத் தவிர, விண்வெளியில் சீனா அமைத்துவரும் ஆய்வு மையத்திலுள்ள மூன்று வீரர்களும் 'கொரோனா இல்லா உலகில்' புத்தாண்டைக் கொண்டாடினர்.

## டெல்ட்டாவைத் தொடர்ந்து அச்சுறுத்தும் 'ப்ளோரொனா'



உலக மக்களுக்கு சோதனை மேல் சோதனையாக கொரோனா உடன் இன்புளுயன்சா வைரஸும் சேர்ந்து, ப்ளோரொனா என்ற புதிய வைரஸ் உருவாகியிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா வைரஸ், டெல்ட்டா, கமா, ஒமிக்ரொன் என பல வடிவங்களில் உலகை ஆட்டிப் படைத்து வருகிறது. இந்நிலையில், கொரோனா வைரஸுடன், இன்புளுயன்சா எனப்படும் குளிர் காய்ச்சலை உண்டுபண்ணும் வைரஸும் இணைந்து, புளோரோனா என்ற புதிய வைரஸ் உருவாகியுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலில் கர்ப்பிணியொருவருக்கு முதன்முதலாக ப்ளோரொனா வைரஸ் பாதிப்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கொரோனா மற்றும் இன்புளுயன்சா ஆகிய இரண்டுக்கும் இருமல், தடிமன், காய்ச்சல், மூக்கு ஒழுகுதல், தொண்டை வறட்சி, தலைவலி, சோர்வு போன்ற ஒரே மாதிரியான அறிகுறிகள் உள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

எனினும், நோய் பாதிப்பு அறிகுறி தோன்றும் காலத்தில் வித்தியாசம் காணப்படுகிறது. உடலில் வைரஸ் நுழைந்த உடன் 3 - 4 நாட்களில் ப்ளூ பாதிப்பு அறிகுறிகள் தோன்றுகின்றன. 2 - 14 நாட்களில் கொரோனா பாதிப்பு தெரியத் துவங்குவதாக அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் தெரிவித்துள்ளது.

இரு வைரஸ்களும் காற்று வாயிலாகவே மூச்சுக் குழல், நாசி, நுரையீரல் செல்களை தாக்குவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். எனினும், இந்த அறிகுறிகள் நபருக்கு நபர் வேறுபடுகின்றன. சிலருக்கு அறிகுறியின்றி பாதிப்பு ஏற்படுகிறது. வேறு சிலருக்கு மிதமானது முதல் தீவிர பாதிப்பு உண்டாவது தெரியவந்துள்ளது. இரண்டு வைரஸ்களின் மரபணுக்களும் வெவ்வேறு என்பதால் அவற்றின் பாதிப்பை கண்டுபிடிக்க தனித்தனி சோதனை அவசியம்.

ப்ளோரோனா பாதிப்பு தீவிரமடைந்தால் நுரையீரல் அழற்சி நோய்க்கு வித்திடும். அத்துடன், ஒருசிலருக்கு இதய பாதிப்பையும் ஏற்படுத்தக்கூடும் என விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இதைத் தொடர்ந்து இஸ்ரேல் அரசு, நாட்டுமக்களுக்கு நான்காவது பூஸ்டர் டோஸ் போடும் திட்டத்தை தொடங்கியுள்ளது. இந்தியாவில் தற்போதுதான் கொரோனா மூன்றாவது அலை பரவி வருகிறது.

இந்நிலையில், ப்ளோரோனா பாதிப்பை தவிர்க்க முகக்கவசம் அணிவது, அடிக்கடி கை, கால்களை கழுவுவது, சமூக இடைவெளியை கடைப்பிடிப்பது போன்றவற்றை கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

## அமெரிக்காவில் தீவிரமடையும் கொரோனா: ஒரே நாளில் 10.42 இலட்சம் பேருக்கு தொற்று



அமெரிக்காவில் முதன்முறையாக தினசரி கொரோனா பாதிப்புகள் 10 இலட்சத்தைக் கடந்துள்ளன. அமெரிக்காவில், இதற்கு முன் ஏற்பட்ட கொரோனா அலைகளைக் காட்டிலும், ஒமிக்ரொன் பாதிப்பால் கொரோனா பரவல் மும்மடங்கு அதிகரித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை 5.91இலட்சம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டதே தினசரி பாதிப்பின் உச்சமாகக் கருதப்பட்ட நிலையில், நேற்று 24 மணிநேரத்தில் 10 இலட்சத்து 42 ஆயிரம் பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டது.

இதையடுத்து 12 முதல் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கும் பூஸ்டர் டோஸ் தடுப்பூசி செலுத்துமாறு அரசு அறிவுறுத்தியுள்ளது.

உலகம் முழுவதும் கொரோனா தாக்கம் குறைய ஆரம்பித்த நிலையில் ஒமிக்ரொன் தொற்று பரவத் தொடங்கியதும் மீண்டும் கொரோனாவால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை உச்சத்தை அடைந்து வருகிறது.

தற்போது, அமெரிக்காவில் கடந்த 7 நாட்களின் சராசரி கொரோனா பாதிப்பின் எண்ணிக்கை 4.13 இலட்சத்தைத் தாண்டியிருந்த நிலையில், நேற்று முன்தினம் (ஜன.3) ஒரே நாளில் கொரோனாவால் 10 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டதாக ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

இதனால், 100 அமெரிக்கர்களில் ஒருவருக்கு தொற்று என்கிற அடிப்படையில் கொரோனாவின் தாக்கம் அதிகரித்துள்ளது. மேலும், இதுவரை தொற்று பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 5.70 கோடியாகவும் (5,71,31,187) பலியானவர்கள் 8.48 இலட்சமாகவும் (8,48,885) உயர்ந்துள்ளது.

## போராளி குழுக்களிடையே மோதல்: கொலம்பியாவில் 23 அப்பாவிகள் பலி

கொலம்பியாவில் இரு போராளி குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் அப்பாவி பொதுமக்கள் 23 பேர் கொல்லப்பட்டனர்.

அரவ்கா மாநிலம் வழியாக அண்டை நாடான வெனிசூலாவுக்கான போதைப்பொருள் கடத்தலை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்காக போராளி குழுக்களுக்கிடையே அடிக்கடி மோதல்கள் நடைபெற்று வருகின்றன.

15 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வரும் மோதல்களில் இதுவரை பொதுமக்கள் 868 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

## சிரிய இராணுவ வீரர்கள் சென்ற பஸ் மீது பயங்கரவாதிகள் தாக்குதல்

### 5 பேர் உயிரிழப்பு; 20 பேர் படுகாயம்



சிரியாவிலுள்ள பாலைவன நகரமான பல்மைராவில் இராணுவ வீரர்கள் சென்ற பஸ்மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 5 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர்.

20இற்கும் மேற்பட்ட இராணுவ வீரர்களுடன் சென்றுகொண்டிருந்த பஸ் மீது அங்கு பதுங்கியிருந்த பயங்கரவாதிகள், ரொக்கெட்டுகளை வீசியதாகவும், அதனைத் தொடர்ந்து துப்பாக்கிச்சூடு நடத்தியதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தாக்குதலில் 5 இராணுவ வீரர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில், 20 வீரர்கள் படுகாயமடைந்துள்ளனர். சிரியாவில் கடந்த 2019ஆம் ஆண்டு ஐ.எஸ். பயங்கரவாதிகளின் ஆதிக்கம் ஒடுக்கப்பட்டு, அவர்களின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகள் மீட்கப்பட்ட போதிலும் அண்மைக்காலமாக தெற்கு மற்றும் மத்திய பகுதிகளில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் தொடர்ந்து இதுபோன்ற தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

# ஆண்டின் சிறந்த அணிகளில் இலங்கையின் மூவருக்கு இடம்

பிரபல கிரிக்கெட் விளையாட்டு இணைய தளங்களில் ஒன்றான ஈ.எஸ்.பி.என். கிரிக்இன்போ நிறுவனமானது கடந்த ஆண்டில் சிறப்பாக செயற்பட்ட வீரர்களை வைத்து ஆண்டின் சிறந்த ஒருநாள் இருபதுக்கு 20 மற்றும் டெஸ்ட் அணிகளை உருவாக்கியுள்ளது.

அந்தவகையில் 11 பேர் கொண்ட டெஸ்ட் அணியின் தலைவராக இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோ ரூட் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். டெஸ்ட் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக இலங்கை டெஸ்ட் அணியின் தலைவர் திமுத் கருணாரத்ன, இந்திய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ரோஹிட் சர்மா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

2021ஆம் ஆண்டின் சிறந்த ஒருநாள் அணியின் தலைவராக பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அஸாம் பெயரிடப்பட்டுள்ளார். இதில் இலங்கை அணியின் சகலதுறை வீரரான வனிந்து ஹஸரங்க மற்றும் வேகப்பந்து வீச்சாளரான துஷ்மந்த சமீர ஆகிய இருவருக்கு ஆண்டின் சிறந்த ஒருநாள் அணியில் இடம் கிடைத்துள்ளது. சகலதுறை வீரர் வனிந்து ஹஸரங்க 12 விக்கெட்டுகளை வீழ்த்தியதுடன், 306 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இறுதியாக சிறந்த இருபதுக்கு 20 அணியின் பட்டியலில் ஒருநாள் அணியில் இடம்பெற்றுள்ள பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அஸாம்தான் இருபதுக்கு 20 அணியின் தலைவராகவும் பெயரிடப்பட்டுள்ளார். குறித்த இருபதுக்கு 20 அணியில் இலங்கை அணியின் சகலதுறை வீரரான - இருபதுக்கு 20 உலகின் முதல் நிலை பந்துவீச்சாளரான வனிந்து ஹஸரங்க இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த மூன்று அணிகளில் ஒன்றிலும் இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான விராட் கோஹ்லி இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவர் கடந்த ஆண்டில் பெரிதாக பிரகாசிக்கவில்லை என்பதாலாகும்.













# நான்கு ஆண்டுகள் தடைக்குள்ளாகும் தடகள வீராங்கனை

ஊக்கமருந்து சோதனையில் சிக்கிய இந்திய தடகள வீராங்கனை தரன்ஜீத் கௌருக்கு நான்கு ஆண்டுகள் தடை விதிக்கப்படவுள்ளது.

டில்லியைச் சேர்ந்த தடகள வீராங்கனை தரன்ஜீத் கௌர் மல்யுத்த வீரர் சுஷில்குமாரின் அகடமியில் பயின்றவர். கடந்த ஆண்டு செப்டெம்பரில் நடந்த தேசிய தடகள சம்பியன்ஷிப்பில் 100, 200 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வென்றார். மேலும் 23 வயதுக்குட்பட்டோருக்கான ஓட்டத்தில் அதிவேக வீராங்கனை என்ற பெருமை பெற்றார்.

தேசிய தடகள சம்பியன்ஷிப்பில் 100 மீ. ஓட்டத்தில் தங்கம், 200 மீ. ஓட்டத்தில் வெள்ளி கைப்பற்றினார். மேலும் பெடரேஷன் கிண்ணத் தொடரிலும் 100, 200 மீ. ஓட்டத்தில் தங்கப் பதக்கத்தை வசப்படுத்தினார். அடுத்து பரிஸ் ஒலிம்பிக் செல்லக் காத்திருந்தார்.

இதனிடையே கடந்த செப்டெம்பரில் நடந்த ஊக்கமருந்து சோதனையில், தடைசெய்யப்பட்ட மருந்து பயன்படுத்தியமை தெரியவந்தது. இதுகுறித்து தேசிய ஊக்கமருந்து தடுப்பு மையம் விசாரிக்கவுள்ளது. இதில் தரன்ஜீத் தவறு செய்தது நிரூபணமானால், 4 ஆண்டுகள் தடை விதிக்கப்படும்.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com



# "ப்ரேட்டை ஆடவைக்காதது அவுஸ்திரேலியாவுக்கே வியப்பாகத்தான் இருந்தது" – ஸ்டீவ் ஸ்மித்

வரலாற்றுச் சிறப்புமிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்றுவரும் நிலையில், முதல் 3 போட்டிகள் முடிவில் ஆஸி. அணி மூன்று போட்டிகளிலும் வெற்றிபெற்று தொடரை கைப்பற்றியுள்ளது. அவுஸ்திரேலிய அணிக்கு நேர்மாறாக துடுப்பாட்டம், பந்துவீச்சு என அனைத்து விதத்திலும் படுமோசமாக சொதப்பி படுதோல்விகளை அடைந்தது இங்கிலாந்து அணி. ஜோ ரூட்டின் தலைமையும் மோசமாக இருந்தது.

அணியினரை ஒன்றுதிரட்டி அவர்களிடமிருந்து தான் விரும்பும் சிறப்பான ஆட்டத்தை வெளிக்கொண்டுவர அணித்தலைவர் ஜோ ரூட்டால் முடியவில்லை. நடப்பு ஆஷஸ் தொடரில் இங்கிலாந்து அணி படுமோசமாக ஆடிவருகிறது. இங்கிலாந்து அணியின் ஆடும் லெவன் காம்பினேஷனே சரியில்லை என்ற விமர்சனமும் உள்ளது.

இந்நிலையில், இங்கிலாந்து அணி குறித்து பேசியுள்ள ஆஸி. அணியின் உப தலைவர் ஸ்டீவ் ஸ்மித், "ஸ்டூவர்ட் ப்ரேட்டை பிரிஸ்பேன் மற்றும் மெல்போர்ன் டெஸ்ட்டில் ஆடவைக்காதது எங்களுக்கே (அவுஸ்திரேலிய அணி) வியப்பாகத்தான் இருந்தது. அந்த 2 ஆடுகளங்களுமே அவருக்கு பொருத்தமாக இருந்திருக்கும். அடிலெய்டில் ப்ரோட் நன்றாக பந்துவீசினார். அவர் எப்போதுமே எனக்கு கடும் போட்டியாளராக இருந்திருக்கிறார். என்னை பலமுறை அவுட்டாக்கியும் இருக்கிறார். நானும் அவர் பவுலிங்கில் ஸ்கோர் செய்திருக்கிறேன். எனக்கும் பிராடுக்கும் இடையே நல்ல போட்டி இருந்திருக்கிறது. அவரை ஆடவைக்காதது எனக்கு வியப்புதான்" என்று ஸ்மித் கூறியுள்ளார்.





# 50 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்த ஒலிவியர்

குறைந்த பந்துகளில் 50 டெஸ்ட் விக்கெட்டுகள் வீழ்த்திய இரண்டாவது வீரர் என்கிற பெருமையை தென்னாபிரிக்க வீரர் டுவனி ஒலிவியர் பெற்றுள்ளார்.

இந்திய அணி தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட், 3 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் விளையாடுகிறது. செஞ்சூரியனில் நடைபெற்ற முதல் டெஸ்டில் இந்திய அணி 113 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று டெஸ்ட் தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது.

இரண்டாவது டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமானது. டெஸ்டின் முதல் நாளில் டுவனி ஒலிவியரின் அடுத்தடுத்த பந்துகளில் புஜாராவும், ரஹானேவும் ஆட்டமிழந்தார்கள். இதையடுத்து 11ஆவது டெஸ்டில் 50 விக்கெட்டுகளைப் பூர்த்தி செய்துள்ளார் டுவனி ஒலிவியர்.

குறைந்த டெஸ்ட்களில் விரைவாக 50 விக்கெட்டுகளை எடுத்த வீரர்களின் பட்டியலில் அவுஸ்திரேலியாவின் டர்னர் முதலிடத்தில் உள்ளார். 1888ஆம் ஆண்டு தனது 6ஆவது டெஸ்டிலேயே இந்த இலக்கை அவர் அடைந்தார். தென்னாபிரிக்காவின் வெர்னான் பிலாண்டர் 7 டெஸ்ட்களில் 50 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

குறைந்த பந்துகளில் விரைவாக 50 விக்கெட்டுகள் எடுத்த வீரர்களின் பட்டியலில் தென்னாபிரிக்காவின் வெர்னான் பிலாண்டர் முதலிடத்தில் உள்ளார். 1240 பந்துகளில் அவர் இச்சாதனையைச் செய்தார். 2ஆவது இடத்தை 29 வயது டுவனி ஒலிவியர் பெற்றுள்ளார். இவர் 1486 பந்துகளில் இந்த சாதனையை நிகழ்த்தினார்.

குறைந்த பந்துகளில் 50 டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர்கள்

1240 - வெர்னான் பிலாண்டர்
1486 – டுவனி ஆலிவியர்
1512 - ஜொனி பிரிக்ஸ்

# தெற்காசிய நகர்வல சம்பியன்ஷிப் தொடரில் 12 இலங்கை வீர, வீராங்கனைகள்

இலங்கை, இந்தியா உள்ளிட்ட 6 தெற்காசிய நாடுகள் பங்குபற்றும் அங்குரார்ப்பண தெற்காசிய நகர்வல சம்பியன்ஷிப் தொடர் எதிர்வரும் 15ஆம் திகதி இந்தியாவின் நாகலாந்து மாநிலத்திலுள்ள கொஹீமாவில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், இந்தப் போட்டித் தொடரை இலக்காகக்கொண்டு இலங்கை மெய்வல்லுனர் சங்கத்தினால் கடந்த மாதம் தியகமவில் விசேட தகுதிகாண் போட்டியொன்று நடத்தப்பட்டது. ஆண், பெண் இருபாலாருக்குமாக நான்கு வயதுப் பிரிவுகளின் கீழ் நடத்தப்பட்ட இந்தப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக்கொண்ட வீர, வீராங்கனைகளை தெற்காசிய நகர்வல ஓட்ட சம்பியன்ஷிப் தொடரில் பங்குபற்றச்செய்ய இலங்கை மெய்வல்லுனர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.




இதன்படி, 4 பிரிவுகளில் மொத்தமாக 12 வீர, வீராங்கனைகள் தெற்காசிய நகர்வல சம்பியன்ஷிப் தொடருக்காக தெரிவாகியுள்ளனர். பெண்கள் சிரேஷ்ட பிரிவில் மதுமாலி பெரேரா (இலங்கை கடற்படை), எச்.எம்.டபிள்யு ஹேரத் (இலங்கை இராணுவம்), எம். நிமேஷா (இலங்கை இராணுவம்) ஆகியோரும், ஆண்கள் சிரேஷ்ட பிரிவில் ஆர்.எம்.எஸ்.புஷ்பகுமார (இலங்கை இராணுவம்), எஸ்.ஆர்.டபிள்யு விஜேவிக்ரம (இலங்கை இராணுவம்), கே. சண்முகேஸ்வரன் (இலங்கை இராணுவம்) ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

பெண்கள் 6 கிலோமீற்றர் பிரிவில் எம்.கசுனி, ஓ.என்.பொன்சேகா, ஹஷிணி லக்ஷாணி ஆகியோரும், ஆண்கள் 8 கிலோமீற்றர் பிரிவில் கே.எம்.ஜாலிய சகீத் துலக்ஷன மதுஷான், அஞ்செலோ பெனடிக்ட், ஏ.பி.சி. மதுபாஷன் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

# அணித்தலைவரான முதல் போட்டியிலேயே சாதனை செய்த ராகுல்



முதல் முறையாக அணித்தலைவராக செயற்பட்டுவரும் கே.எல். ராகுல் டெஸ்ட் கிரிக்கெட்டில் ஒரு தனித்துவமான சாதனையை முன்னாள் அணித்தலைவர் மொஹமட் அஸாருடீனுடன் பகிர்ந்துகொண்டார்.

வெள்ளைப் பந்து கிரிக்கெட்டில் (ஒருநாள், இருபதுக்கு 20) அணித்தலைவர் ஆகாமல் நேரடியாக டெஸ்ட் கிரிக்கெட்டில் அணித்தலைவராக மாறிய வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார் கே.எல்.ராகுல். இவருக்கு முன்னதாக 1990ஆம் ஆண்டு மொஹமட் அஸாருடீன் நேரடியாக டெஸ்ட் அணிக்கு அணித்தலைவரானார். அந்த சாதனையை தற்போது 31 ஆண்டுகள் கழித்து ராகுல் செய்துள்ளார்.

ஒருநாள் போட்டிகளில் சிறப்பாக செயற்படுபவர்களையே டெஸ்ட் அணிக்கு அணித்தலைவராக நியமிப்பார்கள். ஆனால், ராகுல் நேரடியாக டெஸ்ட் அணிக்கு தலைவராகும் வாய்ப்பை பெற்றுள்ளதால் இந்த சாதனை நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தியா - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டெஸ்ட் போட்டி ஜோகனஸ்பர்க் மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டியில் இந்திய அணியின் தலைவர் விராட் கோஹ்லி முதுகுவலி காரணமாக விளையாட முடியாமல் போனதால், உப தலைவரான ராகுல் முதல்முறையாக இந்திய டெஸ்ட் அணிக்கு தலைமை பொறுப்பினை ஏற்று விளையாடி வருகிறார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7